ஆகஸ்ட் 23 – 29, 2004 | 24 பக்கங்கள் | 16.00

August 23 - 29, 2004

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

வார மலர்



இன்னும் எத்தனை நாட்களுக்கு அமைதி?

## அதிர்ச்சி தரும் அச்சுறுத்தல்கள்!

## உலகை பரவசத்தில் ஆழ்த்திய ஆரம்பம்! ஒலிம்பிக் கோலாகலம் தொடர்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதவாதத்தை நசுக்கும் முயற்சியில் இந்திய மத்திய அரசு!

உலகின் பலநாடுகளில் அந்தந்த நாட்டின் பெரும்பான்மை இனங்கள் தேவை இல்லாமல் சிறுபான்மை இனங்களை நசுக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதும், சிறுபான்மை இனங்கள் வேறுவழியின்றி ஆயுதமேந்துவதும், பிரிவினைவாதம் வருவதும் சகஜமாகிவிட்டது.

பிரிவினைவாதம், ஆயுத யுத்தங்கள் வலுப்பெற்றுத் தீர்க்கமான பிரச்சினையாக உருப்பெற்ற பின்னர் தான் பெரும்பான்மை இனங்கள் உணர்ந்து கொள்கின்றன. சில பெரும்பான்மை இனங்கள் காலம் கடந்தும் இந்த உண்மையை உணருவதில்லை. இலங்கையின் சிங்கள இனமே இதற்குச் சிறந்த சான்று.

1956 இல் தனிச் சிங்களச் சட்டமூலம் கொண்டுவரப்பட்ட போது பிரபாகரன் என்ற மனிதனுக்கு இரண்டுவயதுகூட ஆகவில்லை. அநியாயமாக தமிழர்கள் ஒடுக்கப்பட்டு



சோனியா

அதன் மூலமான ஆயுதப்போராட்ட யுத்தத்திலிருந்து மீளமுடியாமல் இன்று சிங்கள இனம் தத்தளித்துத் தடுமாறுகிறது.

இருந்தும் சிங்கள இனவாதிகள் இன்னும் உண்மையை உணரவில்லை. அதன் வெளிப்பாடே மதமாற்றத்தடைச்சட்டம். இதன் மூலம் சிங்கள இனம் இன்று இரண்டாகப் பிரிந்துபோய் உள்ளது. தங்களுக்குள் வாதப்பிரதிவாதம் பண்ணிவந்த சிறு சிறு கிறிஸ்தவ குழுக்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இச் சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கின்றன. அதுமாத்திரமல்ல தமிழ் கிறிஸ்தவர்களும், சிங்கள கிறிஸ்தவர்களும் ஒன்றிணையும் சந்தர்ப்பமும் வந்துள்ளது.

முன்பு சிங்கள இனம் என்பது ஒன்றே ஒன்றுதான். இன்று சிங்கள இனம் என்பது இரண்டாகப் பிளந்துள்ளது. பௌத்த சிங்களவர், கிறிஸ்தவ சிங்களவர் என்பதே அப்பிரிவினை.

இத்தகைய மதப்பிரிவினை ஆபத்து சுதந்திர இந்தியாவில் பல்வேறு வடிவங்களில், பல்வேறு காலங்களில் இருந்து வந்தபோதும், அதனை வெற்றிகரமாக அடக்குவதில் இந்தியாவின் அறிவுஜீவிகளும், பத்திரிகையாளர்களும், காந்தியவாதிகளும், மனித உரிமை அமைப்புக்களும் பாரிய பங்களிப்புச் செய்துள்ளன.

ஊழலில் மிதந்த காங்கிரஸ் கட்சி; 8 ஆண்டுகளாக அரசுப் பதவிக்கே வரமுடியாத கட்சி, இன்று எதிர்பாராத வெற்றி பெற்று அரசு அமைத்ததற்கும் இந்த நடுநிலையாளர்களே காரணம்.

ஏனெனில் பாரதீய ஜனதா என்ற மதவாதக் கட்சி மதரீதியில் நாட்டைப் பிளந்து அப்பாவி இந்திய முஸ்லிம்களை யுத்தத்துக்கும், ஆயுதப் போராட்டத்துக்கும் தள்ளும் அபாயத்தை இவர்கள் தெளிவாக உணர்ந்தனர்.

2002 இல் குஜராத்தில் ஆளும் மாநில பாரதீய ஜனதா அரசு அம்மாநில முஸ்லிம்கள் மீது திட்டமிட்டு வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது. இந்த நடுநிலையாளர்களை காங்கிரஸ் கட்சியைத் தேடி ஓடும்படி செய்துவிட்டது.

ஊழலைப் பார்த்தால் பாரதீய ஜனதாவைவிட காங்கிரஸே மோசமான ஊழல் பெருச்சாளிகளின் கட்சிஆகும். இருந்தும் மதவாதம் நாட்டை சிவில் யுத்தத்துக்கு கொண்டு செல்வது ஊழலைவிட மோசமானது என்பது தெளிவாக இவர்களால் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

1980 களில் சீக்கிய மதத்தீவிரவாதம் பாகிஸ்தான் ஆதரவுடன் இந்தியாவை விழுங்கப் பார்த்தது முதலில் அதனை ஆயுத ரீதியாக அடக்குவதில் அன்னை இந்திரா வெற்றி கண்டார். அதற்கு விலையாக ஒரு சீக்கிய மெய்ப்பாதுகாவலனின் துப்பாக்கி வேட்டுக்கு தனது உயிரைத்தந்தார்.

ராஜீவ் காந்தி – லொங்கோவாள் என்ற சீக்கிய தலைவருடன் ஒப்பந்தம் செய்து, சீக்கியர்களின் உரிமைகள்கிடைப்பதை உறுதி செய்தார். இன்று சீக்கிய ஆயுதப் போராட்டம் என்ற ஒன்று இல்லாமலே போய்விட்டது. சீக்கியர்கள் தாங்கள் தாய்நாட்டுப் பற்றுள்ள இந்தியர்களாக தொடர்கின்றனர். இந்துக்களான இந்தியர்களுக்கு கிடைக்கும் சகல உரிமைகளும் அவர்களுக்கும் கிடைத்து வருகின்றன. இலங்கைத் தமிழர் விவகாரம் உட்பட பல விடயங்களில் மோசமாக தவறிழைத்த ராஜீவ் காந்தி, தனது ஆட்சிக்காலத்தில் சாதித்த மிகச் சில சாதனைகளில் சீக்கியர்களை மீளவும் இந்திய தேசிய நீரோட்டத்தில் இணையச்செய்தது மிக முக்கியமானது ஆகும்.

இப்படிப்பட்ட பின்னணியுள்ள இந்திய தேசத்தின் மதச்சார்பின்மையை சவாலுக்கு உள்ளாக்கிய பாரதீய ஜனதா என்ற கட்சி அகற்றப்பட வேண்டியதன் முக்கியத்துவம் வெகுவாக உணரப்பட்டதாலேயே, அக்கட்சியை கடந்த தேர்தலில் படுதோல்வி அடையச் செய்யும் வியூகம் இந்தியாவின் நடுநிலைவாதிகளால் வெற்றிகரமாக வகுக்கப்பட்டது. இதில் நடுநிலையாளர்களை விட முக்கிய பங்காற்றியவர்கள் இந்தியாவின் கம்யூனிஸ்ட்டுகள் ஆவர். உலகிலேயே தேர்தலில் ஜனநாயகரீதியாக தெரிவு செய்யப்பட்ட முதல் கம்யூனிஸ்ட்அரசு இந்தியாவிலேயே அமைந்தது; 1957 பெருந்தலைவர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத் தலைமையில் கம்யூனிஸ்ட்கள் கேரள மாநில சட்டசபைத் தேர்தலில் வென்று அரசமைத்தனர்.

இதிலிருந்து இந்திய கம்யூனிஸ்ட்களின் அரசியல் நேர்மையும், மதசார்பின்மையும், சித்தாந்தத் தெளிவும் உலகறியச் செய்யப்பட்டது. மேற்குவங்கம் என்ற மாநிலத்தில் தொடர்ந்து 27 ஆண்டுகள் கம்யூனிஸ் கட்சிகள் தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி நடத்துகின்றது.

இந்த கம்யூனிஸ்டுகள், நடுநிலையாளர் யாவரும் ஒன்றிணைந்து பாரதீய ஜனதாவை வீழ்த்தக் காரணமாக அமைந்தது குஜராத் வன்முறைகளே. இதனை முன்னாள் பிரதமர் வாஜ்பாயும்தேர்தலில் தோற்ற பின்புசமீபத்தில் பகிரங்கமாகஒப்புக்கொண்டார். சாதாரண இந்தியனைப் போன்றே இந்திய முஸ்லிமும் அபரிமிதமான தேசப்பற்றுக் கொண்டவன். அணுகுண்டுப் பரிசோதனையை இந்தியா, பாகிஸ்தான் இரண்டு நாடுகளிலுமே நடத்தியவர்கள் முஸ்லிம் விஞ்ஞானிகள் ஆவர். இந்தியாவின் அப்துல் கலாமும், பாகிஸ்தானின் அப்துல் காதிர் கானுமே அவர்கள்.

ஆனால் பெரும்பான்மை முஸ்லிம்களைக் கொண்ட பாகிஸ்தானின் விஞ்ஞானி அப்துல்கான் அணுகுண்டு ரகசியங்களை வெளிநாடுகளுக்கு விற்றுள்ளது கண்டுபிடிக்கப்பட்டு வெட்கித்தலைகுனிய நேரிட்டுள்ளது. மறுபுறம் பாரதிய ஜனதா அரசால் ஒடுக்கப்பட்ட இந்திய முஸ்லிம் சிறுபான்மை இனத்தவரான கலாம் அவ்வாறு பணத்துக்குப்பலியாகாமல் இன்று தேசத்தின் ஜனாதிபதியாக உயர்ந்துள்ளார். இதிலிருந்து தெரிவது என்ன? இந்திய முஸ்லிம்களில் தேசப்பற்றின் ஆழத்திற்கு கலாம் ஒரு சிறுஎடுத்துக் காட்டு.

அத்தகைய அப்பாவி முஸ்லிம்களை ஆயுதம் ஏந்த வைக்கும் பல அட்டூழியங்களை பி.ஜே.பி. அரங்கேற்றியது. அவற்றில் முக்கியமானது குஜராத் படுகொலைகள். இதன் போது குஜராத்தில் மத்திய மாநில ஆட்சிகள்



அப்துல் கலாம்

பி.ஜே.பி. வசமிருந்ததால் எண்ணப்படி நடந்தனர். இப்போது மத்திய ஆட்சி காங்கிரஸ் – கம்யூனிஸ்ட் கூட்டணியிடம். தவிரவும் இந்திய நீதித்துறை பி.ஜே.பி. ஆட்சியிலிருந்த போது பல்வேறு குஜராத் கலவர வழக்குகளை மீளவும் நடத்த உத்தரவிட்டிருந்தது. வழக்குகளை நியாயமற்ற முறையில் அவசரப்பட்டு குஜராத் அரசு நடத்தி குற்றவாளிகளைத் தப்பிக்க விட்டதாக உச்சநீதிமன்றம் காட்டமாக கண்டனம் செய்தது. பல வழக்குகளை குஜராத் மாநிலத்துக்கு வெளியே நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மேலும் பல வழக்குகளில், பொலிஸ்கலவரத்தின்போது நடந்து கொண்ட விதம் பற்றி நீதிமன்றம் ஆராய்ந்து மாநில அரசையும், பொலிஸையும் கண்டித்து விவரங்களை தருமாறு உத்தரவிட்டுள்ளது. கொலை வெறிபிடித்த மதவெறியர் நரேந்திரமோடி கையைப் பிசைய நேரிட்டுள்ளது.

இதுதவிர பி.ஜே.பி. ஆட்சியில் பள்ளிப் பாடல் புத்தகங்களில் இந்துமதத்தை முக்கியப்படுத்தி, மதப்பிரச்சினையைத் தூண்டும் வகையில் பாடங்கள் இணைக்கப்பட்டன.

இந்தப் பாடப் புத்தகங்களை வாபஸ் பெற்று முன்பிருந்த புத்தகங்களையே வழங்க அல்லது மதச்சர்ச்சைகள், பக்கசார்புகள் இன்றி புத்தகங்களை வழங்க, மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவது நடுநிலையாளரின் பாராட்டைப் பெற்றுள்ளது. இந்த காங்கிரஸ் அரசை பி.ஜே.பியை வீழ்த்தி ஆட்சிக்கு கொண்டுவந்ததற்கான நடுநிலையாளரின் நோக்கம் ஓரளவு நிறைவேறத் தொடங்கியுள்ளது.

-எஸ். சுரேந்திரஜித்-

# திருமலை முகாம்கள் குற்றச்சாட்டும் பேரினவாதிகளின் உள்நோக்கமும்

திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் புதிய முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் துறை முகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று தென்னிலங்கை அரசியல் வாதிகள் மீண்டும் சீறத் தொடங்கி விட்டனர்.

திருகோணமலையில் விடுதலைப்புலிகளின் 13 புதிய முகாம்கள் உள்ளன என்ற சர்ச்சை கடந்த வருட இறுதிப்பகுதியில் தோற்றுவிக்கப்பட்டது.

இதில் குரங்கு பாய்ஞ்சான் முகாம்பற்றியும் பெரிய எடுப்பில் பேசப்பட்டது. இறுதியில்எல்லாம்புஷ்வாணமாகிப்போயிருந்தன.

திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் செய்த விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், அப்போதைய மாவட்டக்கட்டளைத் தளபதி கேணல்பதுமன், மாவட்ட அரசியல் பொறுப்பாளல் சி.திலக் ஆகியோரும் புதிய முகாம்கள் குறித்து தமது மறுப்பைத் தெளிவாக வெளிப்படுத்தி இருந்தனர். போதாக் குறையாக மூவினத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களையும் அழைத்து மேலும் தெளிவுபடுத்தியிருந்தனர். இதன் உண்மைகள் புரியப்பட்டதோடு, அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. விடுதலைப்புலிகளின் காவல் நிலைகளையும், அரசியல் பணிமனைகளையும் புதிய முகாம்கள் என்று கூறினால் எவரும் எதுவும் செய்ய முடியாது என்றும் கூறப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்பு, விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அரச தரப்பு இராணுவத்தரப்பு, புலனாய்வுப்பிரிவு என்பனவற்றால் நன்கு அவதானிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் புலிகளால் எப்படி முகாம்கள் அமைக்க முடியும்? விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அவர்களது வழமையான நடவடிக்கைகள் வழமைபோன்று நடந்தவண்ணமுள்ளன.

கடந்த வருடம் புலிகளின் புதிய முகாம்கள் என்ற புரளியைக் கிளப்பியதன் பின்னணியில் ஆட்சி கவிழ்ப்பு, தேர்தல்பிரகடனம், வாக்குவேட்டை, ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கம் என்பன இருந்தன. இப்போது பாதுகாப்பு அமைச்சு ஆளும் தரப்பின் வசம் இருப்பதால், ஜே.வி.பியும் சமாதான விரோதக் கும்பல்களும் சில வதந்திகளைப் பரப்பி வருகின்றன. திருகோணமலை தமிழர்வசம் செல்லக்கூடாது என்பதும், மீண்டும் யுத்தத்துக்கு இட்டுச் செல்லும் நோக்கம் இருப்பதும் இதில் பொதிந்துள்ளன.

திருகோணமலைத் துறைமுகம் புலிகளின் முற்றுகைக்குள்ளாக்கப்பட்டிருப்பதாக அண்மையில் நோர்வே அனுசரணையாளர்களிடம் ஸ்ரீலங்கா அரசால் முறைப்பாடு செய்யப்பட்டது. துறைமுகத்தைச் சூழவுள்ள தரைப் பிரதேசங்களிலேயே விடுதலைப் புலிகள் புதிய இராணுவ நிலைகளை அமைத்துள்ளனர் என்று கூறப்படுவது வேடிக்கையாக இருக்கிறது.

திருகோணமலைத் துறைமுகம் ஒரு புறம் முற்றாகக்கடலால் சூழபபட்டுள்ளது. மறுபுறம் தரை மார்க்கமாக மூன்று பாதைகள் உள்ளன. வெருகல் ஊடாகச் செல்லும் மட்டுநகர் ஏ 15 பாதை, அளஉளுவைச் சந்தியில் இருந்து கந்தளாய் ஊடாகதிருமலையை சென்றடையும் குறுக்குப் பாதை, இது இலங்கை இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளது. மற்றது திருமலை மட்டு நகர் நெடுஞ்சாலை வீதி (பிரதான வீதி). இதுவும் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. அவ்வாறே திருகோணமலை - ஆத்தி மோட்டை கரையோரப் பாதையும் இராணுவ பாதுகாப்பில் உள்ளது.

மேற்படி மூன்று பாதைகளிலும் தொடராக இராணுவ முகாம்கள் உள்ளன. இந்த நிலையில் தரைவழிப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் புதிய நிலைகளை அமைத்துள்ளனர் என்பது அப்பட்டமான பொய் என்பது புலனாகிறது.

திருகோணமலையில் புதிய முகாம்களோ, காவல் நிலையங்களோ, காவல் அரண்களோ அமைக்கவில்லை என விடுதலைப் புலிகள் முற்றாக மறுத்துள்ளனர். அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனிடம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இதனை தெளிவுபடுத்தியுள்ளார்.

திருகோணமலை மக்களுக்கும், கட்சிகளுக்கும் தெரியாத முகாம் விடயம், தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்கும், ஊடகங்களுக்கும் தெரிவது தான் ஆச்சரியமாக உள்ளது. இங்கு குட்டையைக் குழப்பி மீன் பிடிக்கச் சிலர் போட்ட திட்டம் அம்பலமாகின்றது.

சுருக்கமாகச் சொல்லப் போனால், திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் புதிய முகாம்கள் குறித்த சர்ச்சை பொய் என்பதும், திருமலை தமிழர் வசம் செல்வதைத் தடுக்கும் நோக்கம் இருப்பதும் விளங்குகின்றது.

மேலும் கண்காணிப்புக் குழு இதுபற்றி ஆராய்வதற்காக முனைந்துள்ளது. இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

உண்மைக்குப் புறம்பான கூற்றுக்கள் எந்த நியாயப்படுத்தலையும் கொண்டுவரப் போவதில்லை என்பதற்கு இது ஒரு உதாரணமாக அமையப் போகிறது.

-எஸ்.எஸ்.ஆர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# கவிதைப் புனல்

### வேலை

மதுக்கடையில்!
பட்டதாரிகள்
தள்ளாடிக்...
கொண்டிருக்கிறார்கள்...
வாழ்வில் கரைசேர!

**இ. பூர்ணலிங்கம், கொட்டகல.**

### பிரிவும் உறவும்...

தாயின் கருவறையில் இருக்கையில்
தொப்புள் கொடி அறுப்பில் ஒரு பிரிவு
பள்ளி நண்பர்களுடன் உலாவருகையில்
உயர் கல்வியினால் ஒரு பிரிவு
சகோதரப் பாசத்தில் தத்தளிக்கையில்
கலியாண வயது கடந்ததில் ஒரு பிரிவு
தாயோடு செல்லச் சேயாய் சஞ்சரிக்கையில்
கணவன் கரம் பற்றுவதினால் ஒரு பிரிவு
ஆதவன் உச்சியை அடைந்ததால்
ஆழிக்கு ஒரு பிரிவு
தேன் குடித்த வண்டு பறந்ததினால்
பூவுக்கு ஒரு பிரிவு
பிரிவு என்பது உறவுக்காகத்தான்...
தாயின் தொப்புள் கொடி அறுந்ததில் ஒரு பிரிவு
பாரில் எத்தனை உறவு
பள்ளி நண்பர்களின் பிரிவு
பல்கலைத் தோழர்களின் உறவு
சகோதரத்துவத்தில் ஒரு பிரிவு
புகுந்த வீடு என்னும் உறவு
தாய்ப் பாசத்தில் ஒரு பிரிவு
கணவனோடு ஓர் உறவு
மரணத்தில் ஒரு பிரிவு
மறுமையில் இறைவனுடன் உறவு
பிரிவும் உறவும் இரு சக்கரங்கள்
அவை சுழன்று கொண்டிருப்பதால்
சில சுகங்களும், பல ரணங்களும்

*அஸ்ரியா லாபிர், கொழும்பு – 14.*

### தொலைந்தவைகளில்...

செந்நிற மண்ணின்
புழுதிக் காற்று
நுரையீரல் துளைத்தாலும்
மண்ணின் மகிமை
மனதை இனிக்கும்!
பசுமைப் புரட்சியாய்
பச்சைவயல்கள்
இளமையுணர்வை
உசுப்பேற்றிவிடும்!
கிளையின் கனிகளால்
சுமையுடன் திணறி
வளைந்த இடையுடன்
முற்றத்து மாமரம்!
இளமை நாட்களின்
எனதூர் தடங்கள்
இன்னும் நினைவுகளில்
பசுமையாய்...!
இன்று, நிஜத்தின் நிறத்தில்
பூமியின்
தொலைந்துபோன
பசுமைப் பிரதேசங்களில்
இதுவும் ஒன்றாய்!

**தர்ஷனா.**

### நம்பிக்கை

எனக்கு
என் மீது நம்பிக்கை!
வானத்தில் என்னால்
பயிர் வளர்க்க முடியும்.
காற்றில் என்னால்
அறுவடை செய்யமுடியும்.
சூரியனை என்னால்
தொட்டுவிட முடியும்.
நிலவை என்னால்
பதக்கமாய் அணிய முடியும்.
விண்மீன்களை
என்னால்
மாலையாய் கட்டிவிட முடியும்.
பூமியை என்னால்
தூக்க முடியும்...
கனவுகள் அல்ல
நிஜமாய்
என்னால் செய்ய முடியும்
ஏனெனில்
என்மீது எனக்கு
நம்பிக்கை உண்டு
உங்களுக்கு...?

**ரீ. அஞ்சலோ. கல்முனை**

### கும்பகோணக்கோபுரம்

கனவுகள்
கருகிப் போக...
குழந்தைகள் – சீர்
குலைந்து போனார்கள்...!
மழலைக் கவிதைகள்...
எரிந்து போனதால் – எம்
மனங்கள் சரிந்து போனது...!
ஒன்றல்ல இரண்டல்ல
ஆயிரம்
அப்துல்கலாம்களை
அக்னி தின்றுவிட்டது...!
கும்பகோணக்
குழந்தைகள் கோவிலில்...!

**– எஸ். ஜெகன், நானாட்டான்.**

### காதல் தாகம்

காதல் புனிதம் என்று நினைத்தேன்
உன்னைக் காணும் வரை! – ஆனால்
காதல் காமத்தில் உறைவிடம் – என்று
கண்டுகொண்டேன் – நான்
உன்னைக் கண்டு பின்தான்

**சுபா. நல்லூர்.**

### ஹைக்கூ

**ஆடை**

அரை மனிதனின் குறை
தீர்த்த நிறைதான் ஆடை.

**சீதனம்**

உள்ளத்தைப் பார்த்து
பெண்ணெடு
இல்லத்தைப் பார்த்து அல்ல.

**கம்பிக் கூடு**

நவீன கால காகங்களுக்கு
விளங்கி விட்டதோ
இரும்பின் உறுதி.

**புகைத்தல்**

இதுவும் ஒரு
தற்கொலை முயற்சிதான்.

**எம். ஜே. அஜ்வரத், சீனக்குடா.**

### கண்டு பிடியுங்கள்

நான் சுயநலவாதி – நீங்கள்
பொதுநல வாதி.
இந்த நாட்டில் – என்
சுயநலத்தால்
கண்டுபிடியுங்கள்
சுயநலத்தையும்
பொதுநலத்தையும்.

நான் மடையன் – நீங்கள்
புத்திசாலி
இந்த நாட்டில் – என்
மடைமையினால்
கண்டுபிடியுங்கள்
மடையனையும்
புத்திசாலியையும்.

நான் உலோபி – நீங்கள்
கொடைவள்ளல்
இந்த நாட்டில் – என்
உலோபத்தனத்தால்
கண்டுபிடியுங்கள்
உலோபியையும்
வள்ளலையும்.

நான் வன்முறையாளன் – நீங்கள்
மென்முறையாளர்
இந்த நாட்டில் – என்
வன்முறையால்
கண்டுபிடியுங்கள்
வன்முறையாளனையும்
மென்முறையாளனையும்.

நான் நாஸ்தீகன் – நீங்கள்
ஆஸ்தீகன்
இந்த நாட்டில் – என்
நாஸ்தீகத்தால்
கண்டுபிடியுங்கள்
நாஸ்தீகனையும்
ஆஸ்தீகனையும்.

நான் இனவாதி – நீங்கள்
மதவாதி
இந்த நாட்டில் – என்
இனவாதத்தால்
கண்டுபிடியுங்கள்
இனவாதியையும்
மதவாதியையும்.

நான் யுத்தம் விரும்பி – நீங்கள்
சமாதானம் விரும்பி
இந்த நாட்டில் – என்
யுத்தத்தினால்
கண்டுபிடியுங்கள்
யுத்த விரும்பியையும்
சமாதான விரும்பியையும்.

**பாபு, கல்முனை.**

### பிரிவு

இமைகள் இரண்டும்
பிரியாமல்
ஒரு பார்வை இல்லை.
இரவு ஒன்று பிரியாமல்
ஒளிகொண்ட பகல் இல்லை.
கரைகள் இரண்டும் பிரியாமல்
ஓடும் நதியில்லை.
கைகள் இரண்டும் பிரியாமல்
ஒரு செயல் இல்லை.
உதடு இரண்டும் பிரியாமல்
ஒரு சொல் இல்லை.
இதயம் இரண்டும் பிரியாமல்
ஒரு காதல் இல்லையா?

**றி. நிலந்தன், ஆனைக்கோட்டை.**

### நாட்டு நடப்பு

*இனவாதிகள்
சமாதானம் பேசினால்
இனிக் கிடைக்குமா
நிம்மதி.

*விரும்பிப் பேசுவோரை
வம்புக்கிழுப்பர்
வராதவர்க்கு
வெற்றிலை வைப்பர்

*கூட்டுக்கட்சிக்குள்
மோதிக் கொண்டு
மாற்றுக் கட்சிக்குள்
ஊழல் என்பர்.

*பாதுகாப்பு நிலைமை
பலவீனம் என்று
இராணுவத்திற்கு
ஆயுதம் சேர்ப்பர்.

*ஜனநாயகப் பயங்கரவாதிகளின்
இனவாதப் போக்கால்
சமாதானப் பறவைகள்
திசைமாறிப் பறக்கின்றன.

**த. சி. ரஞ்சன், நாவலப்பிட்டி.**

### ப்ளீஸ் அடம்பிடியாதே!

சிட்டான மனசு - உன்
பட்டாம் பூச்சிக்கூண்டில்
தங்கத் தவிக்குதடி...
வங்கிக் கடனெடுத்தேனும்
மீண்டும் சீர்செய்வேன்
கூண்டில் சேதமெனில்...!
'திப்பியமாய்' திரண்டவளே
தயவுடன் - என்
மனுவை ஏற்றுக்கொள்...
இனியும் இயலாதடி
'பசப்பு கவிதை' பேசி
என் மனதை ஏமாற்ற!

**சி. அருண், கிரானிலிருந்து.**

### சிந்தனையில் சிறகடிக்கும் அன்பு ஆசான்

அன்பென்னும் உரம்
கொண்டு
பாடசாலை மண்ணை
பதமாக்கி
மாணவரையெல்லாம்
நற்பயிராக்கி
இதயத்தில் ஊற்றுகின்ற
அன்பு வெள்ளத்தில் நீர்
ஊற்றி
உறவோடு வளர்த்திட்ட
அன்பின் தெய்வம் என்
பாசமிகு அதிபரே!
வசந்தி என்ற பெயரோடு
எவருக்கும் வசந்தமான
தமிழ் மொழியின்
தாயே!
அன்பின் உறவுகள்
சிலவற்றை இழந்தாலும்
நம்பிக்கை நீர் ஊற்றை
வற்றவிடாமல்
எழுந்த ஜோதியாய்
திகழும்
என் மதிப்பின்
உறைவிடமே!
துணிவோடு நின்று
சாதனைகள் சாதித்து
பாடசாலை மானம்
காத்தநீதியன்
பிறப்பிடமே!
இவ்வருட உறவோடு
நான் போனாலும்
என் உயிர் என்றும்
உங்கள்
கால்களை வணங்கும்!

**பிருந்தா சுதாகரன், மட்டக்களப்பு.**

### மறக்கமுடியவில்லை

உன்னோடு நான் பேசிக்
கொண்டிருக்கின்றேன்
உனக்குக் கேட்காமல்.
உன் நினைவினில்
வாழ்கின்றேன்
உனக்குத் தெரியாமல்.
நீண்டதடி உன் நினைப்பு
உன்னைப்
பார்க்கின்றேன் - கனவில்
கண்டதில்லை
நெடுநாளாய்.
உனைக் கண்டநாளாய்
வாட்டுதடி ஏக்கம்.
உன்னால் நான்
வாடுகின்றேன்
நெருடலாய் உன் விம்பம்
- என்
மனதில் பதிந்தது
விரைவினில் அதனை -
அழிக்கவும்
தெரியவில்லை
மறக்கவும்
முடியவில்லை.

**ச. தயா, வவுனியா.**

### எனக்காக

நான் காத்திருந்த போது
நீ கதவு திறக்கவில்லை.
நீ கதவு திறந்த போது - என்னால்
காத்து நிற்க முடியவில்லை -
ஏனெனில்
எனக்கென்றொரு சிறகு
அதில் எனக்கென்றொரு இறகு!
எனக்கென்றொரு பாதை
அதில் எனக்கென்றொரு தடயம்!
எனக்கென்றொரு இலட்சியம்
அதில் எனக்கென்றொரு இலக்கு!
எல்லாம் எனக்காக என்று -நான்
வாழ்கிறேன் எனக்காக இன்று.

**கி. கவிதா, அச்சுவேலி.**

### சூழ்நிலை

பணத்திற்காக
பண்புகள் மறந்து
பாவங்கள் புரியும்
பாதகர் நீங்கள்!
மண்ணின் –
மக்களின்
விடுதலைக்காக
இறக்கவும் துணிந்த
இலட்சியவாதிகள் நாங்கள்

**கு. தவசீலன், விசுவமடு.**

### சூழ்நிலை

நினைவுகளை சொல்ல
நெஞ்சம் நினைக்கின்றது
நினைப்பதை சொல்ல
நேரம் தடுக்கின்றது

**கே. விவாகரன், முறக்கொட்டான்சேனை**

### இறப்பு

இறக்கப்போகிறேனா – அல்லது
இறந்துவிட்டேனா – இல்லை
இறக்கப்போகிறேன் போல
சுற்றிவர உறவுகளும்
உறுதிக்கட்டுக்களும்.

**இ. யாழவன், சபரகமுவப் பல்கலைக்கழகம்.**

### முடிவு

பிரிய நேரம் கேட்கிறது
பிரிய அன்பு பெற்றிடாத
பிச்சை வாங்கும் உள்ளமிது.
'உதவி' என்று கேட்டபோது
உதாசீனம் செய்தல் எண்ணி
உயிர் பிரிய வேண்டுகிறது.
மரத்த உயிர் அணுக்களுடன்
மாசுறாத வகை நின்று
மரணிக்க விரும்புகிறது
கொடுமைகள் பல கண்டு
கொதித்த மனத்துடன் அதை
கொல்லவும் நினக்கிறது.
இத்தனைக்கும் ஓர் அளவு
இறைவன்தான் கொடுக்க வேண்டும்.
இறைமுடிவும் என்னவோ...?

**செ. சபி, மீசாலை**

நினைவுகளே - நிழல்களாக
என் இதயத்தை வென்ற
இதயத் தூரிகையே!
இலைதளிர் காலத்தின்
இனிமையான
நினைவுகளை
எப்போதும் மீட்டிப்பார்க்க
ஆசைப்படுகிறேன்
முடியவில்லை. ஆனால்
நிலாவெளியில் தூரிகை
தீட்டிய
உன் உருவம் மட்டும்
என் இதயச் சுவர்களில்
எப்போதும் நிழலாக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதையே நினை



முருகன் மிகவும் குழப்படிகார னாக இருந்தான். ஆசிரியர் அன்புடன் எடுத்துரைத்த அறிவுரைகள் எதுவும் அவன் செவியில் ஏறவில்லை. அவனைத் திருத்த என்ன செய்வது என ஆசிரியர் சிந்தித்தார். நல்ல வழி தோன்றியது.

அவனை அழைத்து, முருகா நம் ஊரை அடுத்துள்ள மலைப்பகுதி யில் உன்னைப்போல ஒரு சிறுவன் இருக்கிறான். அவனைக் கண்டுபிடிப் பது சிரமம். நீ உன் திறமையைப் பயன்படுத்தி அவனை நம் ஊருக்கு அழைத்து வா என்றார் ஆசிரியர்.

எப்படி அந்தச் சிறுவனைக் கண்டுபிடிப்பது? என்று யோசித்த முருகன் ''டேய் என்று கத்தினான். உடனே எதிர்ப்புறமிருந்து ''டேய்'' என்று குரல் வந்தது.

இதை கேட்டதும் முருகனுக்கு வழக்கம் போல் கோபம் உண்டானது. 'எவன்டா என்னை டேய் என்று கூப்பிடுவது?' என்று கத்தினான். அந்த சிறுவன் நம்மை மரியாதை இல்லாமல் பேசுகிறானே என்று அவன் துடித்தான். மீண்டும் முருகன், ''உனக்கு வீரமிருந்தால் என் எதிரே வாடா'' என்றுகத்தினான். அவன்என்னசொன்னானோ அதுவே திரும்பவும் அவன் காதுக்குக் கேட்டது.

குரல் கொடுக்கின்ற அந்தக் குறும்புச் சிறுவனை எப்படியும் கண்டு பிடித்து உதைக்க வேண்டும் என எண்ணிக் கொண்டே ஊருக்குத் திரும்பினான் முருகன்.

தனது ஆசிரியரிடம் சென்றவன் அந்த பையன் ரொம்ப மோசம் சார். என்னை கன்னா பின்னா என்று திட்டிட்டான். நான் எவ்வளவோ முயற்சி செஞ்சும் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை என்றான்.

உடனே ஆசிரியர், முருகா அந்த சிறுவன் மிக நல்லவன். நீதான் அவனை புண்படுத்தி இருப்பாய். நாளை நானும் உன்னோடு அங்கு வருகிறேன். அவனிடம் நீ மிக இனிமையாகப் பேசு. பிறகு நடப்பதை பார் என்றார்.

மறுநாள் முருகனும் ஆசிரியரும் மலைப் பகுதிக்கு வந்தனர். முருகன் உரத்த குரலில் நீ மிக நல்ல பையன் என்றுஎன் குரு சொன்னார்.நான்நேற்று உன் மனம்புண்பட நடந்து கொண்ட தற்காக வருந்துகிறேன் என்று கத்தினான்.

அவன்என்னசொன்னானோ அதே தொடர் மீண்டும் கேட்டது. நாம் இருவரும் இனி நண்பர்களாக இருப்போம். வா மகிழ்ச்சியாக ஓடிவிளையாடுவோம் என மீண்டும் குரல்கொடுத்தான் முருகன். அவன் சொனனதே மீண்டும்கேட்டது. மகிழ்ச்சியடைந்தான் முருகன். ஆசிரியர் உடனே முருகா நான் சொன்னது போல இங்கு எந்த சிறுவனும் கிடையாது. இந்த பகுதியில் நாம் என்ன பேசுகிறோமோ அது அப்படியே எதிரொலிக்கும். அதற்கு 'எதிரொலி' என்று பெயர். நீ, தீய சொற்களால்நேற்று பேசியிருப்பாய். அவை அப்படியே எதிரொலித்து உன்னைத் துன்பப்படுத்தியுள்ளன.

இன்று இனிய சொற்களைப் பேசினாய். உனக்கு மகிழ்ச்சி கிடைத்துள்ளது. நாம் பிறர்க்குத் துன்பம் விளைவித்தால் நமக்கு துன்பந்தான் கிடைக்கும் என்றார் ஆசிரியர்.

''சார் எனக்கு புத்தி தெளிந்து விட்டது. இனி எப்போதும் பிறர் மனம் புண்பட பேசமாட்டேன்'' என்றான்.

# இலங்கை பற்றிய தகவல்கள்


1. இலங்கையில் மிகப் பெரிய வன விலங்கு சரணாலயம் — யால, வில்பத்து
2. இலங்கையின் மிகப்பெரிய பறவைகளுக்கான சரணாலயம்— குமண
3. இலங்கையின் இயற்கைக்காடு அமைந்த மாகாணம் — சப்ரகமுவ (சிங்கராஜவனம்)
4. இலங்கையின் மிகப் பெரிய பூந்தோட்டம் — பேராதனைப் பூங்கா
5. இலங்கையின் மக்கள் அடர்த்தி கூடிய மாவட்டம் — கொழும்பு
6. இலங்கையின் மக்கள் அடர்த்தி குறைந்த மாவட்டம் — மன்னார்
7. இலங்கையின் நாடாளுமன்றம் செங்கோலின் நீளம் — 4 அடி
8. இலங்கையின் தேசிய மரம் — நாகமரம்

*ரா.ராஜினி, தரம் 9, கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்.*

# சிறார்களின் கைவண்ணம்



க.மாருதி, தரம் 5



ஏ. ரேசாந், தரம் 8



அ.சுகிலா
தரம் 10
கிளி/அக்கராயன் ம.வித்.





பி.சிந்துஜா
தரம்9
கிளி/புனித திரேசா பெ. கல்.

# விஞ்ஞானத் துளிகள்

1. பாலில் உள்ள புரதம் எது? **கேசின்**
2. சீனியில் உள்ள மூலகங்கள் எவை? **காபன், ஐதரசன், ஒட்சிசன்**
3. அதிகளவு நைதரசன் கொண்ட செயற்கை உரம் எது? **யூரியா 34 வீதம்**
4. நீரில் அதிகம் கரையும் வாயு எது? **அமோனியா**
5. அலுமினியத்தின் தாதுப் பொருள் எது? **பாக்சைட்**
6. சோடா நீரின் விஞ்ஞானப் பெயர் எது? **கார்பனிக் அமிலம்**

*றெபேக்கா*

*தரம் 5G, கொழும்பு கிஸ்ரன் சர்வதேச பாடசாலை.*

# விடுகதைகளும் விடையும்

1. என்னைப் பார்த்தால் உன்னைப் பார்க்கலாம் நான் யார்? **கண்ணாடி**
2. நன்றிக்கு வாலை ஆட்டும் நல்ல ஜென்மம் அது என்ன? **நாய்**
3. ஆகாயத்தில் பறக்கும், பறவையல்ல அது என்ன? **விமானம்**
4. விளக்கைச் சுமந்தவன் புகையாய் மாறினான் அவன் யார்? **மின்மினிப் பூச்சி**
5. காற்றுக்குள் நுழைந்தவன் கானம் பாடுவான் அவன் யார்? **மூங்கில்**
6. இதயம் போல் துடிப்பிருக்கும் இரவு பகல் விழித்திருக்கும் அது என்ன? **கடிகாரம்**
7. சொல்லாமல் வரும் நில்லாமல் போகும் அது என்ன? **நாள்**

*இ.பேபி நிஷாந்தினி, தரம் 10, கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்.*

# படம் சொல்லும் பழமொழி



அன்பான தம்பி, தங்கைகளே, கீழே உள்ள படங்கள் ஏதோ ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றன.

அவை என்ன பழமொழி என்று கண்டுபிடித்து விடையை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடைஎழுதும் 5 பேரின் பெயர் விவரம் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரமாகும். அனுப்பவேண்டிய முகவரி:

*'படங்கள் சொல்லும் பழமொழி', சுடர் ஒளி வாரமலர், 85, ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14*

# கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்பு

| | | |
|---|---|---|
| தொலைக்காட்சி | - | கலிலியோ |
| ஒலி பெருக்கி | - | லீனெக் |
| பரசூட் | - | ஒ.கே.கனேரின் |
| இயந்திர துப்பாக்கி | - | கலிங் |
| தொலைபேசி | - | கிரகம் பெல் |
| நுணுக்குக் காட்டி | - | லூவன் கான் |
| பாரமாணி | - | தொறி செல்லி |
| அணுகுண்டு | - | ஒட்டோ கான் |
| மின்னற் கடத்தி | - | பெஞ்சமின் பிராங்ளின் |
| தொலைக்காட்சி | - | லொக்கிபேர்ட் |
| தங்குதல் கதிர் கருவி | - | தொன் ஜன் |

*ந.சிவஜசன், தரம் 11, வள்ளிபுரம் க.உ.வித்தியாலயம்.*






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சியில் தொல்லைதரும்

# அரைகுறை அழகிகள்



இன்றைய காலகட்டத்தில் எதிலுமே ஆபாசம் கலந்துவிடுவது என்பது கவலையான விடயந்தான். ஆனால், இது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டதால், விளம்பரங்கள் தொடக்கம் பல விடயங்களில், கவர்ச்சியான பல பெண்களின் படங்களைப் புகுத்தி விடுகின்றார்கள்.

எந்தப் பொருளின் விற்பனை விளம்பரங்களை எடுத்தாலும், அங்கே அரைகுறை உடையில் வரும் கவர்ச்சியான பெண்களைக் கொண்டுவந்து விடுகின்றார்கள். பற்பசை விளம்பரமானாலும் சரி, பட்டுப் புடைவை விளம்பரமானாலும் சரி, இளம் பெண்களை அரைகுறைக் கோலங்களில் காணலாம்.

தொலைக்காட்சி நிலையங்களையும், கவர்ச்சிக் கன்னிகள் மொய்க்கின்றார்கள். பல தொலைக்காட்சி நிலையங்கள், கவர்ச்சியை நம்பியே பிழைத்துக் கொண்டிருக்கின்றன.

அண்மைக் காலங்களில் இத்தாலிய தொலைக்காட்சி சேவைகளில், கவர்ச்சி பெரிதாக நுழைந்திருப்பது, பார்வையாளர்களின் அதிருப்தியைச் சம்பாதித்து இருக்கின்றது.

இத்தாலிய தொலைக்காட்சிகளில் வானிலை அறிக்கைகளை இராணுவ அதிகாரிகள், முழுமையான சீருடையில் வந்து அறிவிப்பது காலங்காலமாக இருந்து வந்த வழமை ஆகும். ஆனால், கடந்த செப்டெம்பரில் இந்த வழமைக்கு சாவுமணி அடிக்கப்பட்டு விட்டது. இப்பொழுது இவர்களின் இடத்தை அழகிகள் பிடித்துக் கொண்டிருக்கின்றாங்கள்.

பொதுவாகவே மிகச் சிக்கனமாக உடை அணிந்த இளம் பெண்கள், தங்களை விட வயதாளிகளான ஆண்களுடன் இணைந்து, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நடத்துவது வழக்கம். அப்படி வரும் ஆண், அழகனாகவும் இருப்பதில்லை.

அண்மையில் இத்தாலியில் ஒரு 21 வயதான அழகி, மிக ஆபாசமான உடையில் தொலைக்காட்சியில் தோன்றியதால்



பணியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கின்றாள். காலநிலை பற்றி அறிவிக்கும் போது அதன் முக்கியத்துவம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். இதை ஆபாசத்திற்குரிய ஒன்றாக மாற்றி விட முடியாது என்று செய்தித் தயாரிப்பாளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

புன்முறுவல் பூத்த முகத்தோடு இந்தப் பெண் அறிவிப்பாளர், காலநிலை பற்றி அறிவித்திருந்தாலும், உடைகளின் அதிக ஆபாசம் பொதுமக்களின் அதிருப்தியை வெளிப்படுத்தி இருக்கின்றது.

இதனால் இவர் தொடர்ந்து தொலைக்காட்சியில் பணியாற்றுவது சந்தேகம் என்ற நிலையில் இன்னொரு அழகியின் மீது, அந்த தொலைக்காட்சி நிறுவனத்தினரின் கண் விழுந்துள்ளது. அவர்தான் 18 வயதான மிஸ் இத்தாலி என்ற பட்டம் பெற்றவர்.

அவர் தொலைக்காட்சிக்கு வர மறுத்தாலும், வேறு அழகிகளைத் தெரிவு செய்வது அப்படி ஒன்றும் சிரமமான விடயமல்ல என்கிறார் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்.

விண்ணப்பங்கள் கோரப்பட்டால் பெருந்தொகையானவர்கள் விண்ணப்பிப்பார்கள் என்ற நம்பிக்கை தயாரிப்பாளரிடம்இருக்கின்றது.

தொலைக்காட்சி சேவைக்கு வந்தால், மிகச் சிக்கனமான உடைகளை உடுத்த வேண்டும் என்ற நிபந்தனை இருந்தாலும், போட்டி போட்டுக் கொண்டு வரும் இளம் அழகிகளுக்கு குறைவில்லை என்கிறார்கள் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள்.

வாரத்தில் ஆறு தினங்கள் இடம்பெறும் 30 நிமிட நிகழ்ச்சி ஒன்று இத்தாலியில் மிகப் பிரபல்யமானது. பார்வையாளர்களின் முறைப்பாடுகளை விசாரிக்கும் நிகழ்ச்சி இது. இங்கே வரும் இரண்டு இளம் பெண் அறிவிப்பாளர்கள் படுகவர்ச்சியாக உடையில்தான் தோன்றுகின்றார்கள்.

குட்டைப் பாவாடை அணியும் இவர்கள் முழங்கால் உயரத்துக்கு பூட்ஸ் அணிகின்றார்கள். இந்தக் கோலத்தோடு உடம்மைக் குலுக்கி, மேசையில் ஏறி நின்று ஆடவும் செய்கிறார்கள். இந்த இருவரைக் கூட நிறுத்தி விட்டு புதியவர்களைக் கொண்டுவரப் போகின்றார்களாம் இந்த இத்தாலிய தொலைக்காட்சி நிறுவனத்தினர்.

இன்னொரு நிகழ்ச்சியில் காற்பந்தாட்டப் போட்டி பற்றிய வர்ணனையில் கூட, மார்பகங்களைப் பெரிதாக வெளிப்படுத்தும் உடையுடன் தோன்றுகின்றார். இத்தாலியின் எல்லாத தொலைக்காட்சி நிகழ்ச்சி ஆரம்பங்களைப் போல, இந்தப் பெண்ணும் பல பெண்களோடு சேர்த்து ஒரு ஆட்டம்போட்டு விட்டுத்தான் நிகழ்ச்சியை ஆரம்பிக்கின்றார்.



அரை நிர்வாணமான காட்சிகளைக் காலங்காலமாக காண்பித்து வந்த வழக்கத்திலிருந்துதான், இந்த அரை குறைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வந்து சேர்ந்திருக்கின்றன என்கிறார் ஒரு பேராசிரியர். புதிய புதிய சிந்தனைகளின் தட்டுப்பாடுதான் இந்த நிலை தொடர்வதற்குக் காரணம் என்று சலித்துக் கொள்கிறார் இவர்.

ஆனால் இந்த நிலைமை தொடராது என்பது தெளிவாகவே தெரிகிறது. பார்வையாளர்களுக்கு இந்த முக்கால் நிர்வாணக் கோலங்கள் வெறுப்பை ஏற்படுத்த ஆரம்பித்துவிட்டன என்ற கருத்து நிலவுகின்றது. பலர் இது பற்றி வெளிப்படையாகவே கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்திருக்கின்றார்கள்.

மறைக்கப்படும் வரைதான் அழகுக்கு மதிப்பு என்ற நிஜம் இவர்களுக்குத் தெரியவந்துவிட்டதோ?






# புறா வளர்க்கும் டைசன்!

குத்துச்சண்டை ஹெவி வெயிட் சாம்பியன் பட்டத்தை மீண்டும் பெறுவதற்காகக் கடும் முயற்சி செய்து வருகிறார் அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் சாம்பியன் மைக் டைசன்.

சரமாரியான குத்துக்கள் மூலம் எதிரியை கலங்கடித்து, போட்டி தொடங்கிய சில நிமிட நேரத்தில் எதிரியை நொக் அவுட் செய்வதில் திறமை பெற்றவர் மைக் டைசன்.



பல்வேறு திறமைகளைக் கொண்டவராக இருந்த போதிலும், தவறான நடவடிக்கை காரணமாக ஜெயில் தண்டனை, கோர்ட்டுகளில் அபராதம் கட்டியது, நஷ்ட ஈடாக கோடிக் கணக்கில் பெண்களுக்குச் செலுத்தியது போன்றவை காரணமாக ஓட்டாண்டியானார் டைசன்.

கடன்களில் இருந்து மீண்டு நிம்மதியான வாழ்க்கை தொடங்க ஆர்வம் காட்டினார். ஆனால் சமீபத்தில் நடந்த போட்டியில் இங்கிலாந்து நாட்டின் வில்லியம்சிடம் தோற்றுப்போனார்.

இந்தத் தோல்விக்குப்பிறகு டைசன் அமைதியான மன நிலையுடன் காணப்படுகிறார். முன்பெல்லாம் ஏதாவது பிரச்சினை என்றால் பயங்கரமாகக் கத்திப் பேசி ஆர்ப்பாட்டம் செய்வது டைசனின் வழக்கம்.

ஆனால் இப்போது பிரச்சினை எது வந்தாலும் அமைதியாக இருக்கிறார். இந்த அமைதிக்குக் காரணம் அவர் வளர்த்து வரும் புறாக்கள் தான். உயர் ஜாதிப் புறாக்களை வீட்டில் வளர்த்து வருகிறார். புறாக்கள் மீதான காதல் இப்போது ஏற்பட்டதல்ல என்கிறார் டைசன்.

இது பற்றி டைசன் கூறும்போது:—

நான் சிறுவனாக இருந்த போதே புறாக்களின் மீது தனிக் கவனமும், பாசமும் உண்டு. அப்போது பிர்மிங்காம் ரோலர் ரக புறாக்கள் மீது ஆசை ஏற்பட்டது. புருக்ளின் பகுதியில் வளர்ந்த போது புறா வளர்க்கும் ஒருவரது வீட்டின் கூரைமீது ஏறிச்சென்று புறாக்களின் அருகில் இருந்து கவனிப்பேன். புறாக்களின் நடவடிக்கைகளைக் கவனிப்பது சந்தோஷத்தைத் தரும். மேலும் ஒரு நாள் முரட்டுச் சிறுவன் ஒருவன் புறா ஒன்றைக் கொன்று விட்டான். இதைப் பார்த்து ஆத்திரம் அடைந்த நான் அந்தச்சிறுவனுடன் சண்டைபோட்டேன். இது தான் எனது முதல் தெருச் சண்டை. இதன் மூலம் தான் எனது தைரியம், குத்துச்சண்டை ஆர்வம் வெளிப்பட்டது என்கிறார் டைசன்.

வில்லியம்சுடன் நடந்த போட்டியில் மோத லுயிஸ்வில்லிஸ் நகருக்கு வந்த போதும் தான் ஆசையாக வளர்க்கும் புறாக்களை உடன் கொண்டு வந்திருந்தார் டைசன்.

தினமும் பயிற்சி முடிந்ததும் புறாக்களை கொஞ்சி மகிழ்வது டைசனின் பொழுதுபோக்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவ வளர்ச்சியின் ஒரு பகுதிதான் முகப்பருக்கள்

**கேள்வி:– பெண். வயது 25. எனக்கு கால்விரல்களுக்கிடையில் அவிந்து புண்ணாக இருக்கின்றது. எனது சமையலறையில் எந்த நேரமும் தண்ணீர் தேங்கிநிற்பதனால் தான் எனது கால்விரல்களுக்கிடையில் இப்படியாகின்றது என்கின்றார்கள். இதற்குப் பரிகாரம் உண்டா?**

பதில்:– உங்கள் கால் விரல்களுக்கிடையில்ஏற்பட்டுள்ளது பங்கசுத் தொற்று. இதனை உங்கள் சமையலறைச் சூழ்நிலை அதிகரித்து வைத்துள்ளது. கால் இடுக்கிலுள்ள பங்கசு தொற்று எந்நேரமும் தண்ணீர்பட்டு கொண்டிருந்தால் இலகுவில் மாறாது. MICONAZOLE CREAM அல்லது CLOTRIMAZOLE CREAM தினமும் இரண்டு வேளை பூசிவாருங்கள். சமையலறையில் தண்ணீர் தேங்கி நிற்காமல் கவனித்துக்கொள்ளுங்கள்.

**கேள்வி: எனது . மகன் வயது 13. சிறுவயதிலிருந்தே அவர் பேசும் போது திக்தி திக்தி பேசுவார். இதனால் அவர் தனது பாடசாலையிலும் கேலிபண்ணப்படுகின்றார். எத்தனையோ வைத்திய நிபுணர்களிடம் காட்டினோம். பலன் எதுவுமில்லை. உங்களால் ஆலோசனை தரமுடியுமா?**

பதில்: திக்கு வாய்க்குப் பலகாரணங்கள் சொல்லப்படுகின்றன. இவர்கள் பேசுவதைவிட, பேசநினைப்பதை நிறையச் செய்வதால், அவ்வளவு நினைவுகளையும் பேச்சிலே கொண்டு வந்துவிட வேண்டும் என்று வேகமாகப் பேசுவதால் தான் திக்கு வாய் ஏற்படுகிறது என்று பேச்சு நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். எப்படி ஆறுதலாகப் பேசுவது என்று சரியான பயிற்சி பெற்றால் இவர்களது திக்குவாயை குணப்படுத்தலாம். மேலும், சிலவேளை சிறுவயதில் ஏற்பட்ட மனத்தாக்கங்களும் இவ்வாறு திக்கும் குணத்திற்குக் காரணமாக இருக்கலாம். இவரது நண்பர்கள், உறவினர்கள் என்போர் இவர் திக்திப் பேசும் குணத்தை கேலி பண்ணும் நிலை இருந்தால், இந்தத் திக்கு வாய் நிலை அதிகரிக்குமே தவிர குறையாது. எனவே முதலில் இவர் CLINICAL HYPNOLOGIST ஒருவரிடம் ஆலோசனை பெறவேண்டும். அதன்பின்னர் பேச்சுப் பயிற்சிக்காக SPEECH THERAPIST ஒருவரிடம் பயிற்சி பெறவேண்டும். இப்படிப் பயிற்சி பெற்ற அநேகர் இன்று தமது திக்கு வாய் நிலையை குணமாக்கி நல்ல பதவியில் சிறந்த பேச்சாளர்களாக விளங்குவதை நான் அறிந்திருக்கின்றேன்.

**கேள்வி: ஆண். வயது 25. மருத்துவப் பரிசோதனையின் போது எனக்கு நீரிழிவு நோய் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்குச் சிகிச்சையாக இன்சுலின் மருந்து தினமும் ஏற்றச் சொன்னார்கள். ஊசிமருந்து வேண்டாம். நீரிழிவு மாத்திரைகள் தரும்படி மருத்துவரிடம் கேட்டபோது, எனக்கு TYPE 1 DIABETES அதனால் இன்சுலின் ஊசிதான் போடவேண்டும், மாத்திரை சரிப்பட்டுவராது என்றார். எனது அம்மாவுக்கும் நீரிழிவு உண்டு. அவர் மாத்திரை தான் உபயோகிக்கின்றார். எனக்கு மட்டும் ஏன் இன்சுலின்? விளக்கம் தாருங்கள்?**

ப: நாம் சாப்பிடும் உணவில் பெரும் பகுதி குளுக்கோஸாக மாறுகிறது. இந்தக் குளுக்கோஸ், எமது உடலின் தேவைக்கு உதவுவதனால் – இன்சுலின் ஹார்மோன் தேவை. இன்சுலின் இல்லாவிடில் குளுக்கோஸை எமது உடல் சக்தியாக மாற்றாது. எமது உடலில் உள்ள கணையம் (PANCREAS) இன்சுலினை உற்பத்தி செய்கின்றது. தேவையான இன்சுலின் உற்பத்தியாகாத போது அல்லது உற்பத்தியாகும் இன்சுலின் – உடலால் சரியான விதத்தில் பயன்படுத்தப்படாத போது நீரிழிவு நோய் ஏற்படுகிறது.

சிலவேளைகளில் உடம்பின் நோய் எதிர்ப்பு நிலையானது – ஏதோ ஒரு காரணத்தால், தனது செயற்பாட்டினால் இன்சுலினை தயாரிக்கும் கணையத்தில் உள்ள பீட்டா (BETA) கலங்களைத் தாக்கி அழிக்கின்றது. இதனால் இன்சுலின் சுரப்பு முற்றாக அல்லது அதிகளவில் தடைப்படுகிறது. இப்படியான நிலை அதிகமாககுபு குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் ஏற்படுகிறது. இதனை TYPE 1 இன்சுலின் நீரிழிவு என்று கூறுவர். இந்த நிலை எந்த வயதினருக்கும் வரலாம்.

உமது மருத்துவர் உம்மை பரிசோதித்த போது, உமக்கு இன்சுலின் குறைவைக் கண்டறிந்ததால் தான் இன்சுலின் மருந்தை ஏற்றச் சொன்னார். TYPE 2 நீரிழிவுக்காரர்களுக்கு இன்சுலின் சுரப்பு சாதாரண அளவாக இருப்பினும் அவர்களது தேவைக்குப் போதாது. அவர்களது பீட்டா கலங்கள் பழுதில்லாமல் இயங்குகின்றன. எனவே அந்த பீட்டா கலங்களை மேலும் உசுப்பி – அதிகளவு இன்சுலினை சுரக்க வைக்கவும், இன்சுலினை அதிகளவினுள் கலங்களுக்குள் கொண்டு செல்ல உதவவும் மாத்திரைகள் உபயோகப்படுகின்றன. உமக்கு பீட்டா கலங்கள் மிகக் குறைவாக இருப்பதால் மாத்திரைகளை உபயோகித்து அதிக இன்சுலினைச் சுரக்கவைக்க முடியாது. நேரடியாகவே இன்சுலினை ஏற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

TYPE 2 நீரிழிவு பொதுவாக எவருக்கும் வரக்கூடியதென்றாலும், பரம்பரை நீரிழிவு நோய் உள்ளவர்கள், பருமனான உடல் அமைப்புக் கொண்டவர்கள், அதிஉயர் இரத்த அழுத்தம் கொண்டவர்கள், உமது அம்மாவைப்போல் 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த வகை நீரிழிவு ஏற்படச் சாத்தியம் அதிகம் உண்டு. இவர்களுக்கு நான் முன்னர் கூறிய காரணங்களால் நீரிழிவு மாத்திரைகளை உபயோகித்து நீரிழிவைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம்.

**கேள்வி: இது ஒரு பொதுவான மருத்துவக் கேள்வி. கேள்வி கேட்பவர்கள் அனைவரும் இளைய சமுதாயத்தினர். அவர்களின் பிரச்சினை இதுதான். வைத்தியப் பகுதிக்கு வரும் கடிதங்களில் குறைந்தது ஐந்து கடிதங்களாவது முகப்பருக்களுக்கு மருந்து கேட்டே வருகின்றன. எனவே எல்லோருக்கும் பயன்படக்கூடியதாக இந்தப் பதில் வருகின்றது.**

ப: மனிதப் பருவத்தில் ஒரு முக்கியமான பருவம் வளர் இளம் பிராயம். இதனை ADOLESCENT STAGE என்று கூறுவார்கள். 12 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட காலப்பருவம் இது. இந்தப் பருவத்தில் ஆணுக்கும், 'பெண்ணுக்கும் புதிய ஹோர்மோன்கள் சுரக்கின்றன. இந்த ஹோர்மோன்களின் சுரப்பிகளினால் உடலிலும், உள்ளத்திலும், பழக்கவழக்கங்களிலும் இருபாலாருக்கும் புதிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்தப் பருவத்தில் 85 வீதமான ஆண்களுக்கும், 75 வீதமான பெண்களுக்கும் ஏற்படும் ஒன்றுதான் முகப்பருக்கள். உடலில் சருமத்தின் போஷிப்புக்காக தோல் வரட்சி பெற்று, தொற்றுகளுக்



காளாகமால் இருப்பதற்காக எண்ணெய்ச் சுரப்பி கள் உள்ளன. ஒவ்வொரு எண் ணெய் சுரப்பியும் தோலில் காணப்படும் மயிரின் அடியில் இருந்து மயிர் வழியாகத் தமது சுரப்பை தோலின் மேற்புறத்திற்கு அனுப்பி தோலைப் பளபளப்பாகப் போஷிக்கின்றன. இந்தச் சுரப்பிகளை SEBACEOUS GLANDS என்று அழைப்பார்கள். அவற்றின் சுரப்பு SEBUM என்று அழைக்கப்படும். வளர் இளம் பராயத்தில் ஹோர்மோன்களின் சுரப்புகளினால் இந்தச் சுரப்பு – எளிதில் காய்ந்து சுரப்பிகளின் வாசலை அடைத்துக் கொள்ளும் தன்மையைப் பெறுகின்றது. இதனால் அடைபட்ட சுரப்பு வீங்கி 'பரு' ஆகிறது. சுரப்பிகளின் வாசலை அடைக்கும் சுரப்பு காற்றில், வியர்வையில் உள்ள அழுக்குடன் சேர்ந்து கரியநிறத்தைப் பெறுகிறது. இந்தச் சுரப்புகள் அதிகமாக முகத்தில், முதுகில் காணப்படுவதால் பருக்களும் இந்த இடங்களில் அதிகமாகத் தோன்றுகின்றன. கறுத்த முனையுடன் காணப்படும் இந்தப் பருக்கள் BLACK HEADS என்றும் அழைக்கப்படும். இந்தப் பருக்களை நசித்தால் CHEESE போன்ற SEBUM வெளியேறும்.

ஆனால், பருக்களை நசிக்கக்கூடாது. நசிப்பதால் பற்றிரியா தொற்று ஏற்பட்டுச் சீழ்கட்டும். இது தவிர, உடல் எதிர்ப்புச் சக்தி குன்றியிருந்தால் பருக்கள் சீழ்பிடிக்கும் தன்மை அதிகமாகும். இதனை (ACNE) என்று மருத்துவர் கூறுவர்.

வளர் இளம் பராயத்தில் அதிகளவு இனிப்பு வகைகள், எண்ணெய் வகை உணவுகள், நெய், பட்டர், சீஸ் உண்பவர்களுக்கு முகப்பருக்கள் அதிகமாக வரும். எனவே முகப்பரு உள்ளவர்கள் அதிகமாக மேற்குறிப்பிட்ட உணவுவகைகளை உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

முகத்தை எப்பொழுதும் கழுவித் துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டும். முகத்திற்கு காரமில்லாத குழந்தைகள் உபயோகிக்கும் சவர்க்காரம் – அல்லது TETMOSOL சவர்க்காரம் உபயோகிக்கலாம். முகத்தைக் கழுவிய பின்னர் – நாடியிலிருந்து தலையை நோக்கி, கீழிலிருந்து மேலாகத் துணியால் அழுத்தித் துடைக்கவேண்டும். இதனால் அடைப்பட்டிருக்கும் சுரப்பியின் துவாரங்கள் திறந்து – சுரப்புகள் தடையின்றி வெளியாகும்.

முகத்திற்கு கஸ்தூரி மஞ்சள் பூசுவது நல்லது. ஆனால், கஸ்தூரி மஞ்சள் புதிய மஞ்சளாக இருப்பது விரும்பத்தக்கது. கஸ்தூரி மஞ்சளில் தயாரிக்கப்பட்ட கிறீம் பாவிப்பது விரும்பத்தக்கதல்ல. ஏனென்றால், கிறீம் தயாரிப்பில் கஸ்தூரிமஞ்சள் தவிர்ந்த வேறு பொருட்களும் சேர்க்கப்படுவதால் ஒரு சிலருக்கு இது ஒத்துக்கொள்ளாதது மாத்திரமல்ல, பருக்கள் தோன்றுவதை அதிகரிக்கவும் செய்யும்.

முகத்திற்கு மேக்அப் செய்வது, பலதரப்பட்ட கிறீம்களைப் பூசுவது என்பதைத் தவிர்க்கவும். இவை மேலும் சுரப்பிகளின் துவாரங்களை அடைத்து பருக்கள் வருவதை அதிகரிக்கும்.

சீழுடன் கூடிய முகப்பருக்களுக்குள் உள்ளுக்குள் DOXYCYCLINE, ERYTHROMYCIN போன்ற உயிர்கொல்லி மாத்திரைகளை உண்பது அவசியம். அத்தோடு முகத்திற்கு ERYTHRO MYCIN CREAM பூசலாம்.

இந்த நடைமுறைகள் யாவும் பருக்கள் தோற்றுவதைப் பெருமளவில் கட்டுப்படுத்துமே தவிர, முற்றாகக் குணம் தராது. 20 – 21 வயதில் தானாகவே பருக்கள் வருவது மிகவும் குறைந்துவிடும். வளர்ச்சியின் ஒரு பகுதிதான் முகப்பருக்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

## வாயைக் குதப்பினால் குஷி பிறக்கும்

வாயாடாது இருந்தால் சிலருக்குப் பொழுது போவதே இல்லை. யாருடனாவது எதையாவது கதைத்தே தீர வேண்டும் என்ற நிலையில் இருப்பவர்கள் இவர்கள். இவர்களை வாயாடிகள் என்று வரையறுத்து விடவும் முடியாது. அந்தச் சொல்லின் பதமே வேறு.

இந்த ரகத்தினருக்கோ பேசா மடந்தைகளாக இருக்கப் பிடிப்பதில்லை. பலதையும் பத்தையும் பற்றி, நாலுபேருடன் கதைத்துக் கொண்டிருந்தால்தான், இவர்கள் பொழுது சுகமாகக் கழியும்.

இந்த வாயாடும் சமாச்சாரத்தில் இன்னொன்றும் இருக்கின்றது. அது வேறொன்றுமல்ல. கதைத்துக் கொண்டிருக்க ஆசைப்படுவார்கள் அல்லது இவர்கள் இவர்களுக்கு வாயாடிக் கொண்டிருக்க வேண்டும். வாய்க்குள் வெற்றிலையைத் தள்ளி, சுண்ணாம்பு, பாக்கு என்று கூட்டாளிகளைச் சேர்த்து வைத்து, வாயைக் குதப்பினால், இவர்களுக்குக் குஷி பிறந்து விடும்.

ஆசிய நாட்டவர்கள்தான் பெரும்பாலும் இந்த வெற்றிலை குதப்பும் மோகத்தில் சிக்கிக் கிடப்பவர்கள் என்று தான் நாம் அறிந்திருக்கின்றோம். ஆனால், ஆபிரிக்க கண்டத்திலும் இலையை வாய்க்குள் வைத்துக் குதப்பும் பழக்கம் இருக்கின்றது என்பது எம்மில் பலருக்குப் புதிய விடயமாக இருக்கலாம்.

'காட்' என்பதுதான் ஆபிரிக்கர்களின் வெற்றிலை. 'காதா எடுலிஸ்' என்ற பெயரில் உயரமாக வளரும் தாவரத்தில் இருந்துதான் இந்த இலை பறிக்கப்படுகின்றது. 10 அடி தொடக்கம் 20 அடி உயரம் வரை இந்தத் தாவரம் வளரும் தன்மை கொண்டது.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளிலும், தெற்கு அரேபிய பிராந்தியத்திலும்தான் இது வளருகின்றது. இச் செடியிலிருந்து துர்மணமும் வீசும் என்கிறார்கள். தாவரத்தின் நுனியிலுள்ள குருத்து இலைகளே பெரிதும் விரும்பப்படுகின்றன. எனினும் மற்றைய பகுதியிலுள்ள இலைகளும் உபயோகிக்கப்படுவதுண்டு.



எதியோப்பியா, யேமன், சோமாலியா போன்ற நாடுகளிலும், ஏனைய சில நாடுகளிலும் இந்த இலைகள் விற்கப்படுகின்றன. போதை ஏற்றும் குணம் கொண்ட இந்த [illegible] உட்கார்ந்து, கட்டுக்கட்டாக விற்பதுண்டு. எதியோப்பியா அரசுக்குப் பெரும் வருவாயைத் தேடிக் கொடுக்கும் செடியாக இது திகழ்கின்றது. பொதுவாகக் கோப்பிக்குப் பிரபல்யமான இந்த நாட்டில், கோப்பி உற்பத்தி பெரிய இலாபத்தைக் கொடுக்காததினால், இங்குள்ளவர்கள், கோப்பிச் செடிகளைப் பயிரிடுவதற்குப் பதிலாக, இந்தக் காட் செடியின் மீது தங்கள் முழுக் கவனத்தையும் திருப்ப ஆரம்பித்து இருக்கின்றார்கள்.

இந்த இலையைப் பல பெயர்கள் கொண்டு அழைத்து வருகின்றார்கள். அபிசீனியன் ரீ, ஆபிரிக்க கன்ரீ, ஆபிரிக்கன் சாலட் என்றெல்லாம் இதற்குப் பெயர். இதை விற்பனைக்காக வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லும் போது, வாழையிலையில் சுற்றியோ அல்லது பிளாஸ்டிக் பைகளில் சுற்றியோ கொண்டு செல்கிறார்கள். இலைகள் ஈரமாக இருக்க வேண்டும் என்று தண்ணீரையும் தெளித்து விடுகின்றார்கள். எமது வெற்றிலைக்குக் கிடைக்கும் இராஜ மரியாதைதான் இந்த ஆபிரிக்க இலைக்கும் கிடைத்து வருகின்றது.

ஆனால், ஒரு விடயம் இந்த இலையை வெற்றிலையில் இருந்து வேறுபட வைக்கின்றது. பாலியல் ரீதியாக அதிக இச்சை, அதிகரித்த பசி உணர்வு என்ற பல தாக்கங்கள் இதனால் ஏற்படுகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட அளவு உபயோகித்தால் பயனுள்ள ஒன்றுதான் என்கிறார்கள் இங்குள்ளவர்கள்.

எனினும் அளவு கடக்கும்போது அதிக இரத்த அழுத்தம், மூச்சு விடச் சிரமம், வயிற்று எரிச்சல், மலச்சிக்கல், ஈரல் உபாதை என்று பல சிக்கல்களைச் சம்பாதிக்க வேண்டிவரும் என்கிறார்கள். புதிய தளிர்களை புகையிலை போன்று, வாயில் வைத்து மெல்லும் பழக்கமும் இருக்கின்றது. வாயிலிருந்து கடித்த மணம் வீசுவதோடு, நல்ல தாகமும் எடுக்கும் என்கிறார்கள்.

விலைபோகும் இந்த இலைகள், தலைபோகும் சமாச்சாரமாகி விடக்கூடாது என்பதை மறந்து விடலாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆசனம் தெரியாமல் தடுமாறிய சீனியர்

அந்த அதிஉயர் மன்றில் அடிக்கடி மோதிக் கொள்பவர்கள் வடபுலத் தளபதிகளும், சிவப்புச் சட்டை போஸ்டர்களும் தான். வட புலத்தளபதிகளுக்கே வேந்தன் நான் தான், நான்தான், சீனியர் என்று பீத்தித்திரியும் இலங்கை ராஜாவுக்குத் தனது ஆசனமே தெரியாமல் போய்விட்டதாம்.

பேனா நண்பர்கள் சந்திப்பின் போது கூட, பொது இடம் என்றும் பாராமல் சீனியாரிட்டி, எனக்கு முதலிடம் வேண்டும் என்று சண்டை பிடித்து மைக்கை மென்று துப்புவதிலும் வல்லவராம்.

ஆனால், இவர் என்ன செய்தார் தெரியுமோ? அண்மையில் அதி உயர் மன்றில் சிவப்புச் சட்டை போஸ்டர்காரர் ஒருவரின் சீட்டில் போய் அமர்ந்துவிட்டாராம்.

அதோடு நிற்கவேண்டாமா? லாச்சியையும் கிண்டிக்கிளறி தோண்ட ஆரம்பித்துவிட்டாராம்.

இதைக் கண்ட போஸ்டர்காரர்கள், எலியின் கூட்டுக்குள் புலியா? என்று ஏதோ ஒரு கள்ளனைப் பிடிப்பது போல் ஓடிவந்து அமர்த்திக்கொண்டனராம்.

அப்புறம் வேடிக்கைதான். அந்த இலங்கை இராஜாவுக்கோ சிங்களம் தெரியாது. போஸ்டர்காரர்களுக்கோ தமிழ் தெரியாது, ஆங்கிலமும் தான். ஒருபடியாக எதையோ பேசி ஆளைக்கிளப்பிவிட்டனராம்.

அப்போதும் கூட உடனடியாகத் தவறை ஒத்துக்கொள்ளவில்லையாம் அந்த இராஜா. ஒருபடியாக எதிர்தரப்பில் தனதுசகாக்கள் இருப்பதைக் கண்டு மூக்குடைபட்ட நிலையில், தனது மூட்டையையும் தூக்கிக் கொண்டு வெளியேறினராம்.

எல்லா இடத்திலும் சீனியாரிட்டி வேலை செய்யாது. அதுக்கும் ஒருவிவேகம் வேண்டும் என்கின்றனராம் இளசுகள்.

பாவம் வயது போய்விட்டது தானே! அப்படித்தான் தடுமாறும். நல்ல வேளை பிரதமரின் ஆசனத்தில் அமரவில்லையே என்று ஒரு திருப்தி. இதைப்பற்றி வேந்தனார் என்ன சொல்கிறார் என்றால் ஆழும்தரப்பு, எதிர்தரப்பு வழி தெரியாமல் வந்துவிட்டாராம்.

ஆனால், நாடாளுமன்றத்துக்கே வழி தெரியாமல் தான் வந்துவிட்டதாக சிலர்கூறுகின்றார்கள்.

## காரை ஓட்ட மட்டுமல்ல அசைக்கவும் முடியும் இது ஒரு சாதனை

நீதித்துறைக்கோ அரசரானவர் ஒரு டெலி நாட்டிய நடிகையுடன் சேர்ந்து இசகு பிசகாகக் காரை அசைத்துக்கொண்டிருந்த கதை அண்மையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. இது எல்லோருக்கும் தெரிந்தகதை.

என்னடா இது பெரியகதை. என்னாலும் தான் காரை அசைத்துக்காட்ட முடியும் என்று சாதனை படைத்துவிட்டாராம், நாடாளுமன்றத்துக்குள் ஒரு இலட்சிய வேகத்துடன் புகுந்த இளம் தமிழ்த்தம்பி.

என்ன நடந்தது தெரியுமே! கல்கிஸ்ஸைப் பகுதியில், அமைதியான ஒரு சூழலில் காரை நிறுத்தி, அழகிய நங்கையுடன் சேர்ந்து குளிரூட்டப்பட்ட வாகனத்தையே அசைத்துக் கொண்டிருந்தாராம். என்னடா இது, வாகனம் தானாகவே ஆடி அசைகிறதே என்று காவல்துறையினர் சந்தேகத்துடன் அந்த வாகனத்தை நெருங்கி சோதனையிட முனைந்தனர்.

அங்கேகாவல்துறையினருக்கு டிக்கட் இல்லாமலேஒருபுளூபிலிம் பார்க்கும் பாக்கியம் கிடைத்ததாம். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர், அதுவும் நன்றாகச் சிங்களம் பேசக் கூடியவராம். கவர்ச்சிக் கன்னி ஒருவருடன் ஆதாம் ஏவாள் நிலையில். ஆலிங்கனம் செய்து கொண்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்து விட்டனராம் காவல் துறையினர்.

மேல் மாகாணத்தில் இப்படியும் ஒரு மேலான செயலா என விசனத்துடன் விசாரித்துப்பார்த்ததில், அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பது காவல் துறையினருக்குத் தெரியவந்ததாம்.

இப்போது கதை என்ன தெரியுமோ? ஏதும் சினிமாப் படம் எடுப்பதற்கு ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தார் போலும் என்று நையாண்டி செய்கின்றனர் காவல் துறையினர். மெதுவாகக் காவல்துறையினரிடம் சென்று யார் அந்த மகேசுவரப் பெருமானோ என்று கேட்டபோது, சீச்சீ அந்த ஆளுக்கு இது எல்லாம் எட்டாதவிசயம். அவர் இல்லை என்று உறுதிப்படுத்தினராம். அப்படியானால் ஆசாமி யார்?

## எதையும் செய்யட்டும் நான் வந்தவுடன் அனைத்தும் கான்சல்

மலையகத்தில் இப்பொழுது இளைஞர், யுவதிகள் மத்தியில் ஒரே குஷி. எத்தனையோ சகாப்தத்தின் பின் இப்போது நேர்முகப் பரீட்சைகள் நடக்கின்றன. வேலை கிடைக்காவிட்டாலும் பாதகம் இல்லை, இத்தனை ஆயிரம் பேர் உயர் தராதரம் உடையவர்கள் என்பதையாவது வெளி உலகுக்குக்காட்டி விட்டார்களே என்ற ஒரு மகிழ்ச்சி.

ஆனால், இந்த மகிழ்ச்சி அதோ பாய்கிறோம், இதோ பாய்கிறோம் என்று பாசாங்கு காட்டுபவர்களுக்குப் பெரிய எரிச்சலை ஏற்படுத்திவிட்டதாம்.

இவ்வளவு காலமும் மலையகத்தில் இருப்பது மடையர்கள் கூட்டம் தான் என்று வெளி உலகுக்குக்காட்டி, மாடுமேய்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரு பயங்கர அடியாகிவிட்டதாம். எதையும் செய்யட்டும். கடைசியில் ஸ்ரீபாத கல்லூரியில் காலைவாரிவிட்டதைப் போன்று செய்கிறோமா, இல்லையா பார் என்கின்றனராம்.

எப்படித் தெரியுமா? ஸ்ரீ பாத கல்லூரியில் 100 வீதம் தமிழ் மாணவர்களுக்கே என்று மலைச்சந்திரன் போராட்டம் நடத்தியபோது, அது சரிப்பட்டு வராது 25 வீதம் பெரும்பான்மையினருக்கு வழங்கப்படவேண்டும் என்று கூறி பெற்றுக்கொடுத்து, இப்போது பத்தனை ஸ்ரீ பாத கல்லூரியையே அடிக்கடி மூடவைக்கும் சாதனை படைத்தவர்கள் இல்லையா?

இப்பொழுது தோட்டத்துரைமார் உறுதிப்படுத்திய தோட்டப்புற இளைஞர், யுவதிகளுக்கு நேர்முகப்பரீட்சைகள் நடக்கின்றன. முற்று முழுதும் மலையக இளைஞர், யுவதிகளே நியமனம் பெறுவர் என்பது உறுதியாகிவிட்டது.

விவேகம் உள்ள படித்த பரம்பரை மலையகத்தில் காலடி எடுத்து வைத்துவிட்டால், பரம்பரையாக நடத்திவந்த ஏமாற்று நாடகத்தை தொடரமுடியாத நிலை ஏற்படும். ஒரு வேளை தலைமைக்கே ஆபத்து வந்துவிடும் என்ற பீதி ஏற்பட்டு விட்டதாம். இதனால் புதுக்கதை ஒன்றை அவிழ்த்து விட்டுள்ளனராம். அதாவது நாங்கள் வந்தவுடன் இதை எல்லாம் கான்சல் செய்து புதிதாக விண்ணப்பம் கோருவோம் என்கின்றனராம்.

இதைக் கேள்விப்பட்ட இளைஞர் கூட்டம், அப்படி ஏதும் நடந்துவிட்டால் மலையகத்தில் நெருப்பு எரியும் என்று கொதித்துக் கொண்டிருக்கின்றார்களாம்.

இந்தக் கொதிப்பும் நியாயமானது தானே எனப் பெரியவர்களும் இளசுகளுடன் சேர்ந்து கொண்டனராம்.

சக்கை போடு போடு ராசா!

## தலைமைக்கே கதவடைப்பவர்கள் சமூகத்தைக் காப்பாற்றுவார்களா?

கிழக்குச் சீமைக்குத் தனித்துவத் தலைவர் வரவே கூடாது. அந்தத் தலைமையை ஏற்க மாட்டோம் என ஆர்ப்பாட்டமும், கதவடைப்பும் செய்தனர்.

இந்தக் கதவடைப்புக்கு எல்லாம் கதாநாயகனாக இருந்து நடத்தியவர் கல்லுக்கே குடாவான பிரதேசத்தின் அலியானவர் தானாம்.

அண்மையில் இந்த அலியானவரும், தனித்துவ நாயகரும் நேருக்கு நேர் அதியுயர் மன்றில் சந்திக்க நேரிட்டது. சபை என்றும் கூடப்பாராமல் நீண்டநேரம் உரையாடிக் கொண்டிருந்தனர்.

என்னடா, இது கிழக்கில் கதவடைக்கின்றார், கொழும்பில் கைகொடுக்கின்றார் யாரைத்தான் நம்புவதோ... என்று நண்பர்கள் வியந்தனர்.

''என்ன ஐயா அங்கே வரவேண்டாம் என வாதாடி பிரதேச வாதத்தைக் கிளப்பியவருடன் பெரிய மாநாடு ஒன்றை நடத்தினீர்களே'' என்றனர்.

''எப்படிப் பார்த்தாலும் எல்லோரும் சகோதரர்கள். குழந்தை மடியில் சிறுநீர் கழித்துவிட்டது என்பதால் தூர எறிந்து விட முடியுமா? சிறுசுகள் அப்படித்தான்.

என்ன செய்வது ஒரு பக்கம் அனுதாபம், மறு பக்கம் கவலை.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தோட்டத்தில் வளர்ந்த பயிர்கள் இப்படித் திசைக்கு ஒன்றாகப் பிரிவதுதான் கவலை. என்றாலும் தலைமைக்கே கதவடைப்பவர்கள் நாளை எப்படிச் சமூகத்தைக் காப்பாற்றப்போகின்றனர்? இதே நிலை அவர்களுக்கும் வராதா? என்று கவலைப்பட்டார் தனித்துவ நாயகன்.


சுவிஸில் உங்கள் அபிமான

சுடர்ஒளி

விளம்பர முகவர்

MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND



**அனுமதி - வெற்றிடங்கள்**

**பாலர் வகுப்பு தொடக்கம் London O/L, A/L வரை.**

கணிதம், உயிரியல் விஞ்ஞானம், பௌதிகம், வர்த்தகம், P.T Teachers, ஆங்கில பட்டதாரிகளும், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் Nursery & Primary ஆசிரியர்கள். Clerks & Accounts Clerk விண்ணப்பங்களும் கோரப்படுகின்றன.

**KINGSTON COLLEGE INTERNATIONAL**

84, De La Salle Road, Mutwal. ☎2527111
40 / 8, Dharmarama Road, Wellawatte. ☎2582497
31, Samudrasanna Road, Mt. Lavinia. ☎4204047
Sri Madura Garden, 573 / 1, Main St, Matale. ☎066-2230229

LOTUS



**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**

**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை விணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

**Sexual Disorders** (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை விணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் *(முத்திரை செலவுடன்)* விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

ஆகஸ்ட் 20 - 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
**Hot Line: 0777 569205**

**கல்முனையில்..**

செப் 04 – 05 ஆம்
திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பாமசி கல்முனை
Tel No. 067 2229329
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**

செப் 11 – 12, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**

செப் 13 – 18 வரை
A.S.N. சுற்றுலாவிடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



**பாலியல் பலவீனத்திற்கு ரிஷி அஜமாமிச லேகியம்**

**தேவையில்லை வயாகரா நம்பிக்கையுடன்**
**பாலியல் பலவீனத்திற்கும், ஆண்மைக்கும்,**
**வீரிய விருத்திக்கும் ரிஷி அஜமாமிச லேகியம்**
**ரூபா.250/– தங்கபஸ்பம் கலந்தது ரூபா 1475/–**

தங்கபஸ்பம் தனியாகவும் பெறலாம்

மூல வியாதியா ரிஷி லேகியம் பாவியுங்கள்.
உள்மூலம், வெளிமூலம் இவற்றை சுகப்படுத்தும்
ரூபா. 250/–



**ஞானசுந்தர வைத்தியசாலை**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி : 2421398



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

ஆகஸ்ட் 23 – 29, 2004



85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


## ஜனாதிபதியால் முடியுமா?

கடந்த ஆண்டு நவம்பர் முற்பகுதியில், அப்பொழுது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா சென்றிருந்த சமயம் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் திடீர் என மூன்று அமைச்சுக்களை தனது பொறுப்பில் எடுத்துக் கொண்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அந்த மூன்று அமைச்சுக்களில் பாதுகாப்பு அமைச்சும் ஒன்று. பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றதுக்கு ஜனாதிபதி அப்பொழுத தெரிவித்த காரணம் நாட்டின் பாதுகாப்பு சீர்குலைந்து விட்டது என்பதுதான்.

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்பு ஆறுமாதங்களில் 28 ஆயிரம் பெரும் குற்றங்கள் நாட்டில் இடம்பெற்றுள்ளன என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றை வெளியிட்டவர் எதிர்க்கட்சி உறுப்பினர் லஷ்மன் யாப்பா தான். நாடாளுமன்றில் ஒத்திவைப்பு வேளையில், நாட்டின் பாதுகாப்பும் இடம்பெறும் கொலைகளும் தொடர்பான ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்து உரையாற்றும் போது அவர் இந்த புள்ளி விவரங்களை வெளியிட்டார்.

ஆறுமாதகாலத்தில் 28 ஆயிரத்து 18 பாரிய குற்றச் செயல்கள் நாட்டில் இடம் பெற்றுள்ளன. 617 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். 417 கடத்தல் சம்பவங்களும் 519 தீவைப்புச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. 817 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 8,414 வீடுடைப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

ஆகவே, இந்த அரசில் பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக் குரியதாகிவிட்டது என்ற முடிவுக்கே வரவேண்டி உள்ளது. பிரதமரின் தொகுதியிலேயே மரண வீடு ஒன்றில் நான்கு பேர் மனிதாபிமான மற்ற முறையில் கட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். அந்த வீட்டில் பிரேதத்தின் மீதும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன.

எந்த ஒரு நாட்டிலும் நடைபெறாத மிக மோசமான சம்பவங்கள் தற்பொழுது நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த குற்றச் செயல்கள் அதிகரிப்புடன் விலைவாசி உயர்வு, சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் ஆகியவை நாட்டில் ஒரு நிச்சயமற்ற நிலைமையைத் தோற்றுவித்து வருகின்றன.

நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும் பான்மையுடன் பதவியில் இருந்த அரசாங்கத்தைக் கலைத்துவிட்டதன் பலனை ஜனாதிபதி தற்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்.

விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபு அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாக இருந்த சமயமே பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களை முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசியமிருந்து ஜனாதிபதி தன்வசம் எடுத்துக் கொண்டார்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் அன்று உருவான தடங்கல் தற்பொழுதும் எட்டுமாதங்கள் கடந்த நிலையிலும் நீடித்து வருகிறது. சமாதானப் பேச்சுக்கள் முற்றாக ஸ்தம்பிதம் அடையும் நிலைமை உருவாகி வருகிறது.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் தடையைத் தாண்டுவதற்கு தாம் எழுபத்தைந்து வீதம் வந்துவிட்டார் என்றும் புலிகள் மிகுதி இருபத்தைந்து வீதத்துக்கு வர மறுக்கின்றார்கள் என்றும் ஜனாதிபதி குற்றஞ்சாட்டுகிறார்.

ஜனாதிபதியின் குற்றச்சாட்டு அர்த்தமற்றது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகளை அரசிடம் சமர்ப்பித்தது மூலம் புலிகள் நூறு சதவீதம் சமாதானப் பேச்சில் ஏற்பட்டுள்ள தடைகளைத் தாண்ட முன்வந்துவிட்டார்கள். இனி அரசு பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியது தானே!

பேச்சுக்களை ஆரம்பிப்பதில் கூட்டமைப்பு அரசுக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை மூடி மறைத்துக் கொண்டு புலிகள் மீது குற்றம் சுமத்துவது அர்த்தமற்றது. நாட்டு மக்களைப் பாதுகாக்க முடியாத ஜனாதிபதியால் எப்படி நாட்டை சரியான பாதையில் இட்டுச் செல்ல முடியும்.

# இன்னும் எத்தனை நாட்களுக்கு அமைதி? அதிர்ச்சி தரும் அச்சுறுத்தல்கள்!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைமைப்பதவியில் இருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விலகியதும் சமாதான முயற்சிகளில் ஏதாவது ஒரு திருப்பம் ஏற்படக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்பார்க்கப்பட்டது போன்றே, வடக்கு – கிழக்கிற்கான தன்னாட்சி அதிகாரசபை குறித்து புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தாம் தயார் என்று ஜனாதிபதி அறிவித்தார்.

அதே சமயம் சமாதான முயற்சிகளை மீண்டும் வந்து ஆரம்பிக்குமாறு நோர்வே தரப்பினருக்கும் அழைப்பு விடுத்தார். இவற்றையெல்லாம் முட்டுக்கட்டை தீருவதற்கான ஏதோ ஒரு அறிகுறியாகவே மக்கள் கருதினர்.

ஆனால், தற்பொழுது ஏமாற்றம் தான் எஞ்சி இருக்கிறது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து அரசும் ஒரு யோசனையைச் சமர்பிக்கப்போவதாக அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் ஏற்கனவே அரசு சார்பாக இது குறித்த யோசனை புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டு புலிகளும் தமது யோசனைகளை சமர்ப்பித்து விட்டனர். இனி செய்ய வேண்டியது இது தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியது தான்.

தற்பொழுது அரசு தானும் ஒரு மாற்று யோசனையைத் தயாரிக்கப்போவதாகத் தெரிவித்திருப்பது காலத்தை இழுத்தடிக்கும் நோக்கம் என்பதில் சந்தேகம் இல்லை. புலிகள் இதனை நிராகரித்துவிட்டனர். சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை, அரசின் அறிவிப்பு மேலும் குழப்பிவிட்டிருப்பதாக புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச் செல்வன் விசனம் தெரிவித்துள்ளார்.

இப்படியான நிலையில் பிரச்சினையை


சந்திரிகா

மேலும் சிக்கலாக்கும் நடவடிக்கையில் ஜனாதிபதியும் ஜே.வி.பியினரும் ஈடுபட்டுள்ளனர். பேரினவாதத்தின் வெளிப்பாடுகள் தான் இவை.

அரசும் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் காலதாமதம் அதிகரிக்குமானால் இரு தரப்பினருக்கும் இடையிலான நம்பகத்தன்மை சீர்குலைந்து சமாதான முயற்சியில் இடைவெளி மேலும் அதிகரித்துவிடும் என்று கடைசியாக இலங்கை வந்த சமயம் நோர்வே பிரதி வெளிவிகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் எச்சரித்திருந்தார்.

தற்பொழுது நிலைமை மோசம் அடைந்து சமாதான முயற்சிகள் முற்றாக ஸ்தம்பிக்கும் ஆபத்து உருவாகி வருவது தெரிகிறது. இதற்கு ஜனாதிபதியும் அரசும் தான் காரணம்.

### ஜனாதிபதியின் அச்சுறுத்தல்

யு.பி.ஐ. எனப்படும் யுனைட்டட் பிரஸ் இன்டர் நஷனல் என்ற செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த ரவி ஆர்.பிரசாத்துக்கு ஜனாதிபதி கடந்த வாரம் வழங்கிய பேட்டியில், புலிகளின் உட்பகையால் எழுந்துள்ள சண்டை நாட்டின் ஸ்திர நிலைக்கு ஆபத்தை ஏற்படுத்துமானால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரச படைகள் செல்ல உத்தரவிடுவேன் என்று எச்சரித்துள்ளார்.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி, யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்பு ஜனாதிபதியிடம் இருந்து வந்துள்ள பெரும் மிரட்டலாக இது கருதப்படுகிறது.

கிழக்கு நிலைமை குறித்தே ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். ஆனால், கிழக்கு நிலைமையை மோசமாக்கியவர்கள் யார் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஏற்கனவே முடிந்து போன கருணா விவகாரத்தை தனக்குச் சாதகமாக ஊதிப் பெருப்பித்துப் பயன்படுத்தியதன் பலனையே தற்பொழுது அரசு அனுபவித்துக்கொண்டிருக்கிறது.

பாதுகாப்பு நிலைவரம் பற்றிய தனது வாராந்த கட்டுரையில் இராணுவ விமர்சகரான இக்பால் அத்தாஸ், கருணா பற்றிய பரபரப்புத் தகவல்களை கடந்த வாரம் வெளியிட்டிருந்தார். கருணாவின் ஆட்டம் முடிந்து விட்டது என்பது தான் அது. தமிழ் தேசியத்துக்கு பெரும் குந்தகம் விளைவிக்க முயன்ற கருணா ஆயுதங்களோ உதவி ஆட்களோஇன்றி வெறுங்கையுடன் தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளுடன் நாட்டில் இருந்து வெளியேறிவிட்டார்.

ஒரு வங்கிக் கணக்கை திறக்க அல்ல, ஒரு வங்கியையே திறக்கக்கூடிய பணம் அவரிடம் உள்ளது. 14 வாரங்கள் கொழும்பில் இராணுவப் பாதுகாப்பில் அவர் இருந்திருக்கிறார். அரச தரப்பை நம்பி களத்தில் இறங்கிய கருணா ஏமாற்றத்துடன் நாட்டில் இருந்து வெளியேற வேண்டிய தாயிற்று என்று பல தகவல்களை இக்பால் அத்தாஸ் வெளியிட்டிருக்கிறார்.

ஆகவே ஜனாதிபதி ஒன்றை மறந்துவிடக் கூடாது. கருணா விவகாரம் முடிந்துபோன கதையாகிவிட்டது. கருணா விவகாரத்தை வைத்து லாபம்தேட அரசு முற்பட்டதனால் ஏற்பட்டவையே தற்பொழுது கிழக்கிலும் கொழும்பிலும் நிகழ்ந்து வரும் சம்பவங்கள்.

### ஜே.வி.பியின் கடும் போக்கு

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு ஜே.வி.பி தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

சமாதானத்தின் உண்மையான எதிரிகள் யார் என்ற தலைப்பில் ஜே.வி.பி தென்னிலங்கையில் தொடர் கருத்தரங்குகளை நடத்தி வருகிறது.

மக்கள் உயிர்த்தியாகம் செய்யவேண்டிய காலம் வந்துவிட்டதாகவும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கு எதிராக மக்களைத் திரட்டப்போவதாகவும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ஸ கூறி வருகிறார்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்த தனது யோசனைகளையும் அரசு தயாரித்துவருவதாக தெரிவித்த அரசாங்கத்தின் சமாதானச் செயலாளர் நாயகம் ஜயந்த தனபாலவுக்கும் விமர் வீரவன்ஸ சவால் விடுத்துள்ளார். அரசின் முக்கிய பங்காளிக்கட்சியான ஜே.வி.பிக்குத் தெரியாது அப்படி ஒரு யோசனையை எப்படி தயாரிக்க முடியும் என்று விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பி உள்ளார்.

ஆகவே இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் ஒருமைப்பாடு கிடையாது என்பது மட்டும் உறுதியானது. ஜே.வி.பி பகிரங்கமாக எதிர்த்துக் கொண்டிருக்கும் போது அந்த எதிர்ப்பையும் மீறி இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடந்துவது சாத்தியமானது அல்ல. ஜே.வி.பியும் தனது நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வருவதற்கான அறிகுறியும் இல்லை.

### பீரிஸ் கருத்து

கடந்த வாரம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் எதிர்க்கட்சிகளின் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் கருத்துத் தெரிவிக்கையில், இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாகவோ சமாதான முயற்சிகள் தொடர்பாகவோ அரசாங்கத்துக்குள் இணக்கப்பாடு இல்லை, முரண்பாடே காணப்படுகிறது என்கிறார்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பில் மாற்றுத் திட்டம் ஒன்றை அரசு சமர்ப்பிக்கப்போகிறதா? இதன் உண்மை நிலை என்ன? என்றும் கேள்வி எழுப்பி உள்ளார்.

### தேசிய பிக்கு முன்னணியும் களத்தில்

இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிராக தேசிய பிக்கு முன்னணியும் தற்பொழுது களத்தில் இறங்கிவிட்டது. தேசிய பிக்கு முன்னணி இம்மாதம் 24 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் விசேட மாநாடு ஒன்றை நடத்த உள்ளது.


தமிழ்ச் செல்வன்

இந்த மாநாட்டுக்கு சகல மாவட்டங்களையும் சேர்ந்த பௌத்த பிக்குகள், பொதுமக்கள், அரசியல் வாதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டாம் என்று இந்த மாநாட்டில் கோரிக்கை விடப்படும்.

கொம்பனி வீதி நிப்போன் ஹோட்டலில் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தேசிய பிக்கு முன்னணித் தலைவர் கலவல்கல சந்தாலோக்க தேரர் பேசுகையில், புலிகள் சமர்ப்பித்துள்ள யோசனைகளின் படி பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் தமிழீழம் உருவாகிவிடும். அதன் பின்பு நாட்டில் சமாதானமே இருக்க மாட்டாது என்று எச்சரித்துள்ளனர்.

முப்படைகளாலும் இலட்சக்கணக்கான மக்களாலும் இரத்தம் சிந்திப் பாதுகாக்கப் பட்ட இந்த புனித பூமியை துண்டாடுவதற்கு தேசிய பிக்கு முன்னணி ஒருபோதும் இடம் அளிக்காது.

புலிகள் சமர்ப்பித்துள்ள தன்னாட்சி அதிகார சபை யோசனையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டால் நாட்டைப் பாதுகாப்பதற்கு


விமல் வீரவன்ச

தேரர்கள் மரணத்தை சந்திக்கக்கூடத் தயாராக இருக்கின்றார்கள் என்று சந்தாலோக்க தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தாமதம் அதிகரிக்க இடைவெளி அதிகரிப்பு

ஆகவே சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதில் கால தாமதம் அதிகரிக்க அதிகரிக்க தென் இலங்கையில் எதிர்ப்பும் அதிகரித்து வருவது புலனாகிறது. தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிப்பதில் ஜே.வி.பியே பிரதான தடைக்கல்லாக இருக்கப்போகிறது.

ஜே.வி.பிக்கு அரசு அடிபணியப் போவதில்லை என்று ஆளும் கட்சியின் பிரதம கொரடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கூறுகிறார்.

ஜே.வி.பியின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு அரசாங்கத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் கூறுகிறார். ஆனால் அரசு தனது அதிகாரத்தைப் பாதுகாப்பதற்காக ஜே.வி.பியிலேயே முற்று முழுதாகத் தங்கி இருக்கும்போது ஜே.வி.பியை எப்படி எதிர்க்கமுடியும்?

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறவில்லை. ஒரு வருடமும் நான்கு மாதங்களும் கழிந்துவிட்டன. நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது.

சமாதான முயற்சிகள் முற்றாகவே ஸ்தம்பிதம் அடையும் கட்டம் நெருங்கி வருகிறது.

-சஞ்சாரன்-




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# நிலவளம் நிறைந்த வலிகாமம் வடக்கு மண்ணும் 'மாசிக் கொருக்கால் ஆடிக் கொருக்கால்' போய்வரும் மக்களும்

ஆடி அமாவாசை விரதநாள் கடந்த 15.08.2004 அன்று ஞாயிற்றுக்கிழமை சைவ சமயிகளால் அனுஷ்டிக்கப்பட்டது. யாழ்ப்பாணக்குடாநாட்டைப் பொறுத்தவரை மாவிட்டபுரம், கீரிமலை ஆகிய புனித பிரதேசங்களை முக்கியத்துவப்படுத்தும் நாளாக ஆடி அமாவாசை இருந்து வருகிறது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம் ஆகியவற்றின் மூர்த்திகள் கீரிமலையில் எழுந்தருளி தீர்த்தமாடுதல் ஆடி அமாவாசையிலேயே இடம்பெறுகிறது. அதேவேளை யாழ்ப்பாணக் குடா நாட்டின் சைவமக்கள், இறந்துபோன தமது முதாதையரை நினைந்து விரதமிருந்து, பிதிர்கடன்களை நிறைவேற்றுவதற்கு இத்தினத்தில் கீரிமலைக்குச் செல்வர். ஆடி அமாவாசை தினம் இறந்தவர்களை நினைத்து பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவதற்குரிய தினமாக சைவமக்களால் கடைப்பிடிக்கப்படுகிறது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம் கோயில் ஆகியன, வலிகாமம் வடக்குப் பிரதேசத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு பழம் பெரும் ஆலயங்களாகும். கடந்த பத்துவருடங்களுக்கும் மேலாக வலிகாமம் வடக்கு, இலங்கை இராணுவத்தால் உயர்பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டு, அதற்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் பேணப்பட்டு வருகிறது. வலிகாமம் வடக்குப் பிரதேசத்தின் வளச்செழிப்பு மிக்க கிராமங்களான மயிலிட்டி, வசாவிளான், பலாலி, மாவிட்டபுரம், கீரிமலை முதலிய கிராமங்களில் இருந்து இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உயர்பாதுகாப்பு வலயத்தின் பிரகடனத்தால் வெளியேற்றப்பட்டன. முற்றிலும் சைவ ஆலயங்களும், சைவப்பண்பாடும் நிறைந்த வலிகாமம் வடக்கு - மக்கள் செறிந்து, சீரும் சிறப்புடனும் வாழ்ந்த குடியிருப்புப் பிரதேசமாகும். தற்போது இராணுவக் காவலரண்களாலும், முட்கம்பிச் சுருள்களாலும், பற்றைக்காடுகளாலும் சூழ்ந்து அழகிழந்து அழிந்து கிடக்கிறது.

### இருப்பிடமிழந்த வலிகாமம் வடக்கு மக்கள்

இடம்பெயர்ந்த இருபதினாயிரம் குடும்பங்களில் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இல்லிடமின்றி யாழ்ப்பாணத்திலும், ஏனைய இடங்களிலும், உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் இரவல் வாழ்வு வாழ்கின்றனர். இன்னும் பல குடும்பங்கள் யாழ். குடாநாட்டில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் வாழ்கின்றனர். இன்னும் ஒரு சில குடும்பங்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றுவிட்டனர்.

இவ்வாறு ஆங்காங்கு சிதறிவாழும் வலிகாமம் வடக்கு குடும்பங்களின் பெரும்பாலான அங்கத்தவர்களை ஆடி அமாவாசையன்று மாவிட்டபுரத்திலும், கீரிமலையிலும் காணமுடிந்தது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தீர்த்தோற்சவத்தை கீரிமலையில் காண்பதற்காக, வெளிநாடுகளுக்குச் சென்றுவாழும் யாழ்ப்பாண மக்களில் பலர் வந்திருந்தனர். வலிகாமம் வடக்கு மக்கள் தமது வாழிடங்களை என்றைக்கும் மறக்கமாட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. யாழ் குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும், தமக்கு வளமும், வாழ்வும் நல்கிய வலிகாமம் வடக்கு மீண்டும் செழிப்புடனும், எழுச்சியுடனும் என்றைக்குத் தனது பழைய வாழ்வைத் தொடங்கும் என்றே காத்திருக்கின்றனர்.

### கீரிமலையில் கூடிய ஆயிரக்கணக்கன மக்கள்

ஆடி அமாவாசை விரத நாளான கடந்த ஞாயிறு கீரிமலையில் சுமார் எழுபத்தையாயிரம் மக்கள் கூடினர். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், கீரிமலை நகுலேஸ்வரம் ஆகியவற்றின் மூர்த்திகள் கீரிமலையில் எழுந்தருளி தீர்த்தமாடியதை அடுத்து அங்கு கூடிய அடியார்கள் தீர்த்தமாடி, தமது முதாதையர் நினைவாகப் பிதிர்கடன்களை நிறைவேற்றினர். வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் ஆயிரக்கணக்கான மக்கள் அனுமதிக்கப்படும் முக்கியமான இரு தினங்களாக மாசிமாதம் மகாசிவராத்திரி தினமும், ஆடி மாத அமாவாசைத் தினமும் இருந்து வருகின்றன. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கொடியேறி மகோற்சவகாலம் ஆரம்பித்தால், பக்தர்கள் மாவிட்டபுரம் கோயிலுக்கு மட்டும் செல்வதற்கு இராணுவத்தால் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறாக வலிகாமம் வடக்கு மக்களும், யாழ் குடாநாட்டு ஏனைய பிரதேசங்களின் மக்களும் தமது முன்னாள் குடியிருப்புப் பிரதேசத்துக்குச் செல்வதற்கான சந்தர்ப்பங்கள் அனைத்தையும் உணர்வுபூர்வமாக மனத்திருப்தியளிக்கும் தினங்களாகவே கருதுகின்றனர்.

இம்முறை ஆடி அமாவாசை தினத்தன்று தெல்லிப்பழை, சேந்தாங்குளம் இராணுவ முன்னரங்க நிலைகள் ஊடாக மோட்டார் சைக்கிள்கள், ஏனைய வாகனங்கள், வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் ஆகியனவற்றில் மக்கள் கீரிமலைக்குப் பயணித்தனர். துவிச்சக்கர வண்டிகளிலும் நூற்றுக்கணக்கான மக்கள் பயணித்தனர்.

இராணுவ சோதனை நிலையங்களில் உடற்சோதனைகளை படையினர் மேற்கொண்டனர். அதன் பின்னர் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் செல்வதற்கு மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

கொழுத்தும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பக்தர்கள் கீரிமலையில் கூடியிருந்ததைப்பார்க்கும் போது தமக்கு உயிரும், ஊட்டமும் தந்து வளர்த்த தமது மண்ணை அந்த மக்கள் இன்னும் இன்னும் புனித பூமியாகவே கருதுகின்றனர் என்பது மனதில் பதிந்தது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தங்கள் மண்ணில் தங்கள் காலடிச் சுவடுகளைப் பதிப்பதையே மக்கள் விரும்புகின்றனர்.

### நாற்பத்தைந்து கிராமசேவகர் பிரிவுகள்

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயம் என்று இலங்கைப் படையினர் பிரகடனப்படுத்திய பிரதேசத்துள் மொத்தமாக நாற்பத்தைந்து கிராமசேவகர் பிரிவுகளில் மக்கள் வாழ்ந்து வந்தனர். அதில் பன்னிரண்டு கிராமசேவகர்கள் பிரிவுகளில் மக்கள் பூரணமாக மீள குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஐந்து கிராமசேவகர் பிரிவுகளில் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் மட்டுமே மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். வலி - வடக்கின் மிகுதி இருபத்தெட்டு கிராமசேவகர் பிரிவுகளிலும் மக்கள் இன்னமும் மீளக் குடியேற அனுமதிக்கப்படவில்லை. மக்கள் மீளக் குடியேற இன்னமும் அனுமதிக்கப் படாத இருபத்தெட்டு கிராம சேவகர் பிரிவுகளும் தற்பொழுது அதியுயர் பாதுகாப்பு வலயமாக கருதப்படுகின்றன.

### இராணுவ உபாயங்களா? மனிதாபிமானப் பிரச்சினைகளா?

மீன்பிடித்துறை, விவசாயம் ஆகிய உற்பத்தித்துறைகளும், சீமெந்து உற்பத்தித் தொழிற்சாலை உள்ளிட்ட கைத்தொழில் துறைகள் என்பனவும், வலிகாமம் வடக்கு பிரதேசத்துடன் தொடர்புபட்டுள்ளன. யாழ்ப்பாணக் குடாநாட்டினது பொருளாதாரத்தை மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக இலங்கைத்தீவினது பொருளாதாரத்துக்கே கணிசமான பங்களிப்புச் செய்த வலிகாமம் வடக்குப் பிரதேசம் காடுமண்டி அழிந்து இறந்து கிடக்கிறது. இப்பொழுதுள்ள நிலையில் இப் பிரதேசத்தின் பொருளாதார முக்கியத்துவம் கருதி முன்வைக்கப்படும் எக்கோரிக்கைகளும் பலனிழந்து போகின்றன. இயல்பாகவே போரிட்ட இருதரப்பாரினதும் இராணுவ உபாயங்களுடன் தொடர்புபட்ட பிரதேசமாக இது உள்ளதாகவே தென்னிலங்கை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். எனினும் இப் பிரதேசங்களில் தமது வாழ்வையும், குடியிருப்புக்களையும் கொண்டிருந்த மக்களது மனிதாபிமானப் பிரச்சினைகளும், பொருளாதாரப் பிரச்சினைகளும் முக்கியத்துவமற்ற விடயங்கள் அல்ல.

### சட்ட நடவடிக்கைகள் ஆரம்பம்

வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் பிரதிநிதிகள் 13-08-2004 வெள்ளிக்கிழமை அன்று தெல்லிப்பழையில் நடத்திய கூட்டமொன்றில் தமது முன்னைய வாழிடங்களுக்குச் சென்று மீளக் குடியமர்வது தொடர்பாக, தாம் மேற்கொள்ளவேண்டிய சட்டபூர்வமான நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்துள்ளனர்.

யாழ் மாவட்டம் வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பெருமளவு குடியிருப்புப் பிரதேசங்களைப் படையினர் தம்வசம் வைத்துள்ளனர். இந்நிலையில் அப்பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் இருபதாயிரம் குடும்பங்கள் தங்களைத் தங்களின் சொந்த வீடுகளில் குடியமர வழிசெய்யுமாறு கோரும் மனுக்களைத் தனித்தனியாகக் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு அனுப்பி வைக்கத்தீர்மானித்திருக்கிறார்கள்.

இதற்கு முன்பாக, வலிகாமம் வடக்கில் பன்னாலைப் பகுதியைச் சேர்ந்த சிவஞானசம்பந்தர் என்பவர், தமது வீட்டில் குடியிருக்க முடியாமைபற்றி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமைமீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு உயர் நீதிமன்றில் விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தமது வீட்டில் சென்று குடியிருக்கத் தமக்கு ஆட்சேபனை இல்லை என்று எதிர்மனுதாரரான படைத்தரப்புத் தெரிவித்திருந்தது. படைத்தரப்பின் 'அவர் குடியிருக்க ஆட்சேபனை இல்லை' என்ற அறிவிப்பால் ஏனைய மீளக்குடியேற விரும்பும் குடும்பங்களுக்கு எவ்வித நற்பலன்களும் இல்லாமற்போய்விட்டது. குடியிருக்க அனுமதிக்கப்பட்ட சிவஞானசம்பந்தரோ, அவரது குடும்பத்தினரோ தன்னந்தனியனாக ஒரு இராணுவ வலயத்துக்குள் சென்று குடியிருப்பதும் சாத்தியமில்லை.

முதலில் மனுச் செய்யப்படும் என்றும், அது பலன் தராதுவிட்டால் இருபதினாயிரம் குடும்பங்களின் சார்பிலும் - சிவஞானசம்பந்தர் போன்று - உயர்நீதிமன்றத்தில் அடிப்படையுரிமை மீறல் வழக்குத் தொடரப்படும் என்றும் வலிகாமம் வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. மனுச் செய்தல் தொடர்பாகவும், தேவையேற்படின் அடிப்படையுரிமைமீறல் வழக்குத் தொடர்வது சம்பந்தமாகவும் உரிய சட்ட ஆவணங்களைத் தயாரிப்பதில் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிக்ள் உதவிகளை நல்கி வருகின்றனர்.

ஆடி அமாவாசைக்கும், சிவராத்திரிக்கும், அந்திரட்டிக்கும் மட்டுமே போய்வரும் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு எப்போது திரும்பிச் செல்வார்களோ?

-யாழ். ஆத்மா-

**திருத்தி வாசிக்கவும்**

ஒகஸ்ட் 16 - 22. 2004 வார இதழ் 8ஆம் பக்கத்தில் 'ஜே. வி. பியின் கடும் வைரித்தனமும் விடுதலைப் புலிகளின் விடாப்பிடியும்!' என்ற தலைப்பில் 'ஜே. வி. பி. அரசியல் தீர்வு வழங்காது' என்ற உபதலைப்பில் யாழ் ஆத்மா எழுதிய கட்டுரையில், ''சர்வதேச ஒழுங்குக்கு ஏற்ப தனது அரசியல், பொருளாதார யுக்திகளில் நெகிழ்ச்சிகளையும், மாற்றங்களையும் செய்யத் துணிந்து நிற்கும் என எதிர்பார்க்கப்படும் ஜே. வி. பி - இலங்கைத் தமிழ் மக்களுக்கு, பேச்சுவார்த்தைகளினூடாக ஒரு பொருத்தமான அரசியல் தீர்வை - தமிழ் மக்களுக்காக பேரம்பேசும், பிரதிநிதித்துவம் செய்யும், விடுதலைப் புலிகள் திருப்தி அடையும் வகையில் வழங்கிவிடுமா? அதற்குரிய விட்டுக்கொடுப்புக்களையும், நெகிழ்ச்சிப் போக்கையும் ஜே. வி. பி செய்துகாட்டுமா?'' என்பதே சரியானதாகும். அச்சுப்பிழை காரணமாக 'விடுதலைப் புலிகள் திருப்தியடையும் வகையில் வழங்கிவிடும்' என்று தவறாக பிரசுரிக்கப்பட்டுவிட்டது. திருத்தி வாசிக்கவும்.

-ஆசிரியர்-

உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்



K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind-S.M.P.

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வர முடியாது போனால் கடித மூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள். ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்த மின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்
(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500 gram 300/-, 250 gram 150/-
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு – 11. Tel: 2384645.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெட் குறும்பு

சில காரியங்களைச் செய்வதற்கு எமக்குச் சோம்பலாக இருக்கும். அடடா.... இதற்கெல்லாம் ஏதாவது இலகுவான வழிகள் இல்லையா என்று தோன்றும். அவ்வாறான இலகுவான வழிகள் சிலவற்றை கீழே தருகிறோம். இதனைப் பார்த்துவிட்டு ஆஹா.. சுலபமான முறையாக இருக்கிறதே என்று சொல்லி கடைகடையாக ஏறி இது இருக்கிறதா என்று கேட்டு அலையாதீர்கள். அல்லது சுடர்ஒளி அலுவலகத்துக்கு ரெலிபோன் எடுத்து இவைகளை எங்கே வாங்கலாம் என்று கேட்டுத் தொல்லை கொடுக்காதீர்கள். ஏனென்றால் இதெல்லாம் சும்மா... இணையத்தளத்தில் இருந்து இழுத்தெடுத்த கப்ஸாக்கள்... பாருங்கள்... ரசியுங்கள்.... அம்புட்டு தான்.

* பஸ்ஸிலே செல்லும் போது உட்கார இடம் கிடைக்கவில்லை. நின்று கொண்டிருக்கிறீர்கள். ஆனால் தூக்கம் வந்து விட்டது. தூங்கி அடுத்தவருக்குமேல் விழுந்து...



அவர் முறைத்துப் பார்க்க ஏன் வீண் கஷ்டம். இதோ ஒரு வழி....

* இதுவும் தூங்குவதற்கான வழி தான். ஆனால், ரயிலில் உட்கார இடம் கிடைத்து விட்டது. ஆனால் சாய்ந்து தூங்க முடியாது.



அப்படியே இருந்தபடி தூங்கும் போது சரிந்து அடுத்தவர் மேல். விழ வேண்டும். அதனைத் தடுக்க இது.

* மழைக்கு குடையைப் பிடித்தால் தலை என்னமோ நனையாது தான். ஆனால், உடம்பெல்லாம் நனைந்து கச... கசவென்று அசௌகரியமாக இருப்பதைத் தடுக்க இந்த நவீன குடை.



* சாப்பிடும் போது உணவு கொதியாகக் கொதிக்கிறது. வாயிலே வைக்க



முடியவில்லை. உடனே ஆறப் பண்ண இது..

* கண்ணிலே நோயா? டாக்டரிடம் காட்டினால் அவர் ஏதாவது மருந்தை எழுதித்தந்து இதில் இரண்டு துளிகள் மூன்று நேரம் கண்ணுக்குள் விடச் சொல்வார். ஆனால், விடுவதென்பது இலேசான காரியமா.? அதற்கு இது சுலபமான வழி.



* கடுமையான தடிமல் - மூக்காலே ஒழுகிக் கொண்டே இருக்கிறது. லேஞ்சியை வைத்து துடைக்கலாம் என்றால் எங்கே லேஞ்சி எல்லாம் நனைந்து தெப்பமாகி விடுகிறது. என்ன செய்யலாம். இதோ தலையிலே ரிசு.




* செல்லும் இடங்களில் என்ன உணவு சாப்பிடலாம்? பாண் - பட்டர். பாணையும் பட்டரையும் கையோடு எடுத்துச் சென்று பாணில் பட்டரைப் பூசிச் சாப்பிடலாம் தான். ஆனால், பட்




டரை எடுத்துச் செல்வது எப்படி? கரையும் சப்பளியும் என்று ஏகப்பட்ட சிக்கல்.... இப்படி குறியீட்டுப் பேனா வடிவில் பட்டர் இருந்தால் வேலை சுலபம்தானே...!

# கண்ணாமூச்சி



இந்தப் படத்தில் சிறிய சிறிய் வட்டங்களை இணைக்கும் கோடுகள் நேரானவையா... வளைந்தவையா? அவை வளைந்தவை போல் தெரிந்தாலும் - நேரானவை என்கிறோம் நாம். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்....?

## ஜோக்

அது ஒரு மரண நிகழ்வு. இறந்தவரை சேமக்காலையில் அடக்கம் பண்ணிவிட்ட எல்லோரும் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தனர். ஆனால், இறந்தவரின் மனைவி மட்டும் தனது கணவனின் கல்லறைக்கு அருகே அமர்ந்து விசிறியால் கணவரின் கல்லறையை விசிறத் தொடங்கினாள்.

மரண வீட்டுக்கு வந்த எல்லோரும் இந்தச் செயலைப் பார்த்து மிகவும் பரிதாபப்பட்டனர். ஆஹா இவளுக்கு தனது கணவன் மீது எவ்வளவு பாசம் என்று ஆச்சரியப்பட்டனர்.

வேறு சிலர் இவள் கணவன் மீது வைத்திருக்கும் அன்பைப் பாராட்டினர். இப்படி அல்லவா பெண்கள் இருக்க வேண்டும்... நமது மனைவியும் இருக்கிறாளே! என்று ஆதங்கப்பட்டனர்.

இன்னும் சிலர் அவளைப் பார்த்து "பெண்ணே! நீ இப்படி விசிறிக் கொண்டிருப்பது உனது கணவனுக்குத் தெரியப் போவதில்லை. அவன் இறந்து விட்டான். எனவே இது வீணான செயல். இதனை நிறுத்திவிட்டு உனது வீட்டுக்குச் சென்று அவனுக்காகப் பிரார்த்தனை செய்வது நல்லது" என்று புத்திமதி கூறிப் பார்த்தனர்.

ஆனால், அவளோ இவைகளை கவனத்தில் எடுக்காமல் தொடர்ந்து விசிறிக் கொண்டே இருந்தாள்.

அங்கே வந்திருந்த பெண் ஒருத்திக்கு இந்த பெண்ணின் செயல்மீது சந்தேகம் ஏற்பட்டது.

அழுது கொண்டிருந்தவளின் பக்கத்துக்கு சென்று மெதுவாக "இறந்த கணவரிடம் இவ்வளவு அன்பை நீ வைத்திருந்




தாயா?... உண்மையைச் சொல்" என்றாள்.

அதற்கு அழுது கொண்டிருந்த பெண் சொன்னாள்....

"எனது கணவர் இறப்பதற்கு முன்னர் என்னிடம் ஒரு சத்தியம் வாங்கியிருக்கிறார். அதாவது அவர் இறந்த பின்னர் நான் தாராளமாக இன்னொரு திருமணம் செய்து கொள்ளலாம்.

ஆனால், தன்னைப் புதைத்த கல்லறையின் ஈரம் காய்ந்ததற்குப் பின்னர்தான் அடுத்த கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று என்னிடம் சத்தியம் வாங்கியிருக்கிறார்.

அதனால் தான் அவரது கல்லறையின் ஈரம் விரைவிலே காயவேண்டும் என்பதற்காக நான் விசிறிக் கொண்டிருக்கிறேன்" என்றாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்

*கூ. உமா, வட்டக்கச்சி.*

**கேள்வி:** சில ஆண்கள் பெண்கள் பின்னால் அலைவதேன்?

**பதில்:** பூவைத் தேடி வண்டு, தேனைத் தேடி தேனீ, பாலைத் தேடி பூனை, எலும்



புத் துண்டைத் தேடி நாய் எல்லாம் அலைகின்றனவே ஏன்? அதற்காகத்தான்.

*யோ. தாரணி, ஆனைவிழுந்தான்.*

**கேள்வி:** அன்புடன் பித்தாவுக்கு! உம்மிலவாறு கோபத்துக்கு – பித்தா உமக்கு அறிவே இல்லையா? எப்ப பார்த்தாலும் உம்முடைய மனைவியைப் பற்றி பொரிந்து தள்ளிக் கொண்டேயிருக்கிறீரே. உமக்கு வெட்கமே இல்லையா?

**பதில்:** 1. வெட்கம், மானம், சூடு, சொரணை, லொட்டு, லொட்டுக்கு எல்லாமே இருந்தன. முன்னொரு காலத்தில். எப்போது எனது கையால் எனது மனைவியின் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டேனோ அன்றிலிருந்து, அதெல்லாம் இல்லாமல் போய்விட்டன.

2. இப்படி அவளைப் பற்றி ஊர் முழுக்க சொன்னாலாவது அவள் திருந்து வாள் என்று பார்த்தேன், ம்ஹும்... No chances.

3. மனதில் இருக்கும் கவலைகளை – வெளியே சொன்னால் தான் பாரம் குறையும் என்கின்றார்கள்.

*எம். அமுதினி, வட்டக்கச்சி.*


**கேள்வி:** காதலித்துவிட்டு சாதி, மதம் பார்ப்பவர்களைப்பற்றி கொஞ்சம் எடுத்துவிடும் பார்க்கலாம்?

**பதில்:** காதலித்த பெண் தனக்கு ஏற்றவள் அல்ல – அல்லது குடும்பத்துக்கு உதவாது என்று கருதினால் அல்லது காதலித்த பெண்ணைவிட அழகான, வசதியான பெண் ஒன்று மாட்டினால் அல்லது நல்ல சீதனத்துடன் ஒன்று சிக்கினால் தான், இச் சாதி, மதம், குலம், கோத்திரம் எல்லாம் பார்ப்பார்கள். ஏனென்றால் அவைகளைக் காரணம் காட்டி காதலித்தவளைக் கை கழுவி விட்டுவிடலாம் அல்லவா?

*அ. பிருந்தா, நாச்சிக் குடா.*

**கேள்வி:** பித்துக் குட்டி! உமது மனைவியை கண்கலங்காமல் கவனித்து வருகிறீரா? (பொய்சொல்லாமல் கூறவும்)

**பதில்:** ஆம். வீட்டில் வெங்காயம் உரிப்பது நான்தான்.



*இ. தேவகி, செம்பியன் பற்று தெற்கு.*

**கேள்வி:** பித்தா! இப்போதெல்லாம் ஆண் – பெண் என்ற இரு சாராரும், திருமணம் செய்து குழந்தை, குட்டி இருந்தாலும் கூட மறுபடியும் திருமணம் செய்ய வேண்டுமென்று நாயாய் அலைகிறார்கள். இவர்களையெல்லாம் என்ன செய்யலாம்?

**பதில்:** அம்மாடி, உமது கேள்வியின் ஆரம்பமே தவறு. அதென்ன இப்போதெல்லாம். இதே பிரச்சினை அப்போதெல்லாம் கூட இருந்ததுதான். அப்போது இருந்தவர்கள் கூட, இந்தப்பிரச்சினையை இப்போதெல்லாம் இப்படி நடக்கிறதே என்று உம்மைப்போல் கவலைப்பட்டவர்கள் தான். ஆனால் அப்போதயவர்களை, இப்போது கேட்டுப் பாருங்கள். ஐயையோ அப்போதெல்லாம், இப்போதுபோல நடக்கவே இல்லை என்று அழிச்சாட்டியம் பண்ணுவார்கள். ஆனால் இப்போதையை விட அப்போதுதான் இதெல்லாம் மோசமாக நடந்தது. இந்த லட்சணத்தில் நீர் என்னவென்றால், ஏதோ இதெல்லாம் இப்போது தான் நடைபெறுவது போலவும், இதற்கு முன்னர் இப்படி எதுவும் நடக்கவேயில்லை என்பது போலவும் எழுதுகிறீர். இது காலங்காலமாக – கடவுள்கள் தொடங்கி நடந்துவரும் பிரச்சினை. இதனைத் தீர்க்கவே முடியாது.

*ஆ. பேபி, முழங்காவில்.*

**கேள்வி:** கன்னத்தில் கை வைக்கக் கூடாது என்கிறார்களே ஏன்?

**பதில்:** யார் கன்னத்தில்? உமது கன்னத்தில் என்றால் அது கவலையுடன் இருப்பதாக அர்த்தம். எனவே சும்மா கவலைப்படாது, யோசித்துக்கொண்டிருக்காதே என்பதைத் தான் சூசகமாக அப்படிச் சொல்வார்கள்.

அடுத்தது அடுத்தவர் கன்னத்தில் கை வைப்பது. இதனால் பல பின்விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதால் தான் அப்படிச்சொல்கிறார்கள். இதில் நீர் எதைக் கேட்டீர்?

*சு. மதிவதனி, வாழைச்சேனை.*

**கேள்வி:** ஐனாதிபதி – தனது ஐக்கிய முன்னணி தலைமைப் பதவியிலிருந்து விலகியது ஏதாவது நன்மையைத் தராதா பித்தா?

**பதில்:** நோர்வேக்கு அவசர அழைப்பு, எதிர்க் கட்சித் தலைவருடன் சந்திப்புக்கு முயற்சி என்பவற்றைப்பார்க்கும் போது ஒரு நம்பிக்கை பிறக்கத்தான் செய்கிறது. ஆனால் சந்தேகமாகவும் இருக்கிறதே.

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான – குறும்பான – யதார்த்தமான – பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஆகஸ்ட் 29 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.





**கேள்வி:**– சின்னத்திரையா, சினிமாவா பெண்களைச் சோம்பலாக்குகின்றன?

**பதில்:**– சின்னத்திரையிலேயே பொதுவாக மதியநேரங்களில் தான்தொடர்கதைகள்ஒளிபரப்பப்படுவதனால் பெண்கள் கூடியநேரம் ரிவிக்கு முன்னால் உட்காருவதனால் சோம்பலடைகின்றார்கள்.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்தபதில் மேலே. நீங்கள் பதில் அனுப்பவேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு – 14.

*ராஜ், மீசாலை.*

**கேள்வி:** மீண்டும் தேர்தல் வருமா?

**பதில்:** அம்மையார் முன்னணித் தலைவர் பதவியிலிருந்து விலகிவிட்ட நிலையில், அவர் இனித் தன்னுடன் கூட்டுச்சேர்ந்துள்ள கட்சிகளின் எதிர்ப்புகளுக்கும், கேள்விகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய தேவை இல்லை. எனவே சுயமாக சில முடிவுகளை எடுக்க முடியும். தன்னிடமுள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அவ்வாறான சில முக்கிய முடிவுகளை எடுக்கும் போது ஜே. வி. பி. எதிர்க்கலாம். ஆனால் அந்த எதிர்ப்புக்களை அம்மையார் கணக்கெடுக்காது விடலாம். அப்போதுதான் சிக்கல்கள் ஏற்படும். அதாவது ஜே. வி. பி. அரசாங்கத்தை விட்டு விலக முன் வரலாம். அப்போது ஐ. தே. க. வின் கை ஓங்கும். ஆட்சிமாறும். ஆனால் அப்போதும் ஐ.தே.க.வுக்கு பெரும்பான்மைப்பலத்தைக் காட்ட முடியாமல் போகலாம். இவ்வாறான சிக்கல் ஏற்பட்டால் தேர்தல் வரும். ஆனால் நாலாறு மாதமாய் வேண்டி பெற்ற தோண்டியை கூத்தாடி கூத்தாடி போட்டு உடைக்க ஜே. வி. பி. விரும்புமா என்பது சந்தேகமே.

*க. கனகராசா, செல்வநகர்.*

**கேள்வி:** டியர் பித்தா, நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன். ஆனால் அவள் இன்னொருவனைக் காதலிக்கிறாள். அவளை என்வசப்படுத்த நான் என்ன செய்வது பிளீஸ்........?

**பதில்:** இதெல்லாம் தெரிந்தால், நான் ஏன் மினக்கெட்டு இருந்து உம்முடைய இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் எழுதிக் கொண்டிருக்கிறேன். யாரையாவது வசப் படுத்தப் போயிருப்பேனே. வீட்டிலே மனைவியையே வசப்படுத்தத் தெரியாமல் முழி பிதுங்கிப் போயிருக்கிறேன். என்னிடம்போய் இதனைக் கேட்கிறீரே! எதை எதை, யார் யாரிடம் கேட்பது என்ற விவஸ்தையே இல்லாத ஆளய்யா நீர்.



*து. தர்ஷினி, மீசாலை.*

**கேள்வி:** பித்தா! எனது முகத்திலே அடிக்கடி பரு வருகிறதே ஏன் பித்தா?

**பதில்:** நீர் "பரு"வப் பெண்ணாக இருந்தால் அடிக்கடி பருவரத்தான் செய்யும்.

*பே. ஜெனா, மந்துவில்.*

**கேள்வி:** டியர் பித்தா! என்னுடைய நண்பி ஒருவனைக் காதலித்து விட்டு, பின்னர் அவனைக் கைவிட்டு விட்டு இன்னொருவனைக்காதலித்து, அவனைக் கூட்டிக்கொண்டு ஓடிவிட்டாள். அவளைப் பற்றி என்ன நினைக்கிறீர் பித்தா?

**பதில்:** ஜெனா... நாம் ஒரு இடத்துக்குப் போவதற்கு பஸ்ஸிலே ஏறி இருக்கிறோம். நீண்ட நேரமாகியும் அந்த பஸ் புறப்படுவதாகத் தெரியவில்லை. என்னடா இந்த பஸ் இப்போதைக்கு புறப்படாது போலிருக்கிறதே என்று சலித்துக்கொண்டிருக்கும் போது – அருகே நின்ற இன்னொரு பஸ் அதே இடத்துக்குப் போகப் புறப்படும். அப்போது நாம் என்ன செய்வோம்... அந்த பஸ்ஸிலே ஓடிப்போய் ஏறிப் போக மாட்டோமா... அதே போல் தான் உமது நண்பியும், காத்திருந்து பார்த்திருப்பார். பழைய பஸ் புறப்படுவதாகத் தெரியவில்லை. எனவே வேறு பஸ் பிடித்துப் போய்விட்டார்.





விட்டுவிடும்.

*பா. சாஜுகுலேசனா, ஆனந்தபுரம்.*

**கேள்வி:** பிளீஸ் பித்தா! எனக்கு ஒரு ஜோக் தாருமேன்?

**பதில்:** பிரிட்டிஷ்காரர் ஒருவர், அமெரிக்கர் ஒருவர், சீனாக்காரர் ஒருவர், இலங்கைத்தமிழர் ஒருவர். இந்த நான்கு பேரும் தேநீர் குடிப்பதற்காக கடை ஒன்றுக்குச்சென்றார்கள். நால்வரும் நான்கு தேநீருக்கு ஓடர் கொடுத்து விட்டு காத்திருந்தார்கள். தேநீர் கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்தத் தேநீரில் இலையான் ஒன்று விழுந்து, செத்து – மிதந்துகொண்டிருந்தது. இதனைக் கண்ட பிரிட்டிஷ் காரர் கோபமாய் தேநீர் கோப்பையை வீசி எறிந்து விட்டு கடையை விட்டு வெளியேறினார். அமெரிக்கக்காரர் தனக்கு இலையான் விழுந்த தேநீரை தந்ததாக அந்தக்கடை உரிமையாளர் மீது வழக்குப்போட்டு – நஷ்ட ஈடு பெறுவதற்கான முயற்சியில் இறங்கினார். சீனக்காரர் இலையானை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு, தேநீர் வேண்டாமென்று கடைக்காரரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார். ஆனால் இலங்கைத் தமிழரோ இலையானை எடுத்து சீனக்காரருக்கும், தேநீரை எடுத்து அமெரிக்கக்காரருக்கும் விற்றுவிட்டு, அந்தப்பணத்தை கொண்டு தனக்குப் புதிதாகத் தேநீர் வாங்கிச் சாப்பிட்டார்.



*இ. விஜய குமாரி, செல்வ நகர்.*

**கேள்வி:** டியர் பித்தா! ஒரு ஆணும் – பெண்ணும் நட்பாகவோ, அல்லது சகோதரமாகவோ பழகினால், அதனை மற்றவர்கள் தவறாக நினைத்து கொள்கின்றார்களே. இது ஏன் பித்தா?

**பதில்:** ஏனென்றால் இதற்கு முன்னர் சகோதரமாகவும், நண்பர்களாகவும் பழகியவர்களில் சிலர்; கழுத்திலே மாலையுடன் வீட்டுக்கு வந்தார்கள், சிலர் ஓடிப்போய் விட்டார்கள், இன்னும் சிலர் வயிற்றை நிரப்பிக்கொண்டு வீட்டுக்கு வந்தார்கள் அதனால்.

*வ. வரதன், வவுனியா.*

**கேள்வி:** ஐயா! தற்போது விலைவாசி அதிகரித்து வரும் காலத்தில் நட்டமில்லாமல் செய்யக்கூடிய தொழில் ஒன்று கூறுமேன்?

**பதில்:** நான் பார்த்தளவில் சைவச் சாப்பாட்டுக் கடை வைப்பது நல்லது. விலைவாசி கூடினால் தேநீர், புட்டு, இடியப்பம், வடை, வாய்ப்பன் என்பவற்றின் விலையை உயர்த்தலாம். விலையை உயர்த்த முடியா விட்டாலும், உணவு வகைகளின் சைஸைக் குறைக்கலாம். முதல்நாள் மிஞ்சிய உணவு வகைகளை அடுத்தநாள் போண்டாவுக்குள்ளும், சாம்பாருக்குள்ளும் போட்டு சமாளித்துவிடலாம். மொத்தத்தில் நட்டமே இல்லாத தொழில் என்றால் சைவக்கடை தான்.

*ஆர். நந்நினி, கிளிநொச்சி.*

**கேள்வி:** பித்தா புண்பட்ட இதயத்தை புகைவிட்டு ஆற்று என்பார்கள். அது ஆண்களுக்கு. இதே போல் பெண்களின் இதயம் புண்பட்டால் எப்படி ஆற்றுவது?

**பதில்:** அவர்களும் புகையை விட்டு ஆற்றலாம். சிகரட் புகையை விட்டல்ல. இது வேறு மாதிரி. அதாவது மனதிலே புண் ஏற்பட்டால் உடனே குசினிக்குள்ளே போய் அடுப்பை மூட்டி (அதிலே புகை வரும்) அவர்கள் வீட்டிலே உள்ளவர்களுக்கு வாய்க்கு ருசியாக ஏதாவது சமைத்துப் போடலாம். இதனால் சமையல் பக்கம் கவனம் திரும்பிவிடும். மனதிலே உள்ள புண் மறக்கப்பட்டு விடும். எப்படி ஐடியா?

## பித்தனின் கேள்வி

கேள்வி:– காதலில் அதிகமாக ஏமாற்றம் அடைவது ஆண்களா? பெண்களா?

## வாசகர் பதில்கள்

*கலா – கொழும்பு.*

ஆண்களே! பெண்கள் காதலிக்கும் போது எந்த ஆணையும் காதலிப்பார்கள். ஆனால், திருமணம் என்று வந்துவிட்டால் வெளிநாட்டிலிருக்கும் ஆண்களை மட்டுமே ஏற்கின்றனர்.

*கரன் – திருமலை.*

பெண்களே! இவர்களுக்கு காதலிக்கும் போது இருக்கும் துணிவு வீட்டில் திருமணம் பேசும் போது இல்லாது போவதே.

*சுபா – அளுத்மாவத்தை.*

ஆண்களே! ஏனெனில் காதலிக்கும் பெண்கள் தமது தரத்திற்கு ஏற்ப இவன் அமைவானா என யோசிக்காது காதலித்து விட்டு திருமணம் என்று வந்ததும் மெதுவாக நழுவிவிடுவார்கள்.

*பெருமாள் – டொரிங்டன்.*

ஆண்களே! இவர்கள் காதலை புனிதமாக பேணுவதால் ஏமாற்றம் அடைகின்றார்கள்

*வொஜி – இளவாலை.*

ஆண்களே! பெண்கள் காதலில் வேறு எதை எதையோ எதிர்பார்ப்பதால் ஆண்கள் பல பெண்களால் ஏமாற்றப்படுகின்றார்கள்.

*செ. சாமி, வத்தளை.*

**கேள்வி:** பித்தா! அரை குறை ஆடையுடன் திரியும் பெண்ணையா அல்லது எல்லாவற்றையும் போர்த்து மூடிக்கொண்டு திரியும் பெண்ணையா? நம்பமுடியும்?

**பதில்:** அரை குறை ஆடையுடன் திரியும் பெண் என்றால் அவர்களிடம் உள்ளது இவ்வளவு தான் என்று உறுதியாக நம்பலாம். ஆனால் போர்த்து மூடுவது அப்படி நம்பக் கூடியதல்ல.

*ஆர். நந்தினி, சுண்ணாகம்.*

**கேள்வி:** டியர் பித்தா! நான் சரியாக ஒல்லியாகவுள்ளேன். மொத்தமாகவர ஆசையாக உள்ளது. அதற்கு நல்ல வழி சொல்லும். பிளீஸ்....?


**பதில்:** நீர் ஏன் மொத்தமாக வரவேண்டுமென்று ஆசைப்படுகின்றீர். ஒல்லியாக இருப்பது நல்லது. ஒல்லி உடம்பை நோய் நொடி அண்டாது. இத்துணுண்டு துணி வாங்கி, இத்துணுண்டு சட்டை தைத்து, அந்த இத்துணுண்டு உடம்பில போட்டுக் கொண்டால் போதும். பஸ்ஸிலோ, ரயிலிலோ எல்லாம் தம்மாத்துண்டு இடம் கிடைத்தாலே போதும். உட்கார்ந்து கொள்ளலாம். இப்படி ஏகப்பட்ட வசதிகள் ஒல்லியாக இருப்பதில்.



மொத்தமானால் கஷ்டம் தான். கடற்கரையிலே பாரும், யாராவது ஒல்லியான ஒருவர் விடியற்காலையிலே வந்து ஓடுகிறாரா என்ன? கொலஸ்ரோல், பிறசர் என்று ஏகப்பட்ட வியாதிகள் மொத்தத்தில் தான். ஒல்லியில் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது சின்னப்புள்ளத்தனமாக இல்லை!


தியா

நடிகர் வடிவேலுவை வெடிகுண்டு வீசி கொலை செய்வேன் என்று மிரட்டியவரை வீட்டில் இருந்தவர்கள் பொலிஸில் பிடித்து ஒப்படைத்துள்ளனர். இதுபற்றி பொலிஸார் விசாரித்து வருகின்றார்கள்.

சென்னை சாலி கிராமத்தில் வசிப்பவர் நடிகர் வடிவேலு. இவர் பல்வேறு படங்களில் நகைச்சுவை நடிகராக நடித்து, பல லட்சக்கணக்கான ரசிகர்கள் மனதில் இடம் பிடித்துள்ளார். நடிகர் வடிவேலு வீட்டில் இருந்த சமயம் (காலை 10 மணிக்கு) திடீரென்று வந்த ஒரு மர்ம ஆசாமி, அவரது வீட்டு வாசலில் ஒரு கடிதத்தை வீசி விட்டுச் சென்றாராம்.

அந்தக் கடிதத்தில், 'நீ எனக்கு ஐந்து லட்சம் ரூபா கொடுக்காவிட்டால் உன்னையும், உன் குடும்பத்தையும் வெடிகுண்டு வீசித் தூள் தூளாக்கி விடுவேன்' என்று எழுதப்பட்டு இருந்ததாம். பிறகு மீண்டும் பிற்பகல் 2 மணிக்கு ஐந்து லட்சம் ரூபா பணத்தை அருகில் உள்ள அம்மன் கோவிலில் கொண்டுவந்து கொடுக்காவிட்டால் படப்பிடிப்புக்குச் செல்லும்போது சுட்டு கொன்றுவிடுவோம் என்று எழுதப்பட்ட கடிதத்தை வீட்டில் வீசினாராம் அந்த மர்ம மனிதர். இதைப் பார்த்த நடிகர் வடிவேலுவின் முகாமையாளரும், மற்றவர்களும் அந்த மர்ம மனிதரை பிடித்து விருகம்பாக்கம் பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

தென்சென்னை இணைக் கமிஷனர் யு.ஜி.சாஸ்திரி உத்தரவின் பேரில் விருகம்பாக்கம் பொலிஸார் அந்த மர்ம ஆசாமியிடம் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றார்கள்.



### சிலம்பம் கற்றுக்கொள்ளும் விந்தியா

திடீரென்று என்ன நினைத்தாரோ, தினம் தோறும் சிலம்பம் கற்றுக் கொண்டு வருகிறார் விந்தியா. அவருக்குக் கற்றுக் கொடுப்பவர் பாண்டியன் மாஸ்டர். இனி யாரும் விந்தியாவிடம் வாலாட்டிப் பேச முடியாது. அப்படித்தானே!

### மீண்டும் சத்தியராஜ் –சிபிராஜ்

'ஜோர்' படம், எதிர்பார்த்தளவு வெற்றி பெற்றிருப்பதால் விநியோகஸ்தர்கள் மத்தியில் சத்யராஜ்–சிபிராஜ் கூட்டணிக்கு நல்ல வரவேற்பபு கிடைத்துள்ளது. தற்போது செல்வா இயக்கத்தில் இருவரும் சேர்ந்து ஒரு படம் நடிக்க முடிவு செய்துள்ளனர். சத்தியராஜ் நடித்த 'அழகேசன்' படத்தைத் தயாரித்துள்ள கிரேஸ் மூவி மேக்கர்ஸ் இந்தப் புதிய படத்தை தயாரிப்பதற்கான பேச்சு வார்த்தையை நடத்தி வருகிறது.

## விஜயின் ... சின்களத்...

டியும் இளமை துள்ளும் காதல் கதையோடு களம் இறங்கியிரு... அதென்ன புதுசா இருக்கே தலைப்பு என்றால்... 'சார் எல்... தலைப்பு வைத்து களங்கப்படுத்தறாங்க. நான் சுத்தமான த... பாராட்ட வேணாமா........? யாருமே கண்டுக்கல... அதைவிடுங்கள்... இவர்தான் ஹீரோ, விக்ராந்த் என்... அட ஆரப்பா இது! விஜய் மாதிரியே இருக்காரே என்... தம்பி. சித்தி பையன் என்று சொல்கிறார்.

பார்வை, அந்தக் கன்னம், சிரிப்பு அத்தனை... ஜோடியாக லட்சுமிராய், தியா என இரண்டு... ருக்கிறார்கள். சத்தமில்லாமல் முதல்கட்டப் ... மாத இறுதியில் இரண்டாவது கட்டப்படப்பிடிப்புக்...

அதிரடிக் காதல் நாயகனாக அறிமுகமாகும் ... கட்டுரை எழுதுவதற்காக தென்மாவட்ட கிராமத்திற... பர்களையும், தன்முன் ... நடக்கும் கொடூரச் சம்... ளித்து, அனை... வரின் நெஞ்சிலு... அமெரிக்க... "ஜாக்ர... இ...





# 'கொல்லிமலை சிங்கம்'

சிரஞ்சீவி நடிக்கும் 'கொல்லிமலை சிங்கம்' என்ற படத்தை சுகுணா மூவிஸ் எம்.புருசோத்தம் தயாரிக்கிறார். கிராப்பிக்ஸ் கலக்கலுடன் 'கொல்லிமலைச் சிங்கம்' படமாக்கப்படுகிறது. தமிழில் நீண்ட இடைவெளிக்குப்பின் சிரஞ்சீவி நடிக்கும் படம் இது.

சௌவுந்தர்யா நடிப்பில் வெளியான 'அம்மன்' படத்திற்குப் பிறகு அதே குழுவினர் மிகப் பிரமாண்டமாக 80 சதவீதம் கிராபிக்ஸ் கலக்கலுடன் அதிநவீன தொழில்நுட்பத்துடனும் தயாரிக்கும் படம் 'கொல்லிமலை சிங்கம்'. இப்படத்தின் கிராபிக்ஸ் காட்சிகள் அனைத்தும் லண்டனில் பிரத்தியேகமாகச் செய்யப்பட்டுள்ளன. அதிநவீன தொழில்நுட்பம் கொண்ட காட்சிகள் இடம் பெறும் முதல் படம் இது.

சிரஞ்சீவி படம் என்றாலே ஆக்ஷனும், நடனமும் பிரமாதமாக இருக்கும். கனல் கண்ணன், பீட்டர் ஹெய்ன்ஸ் இருவரும் சண்டைக்காட்சிகள் அமைத்தும் , ராஜசுந்தரம், லாரான்ஸ் இருவரும் நடனம் அமைக்கின்றனர். ஆகவே இப்படத்தின் ஆக்ஷனும், நடனமும் பெரியளவில் பேசப்படும்.

'கொல்லிமலைக் காட்டில் அபூர்வசக்தி ஒன்று இருப்பதை வெளிநாட்டினரின் ஆராய்ச்சி மூலம் அறிந்து, அதை அடைவதற்காகக் கொல்லிமலைக் காட்டுக்கு வருகிறார்கள். 72 வருடத்திற்கு ஒருமுறை கிடைக்கும் அந்த அபூர்வ சக்தியை எப்படியும் அடைந்தே தீருவது என முடிவு செய்து 1932 இல் இருந்து 2004 வரை அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளால் நடக்கும் சம்பவங்களே கொல்லிமலை சிங்கத்தின் கதை. அதே காட்டுப் பகுதியில் வாழ்ந்து வரும் கதாநாயகன், இந்த ஆராய்ச்சியாளர்களின் திட்டத்தை முறியடிக்க முயற்சி மேற்கொள்கிறார்.

இந்தப் படத்தில் சிரஞ்சீவியுடன் இந்தி நடிகை நம்ராதா சிரோத்கர் நடிக்கிறார். ரீமா சென் ரசிகர்களுக்கு கவர்ச்சி விருந்து படைக்கவுள்ளார். இப்படத்தை அதிக விறு விறுப்புடன் கோடி ராமகிருஷ்ணா இயக்கியுள்ளார்.


'மதுர'
விஜய், ரக்சிதா


'பட்டயக் கிளப்பு'
ஸ்ரீமன், பாயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தப் புள்ள பொழச்சுக்கும்



ஸ்ரீரங்கத்து தேவதையாக சுள்ளான்களை சொடுக்கிப் போட்ட மும்பைவாலா சிந்து துலானி. சுள்ளான் படத்தில் அறிமுகக் காட்சியின்போது படீரென்று பாவாடை தாவணியை கழட்டிப்போட்டு கழங்கடித்த அதே துடுக்குத் தனந்தான் நிஜத்திலும். சுள்ளான் வெளியீட்டுக்காகச் சென்னைக்கு வந்திருந்தார் அவர். கச்சிதமான உடை... ஜில்லிட்டுப்போகிற சிரிப்பு... மற்றவர் ஜொள்ளுவிடுகிற மாதிரி இருக்கிறார் இந்த மும்பை ராட்சஸி.

வணக்கம் என்ற வார்த்தையைத் தவிர... தமிழில் ஒரு எழுத்துக்கூடத் தெரியவில்லை. ஆங்கிலம், இந்தி என சிம்பொனி தெரிக்கிறது பேச்சில். தமிழ் பேசத்தான் தெரியவில்லையே தவிர... தமிழ் நாட்டில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்... எப்படிப் பேசினால் ஆளைக் காலிபண்ணலாம் என்பதெல்லாம் அத்துப்படியாகத் தெரிந்து வைத்துதிருக்கிறார்.

படிச்சது பீ.ஏ. சோசியாலஜி. அப்பா வங்கியில் பணி. அம்மா ரயில்வே. சின்ன வயசிலிருந்தே சினிமாதான் கனவாம். 'பாவம் புள்ள ஆசைப்படுது... அது இஷ்டப்படியே வரட்டும்' என்று வீட்டில் சம்மதம் கொடுக்க ஆட்டம், பாட்டம் என்று அமர்க்களமாகத் தயாராகியிருக்கிறார்.

தெலுங்கில் ஏற்கனவே 'அய்த்தே' என்ற படத்தில் நடித்திருக்கிறார். அது சூப்பர் ஹிட் படமாச்சே. ஏன் இவ்வளவு பெரிய இடைவெளி? என்றால் 'கடைசி வருஷம் பரீட்சை எழுத வேண்டியிருந்திச்சு அதான்'' என்று சிரிக்கிறார்.

''ஏற்கனவே திருமலைன்னு விஜயை வைத்து ஹிட் கொடுத்த டைரக்டர். அப்புறம் ஹீரோ தனுஷ் ஊரெல்லாம் தூக்கி வைத்து கொண்டாடிக்கிட்டிருக்கிற ஆளு! இதுக்கு மேல என்ன வேணும், ஓக்கேன்னு சொல்லிட்டு நடிச்சிட்டேன். ஸ்ரீரங்கத்து மாமின்னு கூப்பிட்டு கலாட்டா பண்றாங்க. நிறைவா ஒரு படம் பண்ணியிருக்கோம்கற சந்தோஷம் இருக்கு'' என்று சொல்லும் சிந்து, அடுத்து படம் நடிக்க ஒப்புக் கொள்வதாக இருந்தால் கண்டிப்பாகக் கதை கேட்டுத்தான் ஒத்துக்கொள்வாராம்.

'ஏன் அப்படி?' ''முடிந்திருக்கும் படம் எனக்கு தமிழில் புதிது. அதனால் கதைபற்றிக் கேட்கவில்லை. எல்லா படத்தையும் இதேமாதிரி பண்ணினால் பெட்டியைக் கட்டிக்கிட்டு மும்பைக்கு திரும்பிப்போக வச்சிடமாட்டாங்களா?'' தவிர... சிந்து துலானிக்கு நடிக்கத் தெரியுமா, தெரியாதுங்கிற குழப்பம் இப்போ கிடையாது. ''என்னால எந்த மாதிரி ரோலும் பண்ண முடியும் என்கிறதை இதுல நிரூபித்துவிட்டேன். அதைத் தக்கவச்சிக்க வேண்டாமா?'' என்று நம்மிடம் எதிர்க் கேள்வி கேட்கிறார் அம்மணி.

படப்பிடிப்புக்கு வரும்போது அப்பா அல்லது அம்மா யாருக்கு லீவு கிடைக்கிறதோ அவர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வருகிறார். இனிமேல் சென்னைதான் எனக்கு சொந்த ஊர் என்று பேச்சுக்கு நடுவே ஒரு அதிரடி அறிவிப்பையும் கொடுத்தார்.

சென்னை எனக்கு ரொம்ப புடிச்சிருக்கு. இந்த மக்கள் காண்பிக்கும் அன்பு... பழகும்விதம் அப்படியே நெகிழ வைக்குது. 'சிந்து நீ தேடின இடம் இதுதாண்டின்னு என் உள்மனசு சொல்ல... இனிமேல் இங்கேயே செட்டிலாகிறதுதான் சரின்னு முடிவெடுத்துவிட்டேன்'' எனச் சொல்லும் சிந்து முதல்கட்ட நடவடிக்கையாக தமிழ் சொல்லிக் கொடுக்கக் கூடிய ஒரு வாத்தியாரைத் தேடிக்கொண்டிருக்கிறார்.

என் நடிப்பெல்லாம் குஷ்பு மேடத்தின் மாதிரிதான். முதல் படம் தனுஷ் கூட பண்ணியாச்சு. அடுத்து எந்த நடிகர் கூட நடிக்கிற ஆசை? என்று கேட்டதற்கு சிந்து சொன்ன பதில் இருக்கே... தமிழில் இருக்கிற அத்தனை ஹீரோவோடையும் நடிக்கணும். எல்லா டைரக்டர் படத்திலையும் ஒரு ரவுண்டு நடிச்சிடணும் அதான் என்னோட ஆசை! இந்த புள்ள பொழச்சுக்கும்.





பரத், கோபிகா
'4 ஸ்டுடன்ஸ்'

## ...தம்பியும் ...தில்....

...ருக்கிறார் ஆர்.வி.உதயகுமார். 'கற்க கசடற', ...லோரும் ஆங்கிலத்தில் தமிழ் சினிமாவுக்கு ...தமிழ் தலைப்பு வச்சிருக்கேன். ஒருத்தராவது ...' என்கிறார் வருத்தத்தோடு. சரி... ...று ஒரு இளைஞரை அறிமுகப்படுத்தினார். ...ன்று ஆச்சரியத்தோடு கேட்டால், விஜயோட

...னயும் அப்படியே விஜய்தான். இவருக்கு ...ன ராக்கெட்டுக்களை ஜோடி சேர்த்தி ...பிடிப்பை முடித்த ஆர்.வி.உதயகுமார் இந்த ...காக தன் ஆட்களோடு கிளம்புகிறார்.

...விக்ராந்த், மும்பையிலிருந்து ஆராய்ச்சிக் ...ற்கு வருகிறார். அங்கு அவர் சந்திக்கும் நண் ...பவங்களையும், தன் கல்வித் திறனால் சமா ...வும் இடம்பிடிக்கும் காதல் கதைதான் இது.

...ா மீடியா அசோசியேஷன் உறுப்பினர் ...ராசே'' வில்லனாக அறிமுகமாகிறார். ...வர்களுடன் முக்கிய கதாபாத்திரங்களில் மனோரமா, சாருஹாசன், வடிவேலு, 'மலேசியா', மனீந்தர், மதன் குமார், ஷமா ஆகியோர் நடிக்க, மேலும் சில நட்சத்திரங்களுக்கான தேர்வும் நடந்து வருகிறது.





# பயமுறுத்தும் குறுக்கெழுத்து

ஏ.பி.எஸ். கார்ப்பரேஷன் என்ற புதிய பட நிறுவனம் தயாரிக்கும் படம் 'குறுக்கெழுத்து' இப்படத்தில் வசந்த் கதாநாயகனாக நடிக்கிறார். மற்றும் சரண்ராஜ், 'சேது' விநாயகம், 'மகாநதி' சங்கர், பிரகாஷ், ஸ்ரீராம், சுஷ்மிதா ஆகியோரும் நடிக்கின்றனர்.

இப்படத்தின் படப்பிடிப்பு ஆந்திர மாநில தலக்கோணத்தில் அடர்ந்த காடுகளில் படமாக்கப்பட்டது.

நகரத்தில் இருந்து காட்டுக்குள் ஓடி ஒளியும் ஆறு இளைய தலைமுறையினர் அடுத்தடுத்து ஒவ்வொருவராக மரணமடைகிறார்கள். தங்கள் குழுவினரை கொலை செய்வது யார் என்று குழம்பிப் போய் விடு கிறார்கள். முடிவில் தங்கள் குழு வினர் இறந்து போனதற்கு காரணகர்த்தா யார் என்று கண்டறியும்போது அதிர்ச்சி அடைகிறார்கள். ஏனென்றால் அவர்கள் அடையாளம் காண் பவன் இறந்து ஆறு மாதங்களுக்கு மேல் ஆகிறது.

பேயாக வந்து கொலை செய்தானா? இல்லை அடுத்த பிறவியாக வந்து கொலை செய்தானா? இரண்டு கேள்விகளுக்குமே பதில் இல்லை என்பதுதான். அப்படியானல் அவன் எப்படிக் கொலைக்குக் காரணம் ஆனான்?

இப்படிப் போகும் கதை படம் பார்ப்பவர்களைப் பயமுறுத்தும் படியாக படமாக்கப்பட்டிருக்கிறது.



'கற்கக்கசடற'
விக்ராந்த், தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி

அன்றைய இரவு பரிமளத்தை சஞ்சலப் படுத்திக் கொண்டிருந்தது. இருளுக்குள் கண்ணைப் பறிக்கும் மின்னல் வெட்டிக் கொண்டிருந்தது. மழை மேகங்களும் பேயா வேசம் கொண்டு திரண்டு கொண்டிருந்தன. தூரத்தே ஓர் உருவம் மழை தொடங்குவதற்கு முன்னே வீடு வந்து சேர்ந்து விட வேண்டும் என்ற அவசரத்துடன் விரைந்து வந்து கொண்டிருந்ததை கண்ணைப் பறிக்கும் மின்னல் வெளிச்சம் போட்டுக் காட்டியது.

அந்த உருவம்! தனது கணவனின் வருகை தான் என்பதை அறிந்து கொண்ட பரிமளம் தன் மனதை ஆசுவாசப் படுத்திக்கொண்டாள்.

''வாங்கப்பா ஏன் இவ்வளவு நேரம்.''

''ஓம்... ஓம்... முதலாளியார் வந்ததால அந்த மனுசன் காசு தரும் வரைக்கும் பாத்துக் கொண்டு இருந்தது தான். அதோட சந்தையிலும் கறி, புளி வாங்கிட்டு வர நல்லா நேரம் போயிட்டு. இந்தா சமையலத் தொடங்கு.''

கணவன் கொண்டு வந்த பொருட்களைவாங்கிக்கொண்டு பரிமளம் விரைவாகவே அடுக்களைக்குள் புகுந்து இயங்கத் தொடங்கினாள். கை உதவிக்கு றேனுகாவும் வந்து இணைந்து கொண்டாள்.

வீட்டுக்குள் படுத்திருந்த இரண்டு ஆண் பிள்ளைகளினதும் பசி அழுகை பரி மளத்தின் காதை உரசிச் சென்றது. ''அம்மா பசிக்குது....'' அழத் தொடங்கி விட்டார்கள்.

''சத்தம் போடாம நித்திரையக் கொள்ளுங்க. இப்பமுடிஞ்சிரும் எழுப்பித்தாறன்'' என்ற பரிமளத்தின் இயக்கம் இரு மடங்காய் மாறியது. சமையலை முடித்துக் கொண்ட பரிமளம் பிள்ளைகளை எழுப்பிச் சாப்பாடு கொடுத்தாள்.

''ஏன் அம்மா இண்டைக்கு இவ்வளவு பிந்திட்டுது. அப்பா இண்டைக்கு வராட்டி நடக்குச் சாப்பாடு இல்லையா? இப்படி எத்தனை நாளுக்கம்மா நம்ம பசி, பட்டினியோட இருக்கிறது. கொட்டிலும் சரியான ஒழுக்கு. எத்தனை நாளைக்கு நம்ம அகதிகளாக இந்த ஓலைக் குடிசையில வாழுறது. நம்மட ஊருக்குப்போனா, நம்மட வீட்டில நல்லவடிவாச் சீவிக்கலாம்தானே'' என்றான் கடைக்குட்டி. அவனுடைய ஆதங்கமும் நியாயமானதுதானே.

இளையவனின் ஆதங்கங்களை எல்லாம் காதில் போட்டுக் கொண்ட பரிமளம் பதில் ஏதும் போசாமல்; ''சாப்பிடுங்க... சாப்பிட்டுங்க...'' என்று சொல்லி சோறும் கறியுமாய் போட்டுக் கொண்டிருந்தாள்.

பிள்ளைகள் சாப்பிட்டு முடிந்தகையோடு தனது கணவனைத் தேடிப் பார்த்தாள். வெளியே வந்து பார்த்த போது; சிவஞானம் முற்றத்து மணலில் அமர்ந்து கொண்டு ஏதோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார்.

''என்னப்பா யோசிக்கிறீங்க''

''மழை வரப்போற சாடை தெரியுது. அது தான் யோசிக்கிறன்; மழை வந்தால் என்ன செய்யப்போறமோ''.

''என்ன செய்யிறது; பக்கத்து பள்ளிக் கூடத்தில போய் தங்க வேண்டியது தானே. இது என்ன நமக்கு புது அனுபவமா? வாங்கப்பாவந்து சாப்பிடுங்க'' என்று கணவனை அழைத்தாள்.

பிள்ளைகள் சாப்பிட்டு; மிகுதியாய் இருந்த சோறை இருவருமாய் சாப்பிட அமர்ந்து கொண்டனர். பரிமளம் தனது உள்ளக்கிடக்கைகளை கணவனிடம் வெளிக் கொட்டினாள்.

''எப்பதான் இந்த நாட்டுக்குச் சமாதானம் வரப்போகுது. நாசமறுவானுகள் எங்கட மண்ண ஆட்சி செய்ய, நாங்க அகதிகள் எண்டு இடம் பெயர்ந்து; அகதி முகாம் எண்டும், ஓட்டைக்குடிசை எண்டும் வாழ வேண்டிக்கிடக்குது. இவனுகள் அவனுகள்ட இடத்துக்குப் போனா, அவனுகளும் குடும்பத்தோட சந்தோசமா வாழலாம்; நம்மளும் நம்மட மண்ணும், சாதி சனங்களோட சொந்த வீட்டில சுகமா வாழலாம் தானே'' என்று பரிமளம் புலம்பிக் கொண்டாள்.

''ஏன் பரிமளம் சும்மா புலம்பிக் கொண்டிருக்காய்; சமாதானப் பேச்சு வார்த்த நோர்வே தரப்பு மத்தியாஸ்தத்தோட நடக்குது; நீ வேணுமெண்டாப் பார், கெதியில ஒரு நல்ல சமாதானத் தீர்வு வரும்'' என்று சிவஞானம் பரிமளத்தை ஆறுதல் படுத்தினார்.

மிகுதியாய் இருந்த சோற்றை இருவரும் சாப்பிட எடுத்தனர். அப்போது ''இதுலஅரை வாசியை எடுத்து தண்ணி ஊத்தி பனையிலவை பரிமளம். நாளைக்கு பிள்ளைகளுக்கு உப்ப ஊத்திக் கரைச்சு எண்டாலும் குடுத்து பள்ளிக் கூடத்துக்கு அனுப்பலாம்'' என்றார் சிவஞானம். தண்ணிச் சோறுக்காய் எடுத்தது போக, மிகுதியை இருவருமாக




பங்கிட்டுச் சாப்பிட்டனர். குடிப்பது கூழ் என்றாலும் ஒற்றுமையாய் அமர்ந்து சாப்பிடுவதில் தானே நிம்மதி இருக்கின்றது.

இரவுச் சாப்பாட்டை அவர்கள் முடித்துக் கொண்டு நித்திரைக்குச் செல்லும்போது இரவு நேரம் 11 மணி இருக்கும்.

ஆவேசமாய் கூடித்திரண்ட மழை முகில்கள் சோ.... என்று மழையைப் பொழியத் தொடங்கின.

மழையின் ஆரம்பத்தோடு பிள்ளைகளையும் தட்டிக் கொண்டு பாய், தலையணைகளுடன் பக்கத்தில் உள்ள பாடசாலைக்குள் தஞ்சம் புக விரைவாகவே ஓடிச் சென்றனர்.

பாடசாலை ஜனக் கூட்டத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. காரணம் அங்குள்ள அகதிமுகாம் ஓட்டை ஒழுக்குகளாகவே இருந்தது. தனிக் கொட்டில் அமைத்தவர்களின் கொட்டில்களும் கூட ஒழுக்கான கொட்டில்களாகவே அமைந்திருந்தன.

பாடசாலை; பிள்ளைகளின் சத்தத்தினால் நிறைந்திருந்ததுடன்; முதியவர்களின் இருமல் சத்தமும், குழந்தைகளின் அழுகுரலும் என சந்தடியாய்க் காணப்பட்டது.

கல்வித் தெய்வம் சரஸ்வதி இங்கு உறைந்திருக்கின்றாள் தான். ஆனால் எங்களுடைய சீரழிந்து போன வாழ்வுக்கு அவரால் என்ன செய்யக்கூடும்; என தனக்குள் சிந்தித்துக் கொண்ட சிவஞானம் அப்படியே நித்திரையானார்.

பிள்ளைகளும் ஒருவராக போர்த்துக் கொண்டு நித்திரையானார்கள். ஆனால் பரிமளத்துக்கு மாத்திரம் நித்திரைவரவில்லை.

பிள்ளைகளுக்கு சீரான உணவு, உடை இல்லை, சீரழிந்த வாழ்வு, கணவனின் பாடுபட்ட உழைப்பு, தனது குடும்ப வாழ்வு, அகதிகளாய் முகாமில் படும் துன்பம்; இப்படியெல்லாம் தான் அனுபவிக்கின்ற வாழ்வில் இருந்து, தனது சொந்த மண்ணையும் தனது சீதன வீட்டையும், வளவையும் குறித்த நினைவுகள் பரிமளத்தின் மனதில் வந்து அலை மோதியதனால் அவளால் தூங்க முடியவில்லை. புரண்டு புரண்டு படுத்து நித்திரையை வரவழைத்துப் பார்த்தாள், பரிமளத்தால் முடியவில்லை.

மழை காலை ஐந்து மணியளவில் ஓய்ந்திருக்க வேண்டும். காலைக் கதிரவன் தன் செங்கதிர்களைப் பரப்பிக்கொண்டு கிழக்கு வானில் உதயமானான். பாய், தலையணையுடன் மீண்டும் தங்கள் ஓட்டை அகதிக் கொட்டிலுக்குச் சென்றனர்.

பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல தயாரானார்கள். கணவன் தொழிலுக்குப் போவதற்கு ஆயத்தமானார். தொழிலுக்குப் போன கணவன் திரும்பி வந்தால்தான் பசி தீரும். இப்படியாகப் பல மாதங்களும், வருடங்களும் உருண்டோடின.

காலச்சக்கரம் மிக வேகமாகச் சுழன்றுகொண்டு சென்றது. இரண்டு ஆண் பிள்ளைகள் இப்போது வயதுக்கு வந்த ஆண்பிள்ளைகளாய் உழைக்கத் தொடங்கினார்கள். கடைக்குட்டி மாத்திரம் தான் படித்துக் கொண்டிருந்தான். இப்போதுதான் அவர்கள் வாழ்வில் மூன்று வேளையும் சாப்பாடு கிடைக்கிறது.

கணவனின் உழைப்போடு சேர்த்து பிள்ளைகளின் உழைப்பையும் கொண்டு தங்களின் கொட்டகையை கிடுகு வேண்டி வேய்ந்து கொண்டனர். வறுமை இன்னும் முற்றாக அகலவில்லை.

அன்று அந்தக் கிராமத்து வீதியில் படையினரை நோக்கிய தாக்குதல் இடம்பெற்றது. அது ஒரு காலை வேளை. தொழிலுக்குச் சென்றுகொண்டிருந்த கணவரை படையினர் சுட்டுப்போட்டனர். பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மாணவர்களுக்கும் துப்பாக்கி வேட்டுக் காயங்கள் ஏற்பட்டன. வீசப்பட்ட கைக்குண்டொன்று அருகே விழுந்ததனால் மூன்று பிள்ளைகள் பலியானார்கள். காயப்பட்டவர்கள் அதிகம். பலியான மாணவர்களில் சிவஞானம் – பரிமளத்தின் இளைய மகனும் ஒருவன்.

'அம்மா இப்படி எத்தனை நாளைக்கு கஷ்டப் படுகிறது, ஓட்டை ஒழுக்குக் கொட்டில் வேற, எத்தனை நாளைக்கு நாம அகதிகளாக வாழுறது. நம்மட ஊருக்கு, நம்மட வீட்ட போனா நிம்மதியாக சீவிக்கலாம் தானே' என்று ஆதங்கப்பட்ட இளைய மகன்தான் அவன்.

ஒரே நாளில் பரிமளம் தனது கணவனையும், கடைசி மகனையும் இழந்த இழப்பு இனி சீர் செய்ய முடியாதது தான். மூத்தவளும், தாய் பரிமளமும் தங்கள் தகப்பன் உடல்மீதும், கடைக்குட்டியன் உடல்மீதும் புரண்டு கொண்டிருந்தனர். ஆண் பிள்ளைகள் இரண்டும் சுமைகளையும் சுமந்து கொண்டு விம்மிக் கனத்த மனதுடன் ஆகவேண்டிய காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர். ஐ.சி.ஆர்.சியின் உதவியுடன் மரணச்சடங்குகள் நடந்து முடிந்தன.

இரண்டு மாதங்கள் கழிந்தன. பரிமளம் நடந்து முடிந்த சம்பவத்தில் இருந்து இன்னும் மீண்டுவரவில்லை. மூலையில் அமர்ந்து ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

மூத்தவள் தனக்கடுத்த தம்பியை தாய்க்குத் தெரியாமல் சைகையால் கூப்பிட்டாள். தமிழர்கள் அனுபவிக்கின்ற துன்பகரமான வாழ்வைக் குறித்து அவனோடு பேசினாள். தங்கள் தந்தையின் இழப்பும், கடைக்குட்டித் தம்பியின் இழப்பும் ஏன் ஏற்பட்டது; இப்படி தமிழர் படும் அவலத்தைக் குறித்து அவனிடம் எடுத்துக்கூறி தன்பக்கம் அவனைத் திருப்பிக் கொண்டாள். தமிழின விடிவுக்காய் போராடி மடியும் ஓர் தமிழ் வீரனாக, அவனை போராட்டத்திற்கு அனுப்பி வைத்தாள்.

அக்காவும், தம்பியும் பேசிக் கொண்டது தாய் பரிமளத்தின் காதில் விழுந்ததை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

அவன் உடுதுணிகளை ஒரு பொலித்தீன் பையில் போட்டுக்கொண்டு சுதந்திரம் வேண்டிப் போராட, தனது வீட்டைவிட்டு ஒரு புதிய பயணத்தை தொடங்க வெளியே வந்தபோது பரிமளம் வழிமறித்தாள்.

''ஏண்டா எனக்குத் தெரியக்கூடாது. என்னைப் போல பெற்றெடுத்த எத்தனை தாய்மார் தங்கட பிள்ளைகள போராட அனுப்பியிருக்குதுகள். நான் மட்டும் என்னடா தமிழினத்துக்கு விடிவு வேண்டிப் போராட சம்மதிக்க மாட்டேனா என்ன? எண்ட ஆசீர் வாதத்தோட உன்னை வழியனுப்பி வைக்கிறன். நீ புறப்பட்டுப்போ; நானும் ஒரு தமிழ் வீரத்தாயா வாழ விரும்புறன்'' என்று தன்மகனை ஆசீர்வாதத்துடன் தட்டிக் கொடுத்தாள் பரிமளம்.

பரிமளத்தின் தாய் மண்ணிலே இப்போது போராட்டம் நடைபெறுகின்றது. முகாம் அமைத்து ஆட்சி செய்த படைகள் சுக்கு நூறாய்ப் போயின. அவர்களின் தாய் மண் படையினரிடமிருந்து இப்போது மீட்கப்பட்டது.

மண்மீட்கப் பட்டதாக ஊரெங்கும் செய்தி பரவியது. ''எங்கட பிள்ளைகள், நம்மட தாய் நிலத்த மீட்டுட்டாங்களாம்''. அந்த அகதி முகாம் முழுவதும் இருந்த அத்தனை பேருக்கும் ஒரே விடயம் பேசு பொருளானது.

தங்கள் சொந்த இடத்துக்கு திரும்புவது குறித்து அகதி முகாம் மக்கள் ஆவலாய் இருந்தனர்.

காலைக் கதிரவன் தன் சமாதானக் கதிர் வீச்சுக்களுடன் மேலேழுந்து வந்தான். நாட்டுக்கு நிரந்தரமாய் சமாதானமும் வந்தது.

பரிமளத்துக்கு, தனது வீட்டு வேப்ப மரத்தடியில் பாய்போட்டு படுத்தெழும்பினால் தனது கவலை எல்லாம் தீர்ந்துவிடும் போல் இருந்தது.

''எது எப்படி இருந்தாலும், நம்மட பிள்ளைகள் விடிவுவேண்டிப் போராடியதாலதான் நமக்கு விடிவுவந்தது. இல்லாட்டி இப்படியே நம்ம அகதி வாழ்வு தொடர்கதை ஆவதுதான் நிச்சயம்.

''தமிழர்களது சீர்குலைந்த அகதிவாழ்வு முடிவுக்குக்கொண்டு வரப்படாவிட்டால் முடிவுவராது தான். அகதி வாழ்வைத் தடுக்கிறதெண்டால் தமிழர்கள் ஒன்று சேர்ந்து போராட வேண்டியதுதான்.'' என்று பரிமளம் பெரியதோர் விரிவுரையே செய்தாள்.

''எது எப்பிடி எண்டாலும் நிரந்தர சமாதானம் வராவிட்டால், எல்லார் வாழ்வும் அகதி வாழ்வுதான்'' என்ற பெரு மூச்சோடு எழுந்தாள் பரிமளம்.

- பாபு -

## இறைவனின் படைப்பே அற்புதமானது

மனித படைப்பு ஒரு பக்கம் இருக்க, இறைவனின் படைப்பில் எம்மைச் சுற்றியோடும் நாலுகால் விலங்கினங்களையும், எமக்கு மேலே சிறகடித்துப் பறக்கும் புள்ளினங்களையும் பார்க்கும் போது, இறைவனின் சிருஷ்டியின் அற்புதம் எமக்கு நன்றாகவே விளங்கிவிடும். எத்தனை வண்ணங்களில், எத்தனை வடிவங்களில் இவை எம்மைச் சுற்றி வருகின்றன. ஒவ்வொன்றும் ஒரு தனி அழகோடு எமது கண்களைக் கவர்கின்றன. குறிப்பாக அடர்ந்த காடுகளுக்குள் நுழைந்தால் அங்கே சுதந்திரமாக உலவித் திரியும் மிருகங்கள்தான் எத்தனை? பட்சிகள்தான் எத்தனை?

கண்நிறைந்த அழகு நிறைய இருந்தும், கண்கெட்ட இந்த மனிதர்கள், இவற்றை அழிப்பதிலேயே குறியாக இருப்பது, கவலைக்குரிய விடயந்தான். இந்த அழகுப் பொக்கிஷங்களை, தமது ஆதாயத்துக்காகக் கொன்று குவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள். மிருகங்கள் பல அழிந்து கொண்டே இருக்கின்றன. இன்னும் சில தசாப்தங்களில், பல பட்சிகள், மிருகங்கள் வெறும் சித்திரங்களாகி விடுமோ என்ற பயம் இப்போது எழுந்திருக்கின்றது.



ஒராங் உட்டான் என்பது இராட்சுத உருவமுடைய ஒரு குரங்கு. இந்த இனக் குரங்குகள் இன்னும் இரு தசாப்த காலத்தோடு ஒரேயடியாக அழிந்து விடும் அபாயம் தோன்றி இருக்கின்றது.

மலேசியா, சுமத்திரா, ஜாவா போன்ற இடங்களில் காணப்படும் இந்த இனக் குரங்குகள் ஒரேயடியாக அழிந்து விடப்போவது பலரையும் கலவரத்துக்கு உள்ளாக்கி இருக்கின்றது.

1987 இல் இந்த இனக் குரங்குகள் 45,000 தொடக்கம் 60,000 வரையில் இருந்திருக்கின்றன. இத் தொகை 2001 இல் 25,000 தொடக்கம் 30,000 வரை இறக்கம் கண்டது. உலக வனவாழ்வைப் பேணும் அமைப்பின் கணிப்பின்படி, 14 வருடங்களில், 50 வீதமான அழிவை இந்தக் காட்டு விலங்குகள் கண்டுள்ளன.

எனவே, இந்த வேகத்தில் மேலும் இந்த மிருகங்கள் அழிந்தால், 20 வருடங்களின் பின்னர், ஒன்றைக்கூட கண்ணில் காண முடியாது என்று இவர்கள் கருதுகின்றார்கள்.

இந்த 'ஒராங் உட்டான்' மலேசிய மொழிப் பெயராகும். 'காட்டு மனிதன்' என்பதுதான் இந்தப் பெயரின் பொருள். கொரில்லா, சிம்பன்சி, பிக்மி சிம்பன்சி ஆகிய குரங்குகளும் பருமனில் ஓரளவு 'ஒராங்உட்டான்' குரங்கு இனத்தை ஒத்தவையே. இவையும் அழிவின் விளிம்பை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கின்றன.

மரநிறமும், சிவப்பும் கலந்த நிறம் கொண்டதாக இருப்பது இந்த ஒராங் – உட்டானின் விஷேட அம்சமாகும். அது மாத்திரம்அல்ல, தனித்து வாழ விரும்புவது, இதன் இன்னொரு சிறப்பம்சமாகும். இதன் காரணமாக இந்த மிருகங்கள் இனவிருத்தி விடயத்தில் மிகவும் மெதுவாகவே செயற்படுகின்றன. இந்த மிருகங்கள் தொகை இன்று அருகி வருவதற்கு இதுவும் ஒரு காரணம். பிறந்து 12 ஆண்டுகளில் இது இனவிருத்திக்குத் தயாராகி விடுகின்றது. 40 ஆண்டுகள் வரை இது உயிர்வாழும்தன்மைகொண்டது. பெண் குரங்குகள் குட்டி போட்டதும், எட்டு ஆண்டுகள் பாலியல் உறவிலிருந்து விலகிக் கொண்டுவிடுகின்றன. சுருக்கமாகச் சொல்வதானால் தமது வாழ்நாளில் நான்கு அல்லது ஐந்து குட்டிகளை ஈன்று விடுவதோடு, பெண்குரங்குகள் தமது பணியை முடித்துக் கொள்கின்றன.

இந்த மிருகத்தின் உடல் அமைப்பு விசித்திரமானது. ஒரு பெண்புலி வருடத்தில் மூன்று தொடக்கம் நான்கு குட்டிகளை ஈன்றெடுக்கின்றது. குட்டிகள் கொல்லப்பட்டால், அதே ஆண்டில் மீண்டும் இவை உடல் உறவில் ஈடுபட்டு விடுகின்றன. ஆனால், ஒராங் உட்டானுக்கு இந்த உடல் அமைப்பு இல்லாதது துரதிஷ்டமானதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# தமிழ் திருமுறைத் திருமணம் செய்யலாமா!

**வடமொழி மூலமாக தமிழர் வாழ்வியலில் இறுகப்பிணைந்துள்ள சடங்குகளையும், சமய சம்பிரதாயங்களையும் தமிழ் மொழி மூலம் மேற்கொள்ளவேண்டும் என – பல ஆய்வுகளையும், நடைமுறைகளையும் மேற்கொண்டுவரும் தமிழகத்தைச் சேர்ந்த மு.பெ. சத்தியவேல் முருகனார் இலங்கை வந்துள்ளார். தமிழ்மொழி மூலம் திருமணம் ஒன்றை நடத்தி வைப்பதற்காக வருகை தந்திருக்கும் அவரை சுடர்ஒளிக்காக செவ்வி கண்டபோது அவர் கூறியவை இங்கே....**

**கேள்வி: மின்னியல் பொறியியலாளர் பட்டம் பெற்ற தாங்கள் இத்தகைய சோதனை மிக்கதும் – அச்சுறுத்தலுக்குரியதுமாகிய இப்பணியில் ஈடுபாடுகொள்ளக்காரணம் என்ன?**

**பதில்:** முக்கியமான காரணம் என்ன என்றால் அது எனது குடும்பச் சூழல் ஆகும். 1940 ஆம் ஆண்டு முதன்முதலாக உலக தமிழ் மாநாடு ஒன்றை நடத்த வேண்டும் என ஆர்வம் கொண்டு அதை நடத்தியவர் எனது பெரியதந்தையாரான கு.மு.அண்ணல் தங்கோ. அவரது தமிழ் தாகமும், தீரமும் சிறுபிள்ளையாக இருந்த எனக்கு



சத்தியவேல் முருகனார்

தமிழ்மொழி மீது அளப்பரிய ஈடுபாட்டைத் தோற்றுவித்தது. அத்தோடு எனது மாமனரான கிருபானந்த வாரியாரின் தெய்வீகத் தொண்டு அதன் பால் எனது ஈர்ப்பை அதிகரிக்கச் செய்தது.

இது மட்டுமல்லாது விடுதலைப் போராட்டத்தியாகி திருப்புகழ்சிவம். மு.பெருமாள் எனது தந்தை. இந்த பின்னணியே தமிழ் மொழியின் செழுமைக்கு நானும் ஏதும் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை எனக்குள் ஊற்றெடுக்கச் செய்தது எனலாம்.

**கேள்வி: தமிழ் மொழி மேல் கொண்ட பற்றுதலால் பலர் புரட்சிகரமான சமூக மாற்றங்களை உருவாக்கவேண்டும் – என நினைப்பது தான் வழமை. ஆனால், உங்களது சிந்தனை ஆன்மீக ரீதியான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என துணிந்ததற்கு என்ன காரணம்?**

**பதில்:** எனது தந்தையார் ஆன்மீகத்தில் அதிக நாட்டம் கொண்டவர். அத்தோடு எனது மாமானரான வாரியார் சுவாமிகளிடம் நான் சிவதீட்சை பெற்றவன். எனது தந்தையார் பல இந்து சமய அறிவார்ந்த நூல்களை எழுதியவர். வள்ளிமலைப்படி, கீழ் கோயில் கோபுரம், குளம், தேவிவள்ளியம்மை, தவப் பீடம் என்பன அவர் எழுதிய நூல்கள் ஆகும்.

இவற்றை எல்லாம் படித்து ஆய்ந்து அறியும் போது எனக்கும் சமஸ்கிருத மொழியிலுள்ள இந்துசமய சடங்குகளை எல்லாம் தமிழ்மொழி மூலமாக கொண்டுவர வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது.

**கேள்வி: இவை மட்டுமா? இதை விட வேறு ஏதாவது பிற காரணிகள் உள்ளனவா?**

**பதில்:** இவைமட்டுமல்ல. எனது வாலிபக் காலத்தில் தந்தை பெரியாரின் பகுத்தறிவுக்கருத்துக்கள் என்னைக் கவர்ந்தன எனலாம். குறிப்பாக மூடநம்பிக்கைகளை ஒழிக்க வேண்டும் என்ற அவரது சிந்தனைகள் என்னை மிகவும் கவர்ந்தன. மிக ஆழமாகத் தேடிப்பார்க்கும் போது 'பெரியாரிசம்' என்ற தத்துவம் ஏற்கக் கூடிய ஒன்றாகும். அதே நேரத்தில் கடவுள் இல்லை என்ற அவரது வாதம் மட்டும் இல்லாதிருக்குமானால், அவரது முற்போக்குச் சிந்தனைகள் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும்.

**கேள்வி: இது தொடர்பான உங்களது ஆரம்ப முயற்சி எந்த வகையில் அமைந்தது எனக் கூறுவீர்களா?**

**பதில்:** தமிழில் திருமணம் செய்யலாம், எனத் திருக்குறளைப் பிரதானமாகக் கொண்டு பல முன்முயற்சிகள் பலராலும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவை காலப் போக்கில் மறையும் நிலை ஏற்பட்டிருந்தது. அதன் பின்னர் சமயக்கிரியைகளை தமிழ் மொழிமூலம் மேற்கொள்ளலாம் என்ற முயற்சிகளும் தொடங்கப்பட்டன. அவையும் உரிய இலக்கை அடையவில்லை. இவற்றை எல்லாம் நான் சிந்தித்து பார்த்த போது இதற்கான அடிப்படைக் காரணம் எதுவாக இருக்கலாம் என எண்ணிப் பார்த்தேன்.

அதன் வெளிப்பாடே ஆகமங்கள் திருமுறைகள் ஊடாக மந்திர உச்சாடனங்களை தமிழ்மொழிப்படுத்தினாலேயே எமது சடங்கு முறைகளில் அந்த உணர்வு மேலோங்கும் என்ற எண்ணம் ஏற்பட்டது. எனவே மந்திர உச்சாடனங்களை தமிழ் மொழிக்கு மாற்றும் பணியில் குதித்தேன். பல ஆண்டுகள் பலதரப்பட்ட தேடல்களை மேற்கொண்டு பலநூல்களை ஆய்வுசெய்து ஈற்றில் அவற்றை தமிழ் மொழிப்படுத்தினேன்.

இவை இறைவனால் ஏற்றுக் கொள்ளப் படுமா என்ற உணர்வு எனக்குள் பிரகாசித்தது. சில ஆண்டுகள் இதனை அப்படியே வைத்து விட்டு, அவனது திருவுள்ளம் கிடைக்க வேண்டும் என இருந்து விட்டேன்.

## தமிழகத்தில் ஆயிரக்கணக்கான திருமணங்களை நடத்தியவர் இலங்கையில்

அவனது திருவுள்ளமும், நாட்டமும் எனக்கு கிடைத்த உடனே அவற்றை நூலாக மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டேன். அதன் பெறுபேறாகவே 'செந்தமிழாக்கம்குடநீராட்டு' நன்னூல் பிறந்தது. தமிழ் சிவதீட்சை செய்யவும், குடமுழுக்குகளைச் செய்யவும் வழி பிறந்தது. இதற்குச் சிவாச்சாரியார்களின் பலமான எதிர்ப்பு அன்று ஏற்பட்டது. இது தொடர்பான பல கருத்தரங் குகளும், விமர்சனங்களும் நடத்தப்பட்டன. எதிர்ப்பு, ஈர்ப்பு, வரவேற்பு, வாழ்த்து என்ற ரீதியில் எனது முயற்சிகள் வெற்றி இலக்கைத் தொட்டன எனலாம்.

**கேள்வி: இதுவரையில் நீங்கள் எத்தனை சிவதீட்சைகள், குடமுழுக்குகள், திருமணங்களை நடத்தியுள்ளீர்கள்?**

**பதில்:** ஆண்டுதோறும் 75 பேருக்கு தமிழில் சிவதீட்சை அளித்து வருகிறேன். 1227 குடமுழுக்குகளை நடத்தியதுடன், அதற்கான பயிற்சிகளையும் அளித்து வருகிறேன்.

இதன் மூலமாக சென்னையில் 60 ஓதுவார்கள், 60 சிவாச்சாரியர்கள், மதுரையில் 60 சிவாச்சாரிகள், திண்டுக்கல்லில் 130 சிவாச்சாரியார்கள் பயிற்றப்பட்டுள்ளனர். 1850க்கு மேற்பட்ட திருமணங்களையும் நடத்திவைத்துள்ளேன்.

**கேள்வி: இதுவரையில் தாங்கள் எத்தனை நூல்களை எழுதியுள்ளீர்கள்?**

**பதில்:** பிள்ளையார் போற்றி நானூறு, வேல்போற்றி நூற்றெட்டு, வாரியார் சுவாமிகள் வரலாற்றுப் போற்றி, சைவ அநுட்டான விளக்கம், 'செந்தமிழாக்கம்குடநீராட்டு நன்நூல்', தமிழ் வேள்வி, திருவருட்பிரகாச வள்ளலார் அறநெறியும் அமைப்புகளும், சைவசித்தாந்த பரிணாமவளர்ச்சி, சில வேள்விப் பாடத்திரட்டு, திருவடிப்பேறு, திருமந்திரச்சிந்தனை, பன்னிரு திருமுறை போற்றி வழிபாடு, தௌத்தியம், சந்தான குரவர் போற்றி, காசிமடமே கலக்கமேன், அம்பிகை போற்றி ஐங்குறுநூறு, ஊழும் உயர்குறள் மூன்றும், திருவள்ளுவர் மும்மணிக்கோவை, சரவணப்பெருமாள் சரணப் பத்து, கருவுறு அறிவுக்கோவை, வண்டமிழில் வாழ்வியல் சடங்குகள், திருமந்திரம் ஓர் அறிமுகம், இவரேசைவர் இனிதே காண்க, நக்கீரரோடு ஒரு நடைபயணம் (அச்சில்) என்பன ஆகும்.

**கேள்வி: இந்த நூல்கள் தொடர்பாக ஏதேனும் விசேட விடயங்களை கூற விரும்புகிறீர்களா?**

**பதில்:** முக்கியமாக இரண்டு விடயங்களைக் குறிப்பிடத்தான் வேண்டும். வண்டமிழில் வாழ்வியல் சடங்குகள் தொடர்பாக நாம் முயற்சிகளில் ஈடுபட்டபோது பலத்த எதிர்ப்புகள் ஏற்பட்டன. இதனை ஒரு மெல்லறிவு அனுபவம் எனக் கொள்ளலாம். இதற்கான பாடல்களுக்கான பண்கள் கூட எனக்கு இறைவனால் கிடைத்தன என்றே சொல்வேன்.

அடுத்தது எனது முயற்சிகளுக்கு மேலும் வலுவூட்டும் வகையில் விஸ்வ இந்து பரிஷாத் அமைப்பினர் 'யார் சைவர்' என்ற நூலை வெளியிட்டார்கள். அந்த நூலிலிருந்த அடிப்படைக் கருத்துக்கள் என்னைச் சீண்டின. அதற்கு ஆதாரபூர்வமாகப் பதில் அளிக்கும் வகையில் 'இவரே சைவர் இனிதே காண்க' என்ற நூலை எழுதினேன்.

அறிவார்ந்த இந்த விமர்சனநூலை பின்னர் அவர்களே ஏற்றுக்கொண்டனர். இவற்றை எனது எழுத்துப்பணிக்கு கிடைத்த வெற்றிகளாகக் கருதுகிறேன்.

**கேள்வி: தங்களது இந்தப் பணிகள் தொடர்பாக இலங்கையிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஏதாவது தொடர்புகள் ஏற்பட்டனவா?**

**பதில்:** முன்னர் ஏற்படவில்லை. இப்போது தான். கலை ஆர்வலரும், வைத்திய கலாநிதியுமான இந்திரகுமார் அவர்களது முயற்சியால், அவரது மகளின் திருமணத்தை தமிழில் நடத்திவைப்பதற்காக வந்திருக்கிறேன். கொழும்புத் தமிழ்ச் சங்கம் எனது நூலை அண்மையில் வெளியிட்டு இந்த முயற்சியை ஆர்வப்படுத்தியுள்ளது. மேலும் பல ஆரோக்கியமான பயன்தரு நடவடிக்கைகள் ஏற்படும் என நம்புகிறேன்.

செவ்வி கண்டவர் :- நாச்சியூரான்

# வள்ளுவர் கோட்டம் என்னும் வனப்புமிகு தோட்டம்

உலகத்தில் இன்று திருக்குறள் பொது மறையாக இன, மத, சாதி, சமய பேதமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. "புள்ளுவம் ஒன்றில்லாப்புனிதவாழ்வுக்குவள்ளுவம்தலை சிறந்த வழிகாட்டியாகும்." உலகத்திலுள்ள அனைத்து மக்களினாலும் போற்றிக்காக்கப்பட வேண்டிய நிறைவான அறிவுக் களஞ்சியம் திருக்குறள்.

திருக்குறளுக்கு முப்பால் நூல், உத்தர வேதம், தெய்வ நூல் திருவள்ளுவர் பொய்ய மொழிவாயுறை வாழ்த்து, பொதுமறை, தமிழ் மறை என பல மறுபெயர்கள் இருக்கின்றன. பல சிறப்பு பெயர்கள் பொருந்திய இந் நூலை எழுதிய திருவள்ளுவருக்கும் பல பெயர்கள் உண்டு. தெய்வப்புலவர், முதற் பாவலர், செந்தாப்போதகர், பெருநாவலர், நாயனார் ஆகியன.



பொதுமறையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட திருக்குறளும், திருவள்ளுவரும் என்றும் அழியாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தமிழ்நாட்டில் வள்ளுவர் கோட்டம் கலைஞர் கருணாநிதியினால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. பல சிறப்புக்கள் அமைந்த இந்த வள்ளுவர் கோட்டத்தை இந்தியாவுக்குச் செல்லுகின்ற அனைவரும் பார்க்க வேண்டியது அவசியம் ஆகும்.

1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கலைஞர் கருணாநிதியினால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் பக்நத்தீன் அலி அகமது அவர்கள் திறந்து வைத்தார்.



பல அமைப்புக்கள் கொண்டது வள்ளுவர் கோட்டம்.

சிற்பத்தேர் : தமிழ் நாட்டிலுள்ள திருவாரூர் திருக்கோயில் தேரின் வடிவமைப்பைக் கொண்டுள்ளது. பீடம் 25 அடி சதுரப் பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளது.

7 அடி உயரம் கொண்ட இரண்டு அழகிய யானைகள் இத்தேரை இழுப்பது போல அமைக்கப்பட்டுள்ளது. பெரியதும், சிறியதுமாக பக்கத்திற்கு நான்கு சக்கரங்கள். ஒவ்வொரு ச... லைக் கொண்டது.

பெரிய சக்கரத்தின் குறுக்களவு 111/4 அடி, பருமன் 21/2, தேரின் அடித்தள அடுக்குகளில் மிக நுண்ணிய அழகிய சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிற்பங்கள் குறிப்பிட்ட குறட் பாக்களின் பொருளை விளக்குகின்றன.

திருவள்ளுவர் சிலை இருக்கின்ற கருவறை தரையிலிருந்து 30 அடி உயரத்தில் உள்ளது. இது 40 அடி அகலத்தில் எண் கோண வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. தேர் கலசத்தின் உயரம் 5 அடி. தேரின் மொத்த உயரம் தரையிலிருந்து 101 அடி.

திருவள்ளுவர் சிலையின் உயரம் 7 அடி. திருவள்ளுவரின் சிலை மூன்று விரல்களை உயர்த்திய நிலையில் காணப்படுகிறது. மூன்று விரல்களும் முப்பாலை உணர்த்துகின்றது.

அரங்கம்: பழம்பெரும் பண்பாட்டின் அடிப்படையில் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

தோரணவாயில், தோரணவாயில் பார்வையாளர்களை அரங்கத்திற்கு அழைத்துச் செல்லுகின்றது. தூண்கள் ஏதுமில்லாது அமைக்கப்பட்ட இந்த அரங்கத்தின் நீளம் 220 அடி. அகலம் 100 அடி.

ஆசியாவிலே உள்ள மிகப்பெரிய அரங்குகளில் இதுவும் ஒன்று. நாலாயிரம் பேர் இந்த அரங்கத்தில் அமர்ந்திருந்து நிகழ்ச்...களிக்க முடியும். அரங்கத்தைச் சுற்றி தாழ்வாரம், இதன் நீளம் 20 அடி. அரங்கத்தின் மேல் மாடியிலும் ஒருமைய மாடமாகத் தாழ்வாரம் உள்ளது. இதுவே குறள் மணி மாடம்.

குறள் மணிமாடம்: குறள் மணிமாடச் சுற்றாடலில் அறத்துப்பால் கருநிறப்பளிங்கிலும், பொருட்பால் வெண்ணிறப்பளிங்கிலும், காமத்துப்பால் செந்நிறப்பளிங்கிலும் திறந்த புத்தக வடிவில் மிக அழகாக பொறிக்கப்பெற்றுள்ளன.



வேயாமாடம்: திருவள்ளுவரின் சிலையைப் பார்வையிடச் செல்ல கோபுரம், கலசம் ஆகியவற்றைக் காண்பதற்கு வேயாமாடம் அமைந்துள்ளது.

இதனுடைய நீளம் 220 அடி. அகலம் 140 அடி. இங்குகலசம், கோபுரம், திருவள்ளுவரின் சிலை ஆகிய மூன்றின் நிழலுருவமும் தோன்றுவதற்கு மூன்று நீர்நிலைகள் உள்ளன.

இந்தியாவுக்குச் செல்லுகின்ற அனைவரும் தமிழ் நாட்டுக்குச் செல்ல வேண்டும். தமிழ் நாட்டுக்குச் செல்லுகின்றஅனைவரும் தவறாமல் சென்று பார்வையிடவேண்டிய முக்கியமான இடம்வள்ளுவர் கோட்டம்.

சென்னையில் வள்ளுவர் கோட்டம் இருக்கின்றது. மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து சுமார் 20 கிலோமீற்றர் தூரத்திலேயே பல சிறப்புக்கள் பொருந்திய வி.ரி.கதிர்காழநாதன் வள்ளுவர் கோட்டம் இருக்கின்றது.

-வி.ரி.கதிர்காழநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு வசதிகளுக்காகத் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் பல்வேறு வீடமைப்புத் திட்டங்களும் ஒன்றிணைக்கப்பட்டு பொதுவான ஒரு வீடமைப்புக்கொள்கை உருவாக்கப்படும். அதன் மூலம் வெகுவிரைவில் 12ஆயிரம் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படும். இந்தத்திட்டத்தின்படி ஒரு லட்ச ரூபா வரை கடனாகவும் மற்றும் ஒரு பகுதி பொருட்களாகவும் வழங்கப்படும். இத்திட்டத்தை முறைப்படி நடைமுறைப்படுத்தினால் காலப்போக்கில் தோட்டத் தொழிலாளர்களின் லயம், குடில்கள் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போகும் என நம்பிக்கையுடன் கூறுகின்றார் பொது வசதிகள், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் கலாநிதி பிரதாப் ராமானுஜம்.

இந்த அமைச்சு மலையக மக்களுக்காக, அவர்களின் வளர்ச்சிக்காக பணியாற்றக்


கலாநிதி பிரதாப் இராமானுஜம்

வாங்கிக்கொண்டு, பழைய குருடி கதவைத் திறடி, என்று ஒரே ஒரு எட்டடிக் காம்பிராவை மட்டும் கட்டிக்கொண்டு இதுதான் வீடு என்கின்றனர்.

களைப் பெற்றுக் கொடுத்தல், துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், வீடமைப்புப்பணிகளைக் கண்காணித்தல், வீடமைப்பதற்கான ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்குதல் என்ற சகல பொறுப்புகளும் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிடமே ஒப்படைக்கப்படும்.

தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்பிற்கு பெருந்தோட்டத்துறைகள் அமைச்சும் கணிசமான நிதியை வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிய திட்டத்தின்படி காணி அமைப்புக்கு ஏற்ப தனித்தனியான வீடுகள், அல்லது இரட்டை வீடுகளும் சூழவுள்ள காணிகளும் வழங்கப்படும்.

இவ்வாறு வழங்கப்படும் வீடுகளுக்குத் தலா ஒரு லட்ச ரூபா வரை வழங்கப்படுவதோடு, கூரைத்தகடுகளும், மலசல கூட உபகரணங்களும் இலவசமாக வழங்கப்படும்.

பிக்கொண்டிருந்தனர்.

இப்பொழுது உண்மை நிலை தெளிவுபடுத்தப்பட்டுள்ளதால் முதற்கட்டமாக மூவாயிரம் பேருக்கு மலையகத் தமிழ் பாடசாலைகளின் ஆசிரியர்களாக நியமனம் வழங்கப்படும் என உறுதியளித்தார்.

அரசியல்வாதிகளின் தலையீடுகளுக்கும், சிபார்சுகளுக்கும் இடமில்லை. தகுதியும், திறமையும் உடையவர்களுக்கு நிச்சயம் நியமனம் வழங்கப்படும்எனவும் அவர் சொன்னார்.

இதே போன்று சுகாதார வசதிகள், வாசிகசாலைகள், சுயதொழில் முயற்சிகளுக்கு ஊக்கமளித்தல் என்பனவும் இந்த அமைச்சின் வசம் இருக்கின்றன

ஆனால், அவை உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை. அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்து, ஐ.தே.கவுடன் சேர்ந்த போது எஸ்.சதாசிவம் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். இவ

# பெருந்தோட்டத் துறையில் பொதுவான வீடமைப்புத் திட்டம்

கூடிய அமைச்சு, இதன் செயலாளராக மலையக மக்களின் உயர்வில் அக்கறை உடையவரான, இந்திய வம்சாவளி வந்தவர் என்ற பெருமையை உடைய உங்களை ஜனாதிபதி நியமித்துள்ளார். இப்பாரிய பொறுப்புகளை ஏற்றிருக்கும் நீங்கள் இம் மக்களின் அடிப்படை வசதிகளுக்காக மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் என்னவென்று கேட்டபோதே கலாநிதி இராமானுஜம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கம்பீரமான தோற்றம், கணீர் என்ற குரல் வளம், தனக்கே உரிய அமைதியுடன் இப்படித் தொடர்கிறார் அவர்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வெறுமனே வீடுகளைக் கட்டிக்கொடுத்துவிட்டால்


குறைப்பிரசவமாக உள்ள வீடமைப்புத்திட்டம்

அவர்களுக்கு எல்லாம் செய்துகொடுத்துவிட்டதாகக் கருத முடியாது.

அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகளான கல்வி, சுகாதாரம், சுத்தமான நீர், வசதிகளுடனான வீடு, வீதி அமைப்பு, போக்குவரத்து, கலை கலாசார அபிவிருத்தி, சுயதொழில் என அனைத்து விடயங்களையும், ஏனைய அமைச்சுகளின் உதவியுடன் சமூக அபிவிருத்தி, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மூலம் செய்ய முடியும்.

ஆனால் இதுவரை காலமும் இந்த அமைச்சுக்குரிய சக்தியையும், பொறுப்புகளையும் எவரும் அறியவும் இல்லை. அதனைப் பயன்படுத்தவும் இல்லை.

வீடமைப்புத் திட்டத்தை எடுத்துக்கொள்வோம். சுய முயற்சி வீடமைப்புத் திட்டம், கடன் உதவி வீடமைப்புத் திட்டம், கூட்டுறவு முறை வீடமைப்புத் திட்டம், மாடிவீட்டுத் திட்டம், இப்படிப்பல வீடமைப்புத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவை இன்னும் கூட குறைப்பிரசவங்களாகவே இருக்கின்றன. எவையும் முற்றுப்பெறவில்லை.

முன்னாள் அமைச்சர் சந்திரசேகரனின் ஏழு பேர்ச்சஸ் காணி, தனியான வீடு என உருவாக்கப்பட்ட திட்டம் ஓரளவு பயனளித்துள்ளது. ஆனால் அப்பணி தொடரவில்லை.

காணிகளையும், கடனையும் வாங்கிய பல தொழிலாளர்கள் வீட்டையும் கட்டவில்லை. வாங்கிய கடனையும் திருப்பிச் செலுத்தவில்லை.

பலதோட்டங்களில் வாங்கிய காணியைக் கூட வெளியார்களுக்கு விற்றுள்ளனர். இவர்களால் இக்காணிகளை வெளியாருக்கு விற்க முடியாது. வெளியாருக்கு விற்ற காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படமாட்டாது. இப்படிக் காணிகளை விற்பவர்கள், அதே தோட்டத்தில் தொழில் புரியும் சக தொழிலாளி ஒருவருக்கே விற்க முடியும். வெளி ஆட்களுக்கு விற்கப்பட்ட காணிகள் பறிமுதல் செய்யப்படும்.

ஒரு சில தோட்டங்களில் கடன்களையும் வாங்கி வீடு கட்டட உபகரணங்களையும்

மாடி வீட்டுத்திட்டத்தை தொழிலாளர்களே ஏற்றுக்கொள்ளவில்லை. இதைவிட அழகாக நாங்கள் வீடுகளைக்கட்டி இருந்தோம். அவற்றை எல்லாம் இடித்துத் தள்ளிவிட்டு எல்லா வீடுகளும் ஒரே மாதிரி இருக்க வேண்டும் என்று மாடிவீட்டைக்கட்டினார்கள். உறுதியற்ற கட்டிடங்கள், வசதிகள் இல்லை. ஒரு லயத்திற்கு மேல் ஒரு லயம் என்கின்றனர்.

இவற்றை எல்லாம் விட மற்றும் ஒரு பிரச்சினையும் தோட்டங்களில் காணப்படுகின்றன.

காணிகளைப் பெற்று வீட்டைக்கட்டிக் கொண்டு அங்குகுடியேறியவர்கள், பழைய லயன் காம்பிராக்களை தோட்ட நிர்வாகங்களிடம் ஒப்படைப்பதில்லை. இவர்கள் பழைய லயன் காம்பிராக்களை வெளி ஆட்களுக்கு வாடகைக்கு விட்டுள்ளனர். இதை தோட்ட நிர்வாகிகள் அவதானிப்பதில்லை.

தோட்டத்தில் வேலை செய்யும் வீட்டு வசதியற்ற வேறு குடும்பங்களுக்கு அவற்றை வழங்கினால் அதை ஏற்க முடியும். இவ்விடயத்தில் தோட்ட நிர்வாகிகளும், நலன்புரி உத்தியோகத்தர்களும் பாரபட்சமற்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீடமைப்புக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. கூரைத்தகடுகள் வழங்கப்பட்டுள்ளன. மலசல கூடங்களை அமைப்பதற்கான சகல உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் எத்தனை மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை எவரும் அவதானிக்கவில்லை.


சந்திரசேகரனின் வீடமைப்புத்திட்டம்

இதற்கெல்லாம் காரணம் உருப்படியான ஒரு கொள்கைத்திட்டம் இல்லை என்பது தான்.

எனவே முதற்கட்டமாகப் பலமாதிரியான இந்த வீடமைப்புத் திட்டங்களையும் ஒன்றிணைத்து பொதுவான ஒரு வீடமைப்புக் கொள்கை உருவாக்கப்படும். இதன்படி தோட்டங்கள் தோறும் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படும். வீடமைப்புப்பணிகள், [illegible]

சகல வீடுகளுக்குமான பண வசதிகளும், குடிநீர் வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

எக்காரணம் கொண்டும் தொழிலாளர்களிடம் பணத்தை நேரடியாகக் கொடுக்காமல், கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் வீடுகளைக்கட்டிக் கொடுப்பதே அமைச்சின் நோக்கம் என்று கலாநிதி பிரதாப் இராமானுஜம் கூறினார்.

அடுத்ததாகக் கல்வி. பிற சமூகங்களுடன் போட்டியிடும் அளவுக்கு கல்வி வளர்ச்சி காணப்பட்டுள்ளது. ஆனால் அவை வெளிக்கொணரப்படவில்லை.

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிக்கு சேர்க்கப்பட்டவர்கள் மட்டும் தான் ஜீ.சீ. ஈ உயர்தரம் வரை படித்துள்ளவர்கள் என இதுவரை காலமும் புள்ளிவிபரம் காட்டப்பட்டுள்ளது. இதனால் ஜனாதிபதியும் இதனை மனதில் கொண்டு மலையகத்தில் ஜீ.சீ.ஈ உயர்தரம் பெற்றவர்கள் அனைவருக்கும் நியமனம் வழங்கும்படி கைப்பட உத்தரவிட்டார்.

ஆனால் விவரங்களைத்திரட்டி எட்டாயிரம் பேர் தகுதியுடையவர்களாகஇருக்கின்றனர்என்று காட்டியபோது ஜனாதிபதியே மலைத்துவிட்டார்.

இதுவரை காலமும் காட்டி வந்த கணிப்பீடுகளின்படி ஒரு எழுநூறு அல்லது எண்ணூறு பேர் கூட ஜீ.சீ.ஈ உயாதர தராதரமுடையவர்களாக இருக்க மாட்டார்கள் என்றே தவறாக எடை போடப்பட்டள்ளது.

இது ஏன், தொழிற்சங்கத் தலைவர்களிடமும் அமைச்சர்களாக இருந்தவர்களிடமும் மலையகத்தில் படித்த இளைஞர் யுவதிகளின் விவரங்கள் கோவைப்படுத்தப்படவில்லை. இந்த உண்மை தெரியாமல் வெளிமாவட்டங்களில் இருந்தாவது ஆசிரியர் [illegible] என்று கோசம் எழுப்

ருடைய காலத்தில் ஒரு குடும்பத்திற்கு முப்பதாயிரம் ரூபா என்று 12 கோடி ரூபா குறிப்பிட்ட தொழிலாளர்களின் பெயர்களில் இலங்கை வங்கியில் வைப்பிடப்பட்டு பாஸ்புத்தகங்களும் வழங்கப்பட்டன. கடந்த இரண்டு வருடங்களுக்கு மேல் இந்த 12கோடி ரூபாவும் வங்கியில் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் வீடு கட்டினால் மட்டுமே இப்பணத்தைப் பெற முடியும். இவர்களுக்கு காணியும் இல்லை. வீடு கட்டவும் இல்லை. எப்படிப் பணத்தை எடுப்பது? திட்டமிட்டு செயல்பட்டிருந்தால் அதன் நன்மை தொழிலாளர்களுக்குக் கிட்டி இருக்கும்.

ஆனால் இப்போது பலனை அனுபவிப்பது அரச வங்கி என்பது மட்டும் உண்மை.


பழைய வரிசை லயன்

இதேபோன்று சுய தொழில் வாய்ப்புகளுக்கும் பெருந்தொகையான பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. சுய தொழில் முயற்சிக்காகக் கடன் பெற்றவர்கள் அதைத் திருப்பிச் செலுத்தினால் மேலும் பலருக்கு சுய தொழில் கடன்களை வழங்கி இருக்க முடியும். முறைப்படி இந்தத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், இன்று மலையகத்தில் வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஓரளவு குறைப்பதோடு பொருளாதார வளர்ச்சியையும் அடைத்திருக்கலாம்.

அமைச்சர் சந்திரசேகரன் சமூக அபிவிருத்தி அமைச்சராக இருந்தபோது, சுமார் 20 லட்ச ரூபாவுக்கு மேல் சுய தொழில் முயற்சிக்கடன்களைப் பெருந்தன்மையுடன் வழங்கி உள்ளார். ஆனால் இக்கடன் பெற்றவர்கள் எவருமே கடனைத்திருப்பிச் செலுத்தவில்லை. அதனால் மீண்டும் கடன் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான தவறுகளுக்கு எல்லாம் யார் பொறுப்பு? எவரையும் விரல் நீட்டி அடையாளம் காட்ட விரும்பவில்லை.

மலையகத்தொழிலாளர்களைப்பொறுத்தவரை, சமூக அபிவிருத்தி தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு பொன் முட்டை இடும் ஒரு வாத்து. அதனைப் பக்குவமாக வளர்த்து கடைசிவரைபயன் அடைய வேண்டும். மாறாக கழுத்தைத் திருகிப் போட்டுவிடக் கூடாது எனவும் அமைச்சின் செயலாளர் இராமானுஜம் கூறினார். இவ்வளவு உண்மைகளும் அங்கு புதைந்து கிடப்பது ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா?

திரட்டித் தந்தவர்
இரா.புத்திரசிகாமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸ் மேலும் சிதையுமா? பலப்படுமா?

முஸ்லிம் அரசியல் அரங்கில் கடந்த வாரம் இரு முக்கிய நிகழ்வுகள் இடம் பெற்றன. அந்த இரு நிகழ்வுகளுமே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் தொடர்பானவை ஆகும்.

ஒன்று, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக கல்குடாவில் இடம் பெற்ற ஹர்த்தால். மற்றது குமாரி குரே விவகாரத்தினால் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து வெளியேற்றப்பட்ட எம்.பிக்களான றிஷாத் பதியுதீன், நஜீப் அப்துல் மஜீத் ஆகியோர் மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்ளப் பட்டவிடயம்.


றிஷாத்

இம்மாதம் முதல் வாரத்தில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள், கிழக்கு மாகாணத்தில் முகாமிட்டு, ஏட்டிக்குப்போட்டியாக கட்சிக் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தியிருந்தனர். அவை பற்றிய எமது பார்வை சென்றவார 'சுடர்ஒளி'யில் அலசப்பட்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாகவே கல்குடாவில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு எதிரான ஹர்த்தால் – கடையடைப்பு இடம்பெற்றன.

கடந்த 15 ஆம் திகதி தலைவர் ஹக்கீம் கல்குடாத் தொகுதியிலுள்ள ஓட்டமாவடிக்குச் செல்வதற்கு ஏற்பாடாகியிருந்தது. அதை யடுத்து அவரது விஜயத்தை எதிர்த்து அங்கு ஹர்த்தால் நடத்துவதற்கு ஒரு குழுவினர் தயாராகினர்.

### ஹார்த்தாலின் பின்னணி

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடாத் தொகுதியைப் பிரதிநித்துவப்படுத்துகின்ற முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான. எம்.எஸ். அமீரலியின் ஏற்பாட்டிலேயே ஹக்கீமுக்கெதிரான ஹர்த்தால் நடத்தப்பட்டதாக அறிய முடிந்தது.

அமீரலி எம்.பி.முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடன் முரண்பட்டு அதன் உச்சத்தை அடைந்திருக்கின்ற நிலையிலேயே அவருக்கெதிரான போர்க் கொடியைத் தூக்கியிருக்கிறார்.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் முடிந்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைத்த சூட்டோடு முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் சிலர் தலைவர் ஹக்கீமுடன் முரண்படத் தொடங்கினர். அவர்களுள் ஒருவரே அமீரலி எம்.பி.

ஆரம்பத்திலேயே ஹுஸைன் பைலா, றிஷாத் பதியுதீன், நஜீப் அப்துல் மஜீத், பைஸால் காஸிம், அமீரலி ஆகிய ஐந்து எம்.பிக்களும், அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்துகொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தனர். அதற்காக தலைவர் ரவூப் ஹக்கீமை வற்புறுத்தி வந்தனர்.

ஆனால், தலைவர் இறங்கி – இணங்கி வரவில்லை. அதனால் அவர்கள் மாற்று வழிகளைக் கையாளத் தலைப்பட்டனர். அதன் எதிரொலியாகவே ஹக்கீம் – குமாரி குரே விவகாரம் பூகம்பமாக வெடித்ததாகச் சொல்லப்பட்டது.

### மதில்மேல் பூனைகளாக பைஸால், அமீரலி

அப்போது சந்தர்ப்பம் பார்த்து ஹுஸைன் பைலா எம்.பி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசின் பக்கம் பாய்ந்தார். எம்.பிக்களான றிசாத் பதியுதீன், நஜீப் அப்துல் மஜீத் ஆகியோர் குமாரி குரே விவகாரத்தை ஹக்கீமுக்கு எதிரான பிரசார யுக்தியாகப் பாவித்தனர்.

அதவேளை, அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிபைஸால் காஸிம், மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான எம்.எஸ்.அமீரலி ஆகியோர் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும், றிஷாத் அணியினருக்கும் இடையே மதில்மேல் பூனைகளாக நின்றுகொண்டு, நிலைமைகளை அவதானித்து வந்தனர்.

றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலக்கப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால், அதன் தீர்ப்பு வெளிவரும் வரை தாம் நடுநிலைப் போக்கைக் கைக் கொள்வது என்ற நிலைப் பாட்டில் அவர்கள் இருவரும் இருந்து வந்தனர்.


ரவூப் ஹக்கீம்

எனினும் தனது சொந்த இடமான மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னாள் பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூதுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தேசியபட்டடியல் எம்.பி.நியமனம் வழங்கிய விடயம் அமீரலி எம்.பியை சீண்டிவிட்டது.

அதனால், அவர் பகிரங்கமாகவே தலைவர் ரவூப் ஹக்கீமை விமர்சிக்கவும் – கண்டிக்கவும் ஆரம்பித்தார். அது ஹக்கீமின் மட்டக்களப்பு விஜயத்தோடு மேலும் சூடுபிடிக்கத் தொடங்கியது.

### ஹக்கீமின் சீண்டல்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்யும் போது, அங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட எம்.பியாகத் தான் இருக்கின்றவேளை, தன்னுடன் கலந்து பேசாது – தனக்குத் தெரியாமலேயே பஷீர் சேகுதாதுவுடன் வந்து கூட்டங்களிலும், வேறுபல நிகழ்வுகளிலும் பங்குபற்றியதே அமீரலி எம்.பியைக் கடுமையாகப் பாதித்தது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## சொற்சிலம்பம் போட்டி இல.122

சொற்சிலம்பம் 122 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஆகஸ்ட் 29 ஆம் திகதி ஆகும். விடைகள் செப்டெம்பர் 05 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் செப்டெம்பர்12ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.120க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக் கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.120

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சா | 2 வ | 3 கா | 4 ச | ம் | ■ | 5 ந | டு |
| 6 தி | ரு | ம | தி | ■ | 7 ப | ல் | ■ |
| ■ | 8 வா | ன் | ■ | 9 தூ | ங் | கு | 10 க |
| 11 செ | ய் | ■ | 12 வ | ர | கு | ■ | ன் |
| ங் | ■ | 13 த | ர | ம் | ■ | 14 வி | னா |
| 15 கு | 16 ம | ர | ன் | ■ | 17 ந | ண் | பி |
| 18 ரு | து | ■ | 19 மு | 20 கா | ம் | ■ | ன் |
| 21 தி | ரை | ம | றை | வு | ■ | 22 க | னா |

## சொற்சிலம்பம் போட்டி இல.122

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | | ■ | 10 | | | ■ |
| ■ | | ■ | 11 | | | ■ | 12 |
| 13 | | 14 | | ■ | 15 | | |
| | ■ | 16 | | 17 | | ■ | |
| 18 | 19 | | ■ | | ■ | 20 | |
| 21 | | | | | | | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல.122

**இடமிருந்து வலம்**

1. நூறு விடயங்களை ஒரே சமயத்தில் நோக்குபவன்/ எந்நேரமும் அவதானத்துடன் இருப்பவன்
2. சபை.
7. பெரிய நிலப்பரப்பு/ தத்து.
8. ரகளை/ ஆரவாரம்/குழப்பம்.
9. திடீரென.
10. பயன்/ பெறுபேறு.
11. வலு.
13. நான்கு ரகம்.
15. பங்கு.
16. ருதுவடைதல்.
18. பக்குவம்.
20. அரைவாசி.
21. கூட்ட/ பெருக்க உதவும்.

**மேலிருந்து கீழ்**

1. சேறு.
2. கடந்து செல்லல்.
3. தேர் இழுக்கும் கயிறு.
4. தாங்கள்.
5. ஒன்றுக்கு ஒன்று இணை/ ஒப்பானது என்பதைக் குறிக்கும்.
6. ஒரு மொழி.
8. அலட்டுதல்/ ஓயாமல் பேசல்.
10. பன்மையைக் குறிக்கும்.
11. விரோத மனப்பான்மை/ எதிர்த் தன்மை.
12. தீர்ப்புக் கூறுபவர்.
13. நான்கு முறை பத்து.
14. மரமஞ்சள் போன்ற ஒரு மருத்துவத் தாவரய.
17. வழங்குக.
19. மறைவில் அடிப்பது.
20. பிரேதம் எடுத்துச் செல்வது இதில்.

## சொற்சிலம்பம்-119 பரிசு பெறுவோர்.

1. ஆர்.சினோான் அஞ்சலா,
29/39,தர்மலோகமாவத்தை,
அருப்பொல, கண்டி.
2. ம.ஸ்ரீதரன்,
299, நாவலர் வீதி,பண்டாரிகுளம்,
வவுனியா.
3. செல்வி. கு.ஜெயவதனா,
64/22, கொட்டாஞ்சனை வீதி,
கொழும்பு – 13.

### பாராட்டுப் பெறுவோர்

1. ந. ஜீவரட்ணம்,
46/29, பாரதி ஒழுங்கை,
மட்டக்களப்பு.
2. மா.நிர்மலாதேவி,
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.
3. திருமதி சந்திரா சண்முக சுந்தரம்,
மருதடி,
வல்வெட்டித்துறை.
4. செ.அருணன்,
யூனியன் குளம்,
கிளிநொச்சி.
5. கே.எம்.யேசுதாசன்,
ஆழியவளை,
தாளையடி.
6. ம.பிரகாஷ்,
451/2, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.
7. ப.யசோதா,
219, ஜெயபுரம் தெற்கு,
ஜெயபுரம்.
8. எஸ்.சற்குணானந்தன்,
துன்னாலை,
கரவெட்டி.
9. அ.அகல்யா,
4, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
10. திருமதி.ஏ.சர்மிளா,
நாவலர் றோட்,
அரியாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸ்.......

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனால், அவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் பரம விரோதியான கிழக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவைத் தனது சொந்த ஊரான ஒட்டமாவடிக்கு அழைத்து வந்து பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பித்து வைத்ததுடன் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தினார்.

### அமீரலி கொதிப்பு

இந்த நிகழ்வின் மூலம் தலைவர் ஹக்கீம் மீதான தனது அதிருப்தியை – வெறுப்பை வெளிக்காட்டியதுடன், தான் அதாவுல்லாவுடன் கூட்டிணைந்து விட்டார் என்கின்ற நிலைப்பாட்டையும் வெளியிட்டிருக்கிறார்.

இதன் பிறகே ரவூப் ஹக்கீமின் மட்டக்களப்பு விஜயத்திற்கு எதிராக தனது ஆதரவாளர்களைக் களத்தில் இறக்கி – தமது பகிரங்க எதிர்ப்பைக் காட்டினார். கடந்த 15 ஆம் திகதி கல்குடாத் தொகுதியின் முஸ்லிம் பிரதேசங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

அதேவேளை, தனக்கெதிரான ஹர்த்தால் – கடையடைப்பு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அமீரலி எம்.பியின் சொந்த ஊரான ஓட்டமாவடிக்குள் நுழைந்து முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களின் ஆதரவுடன் ரவூப் ஹக்கீம் ஊர்வலமாகச் சென்றார்.

இதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸினதும், அதன் தலைமைத்துவத்தினதும் பலத்தை – மக்கள் செல்வாக்கை – ரவூப் ஹக்கீம் ஓரளவு நிரூபித்துக்காட்டினார். பலத்த சவால்களுக்கு மத்தியிலான ஒரு சாதனையாகவும் அது கொள்ளப்படுகிறது.

### அபிவிருத்தி மாயை

அமீரலிக்கு மக்கள் வாக்களித்தமை, முஸ்லிம் காங்கிரஸுக்காகவேயன்றி அமீரலி என்ற தனி நபருக்கல்ல என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதே.

தான் எம்.பியானது முதல், பிரதேச அபிவிருத்தி – அதற்காக அரசுடன் இணைத்திருக்க வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டிலேயே அமீரலி இருந்து வருகின்றார். எதிர்க் கட்சியில் எம்.பி.யாக இருந்து கொண்டு மக்களுக்கு எதனையும் செய்ய முடியாது எனவும் அவர் கூறிவந்தார். அதனால்தான் அவர் அமைச்சர் அதாவுல்லாவின் பக்கம் சாய வேண்டிய நிலைமைக்குச் சென்றுள்ளார்.

முஸ்லிம் சமூகத்திற்கான கட்சி, உரிமைகள், அபிலாஷைகள், பாதுகாப்பு எல்லாமே அபிவிருத்தி என்பதற்குப் பிறகுதான் என அமீரலி எம்.பி. போன்றவர்கள் கருதுகின்றனர்.

### ஒற்றுமை மலர்கிறது

இவ்வாறு அமீரலி எம்.பி, தலைவர் ஹக்கீமுடன் முரண்பட்டு, முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்படுவதற்கான சூழ்நிலைக்கு வந்துள்ள நிலையில், குமாரி குரே விவகாரத்தினால் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான றிஷாத் பதியுதீன், நஜீப்.ஏ.மஜீத் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸில் மீண்டும் சேர்ந்துகொள்வதற்கான ஏற்பாடு ஒன்று அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சென்ற 16ஆம் திகதி இரவு இதற்கான இணக்கம் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும், றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத் ஆகியோருக்கும் இடையே பரஸ்பரம் பகைமையைக் களைந்து, மீண்டும் ஒற்றுமைப்படுவதற்கான சூழ்நிலை ஒன்றை உலமாசபை ஏற்படுத்தியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

இதற்கான காத்திரமான முயற்சிகளை நீண்டகாலமாக உலமாசபை மேற்கொண்டு வந்த போதிலும் இப்போதே அவை கைகூடியுள்ளன. இரு தரப்பு இழுபறி–விட்டுக் கொடுப்பு இன்மையால் உலமா சபையின் முயற்சிகள் எவையும் ஆரம்பத்தில் பயனளிக்காமல் போய்விட்டன.

அதனால், இவ்விவகாரம் உயர் நீதிமன்றத்தில் வழக்குவரை சென்றுவிட்டது. எதிர்வரும் 26ஆம் திகதி இவ்வழக்கின் தீர்ப்பு வழங்கப்படவிருக்கிறது.

இந்த நிலையிலேயே எம்.பிக்களான றிஷாத், நஜீப் ஆகியோரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் தமக்கிடையிலான பிணக்கை, சமாதான வழியில் தீர்த்துக்கொள்வதற்கு முன்வந்துள்ளனர்.

### ஜம்மியதுல் உலமாவின் பணி

அதற்கமைய அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவினால் தயாரிக்கப்பட்ட புரிந்துணர்வுஒப்பந்தத்தில்இம்மூவரும்கையெழுத்திட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் றிஷாத் பதியுதீன், நஜீப் அப்துல் மஜீத் ஆகியோரைக் கட்சியிலிருந்து விலக்கிய தீர்மானத்தை முஸ்லிம் காங்கிரஸ் வாபஸ் பெற்றுக்கொள்ளும். அதேவேளை, றிஷாத், நஜீம் ஆகியோர் கட்சிக்கெதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வர்.

அத்துடன், இரு தரப்பினரும் நாடாளுமன்றத்தில் அது தொடர்பான அறிக்கை விடுவர் எனவும் இணக்கம் காணப்பட்டது.

உலமா சபையினரின் முன்னிலையில் இடம்பெற்ற பேச்சுக்களில் இவை தொடர்பில் சுமுகமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

உண்மையில் இவ்விடயத்தில் ரவூப் ஹக்கீம், றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத் ஆகியோரின் அக்கறையை விட உலமாசபையின் கடின உழைப்பே சமூக ஒற்றுமையை ஓரளவு பலப்படுத்த உதவியுள்ளது எனக் கூறலாம்.

இப்படி முஸ்லிம்கள் தொடர்பான ஒவ்வொரு விடயத்திலும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா நேரடியாகத் தலையிட்டு தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதையே முஸ்லிம் சமூகம் பெரிதும் எதிர்பார்க்கிறது– வரவேற்கிறது.

குமாரி குரே விவகாரம் பூகம்பமாக வெடித்தவுடனேயே முஸ்லிம் மக்களும், அமைப்புகளும் அது தொடர்பில் உலமா சபையின் தீர்ப்பு என்னவென்று கேட்கத் தொடங்கினர்.

அவ்விடயத்தை உலமா சபையும் மிகவும் நுணுக்கமாக–இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படையில் நோக்கியதுடன், அதற்குத் தீர்ப்பு என்பதை விட முஸ்லிம் சமூகத்தின் தலைகுனிவுக்கான தீர்வு என்ன என்பதில் கூடிய கவனம் செலுத்திவந்தது.

அதனால் முஸ்லிம் சமூக நிறுவனத்தின் உடைவும், பாதிப்பும் ஓரளவு தடுக்கப்பட்டிருக்கின்றன.

அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் புதிய தலைவர் அஷ்ஷெய்க் றிஸ்வி முப்தி, பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அப்துல் நாஸர் ஆகியோர் உள்ளிட்ட தலைமைக் குழுவினர் இலங்கையின் அரசியல் நிலைவரத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்து –முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பில் கூடிய அக்கறையுடன் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ரவூப் ஹக்கீம்–றிஷாத் பதியுதீன் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்டு, சுமுகமான தீர்வு ஒன்றை ஜம்மியத்துல் உலமா பெற்றுக்கொடுத்திருப்பது போன்று ஹக்கீம் – பேரியல் இணைத் தலைமைத்துவப் பிரச்சினை, ஹக்கீம்–அதாவுல்லாஹ் முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், முஸ்லிம் அரசியல் அரங்கில் நிறைய அனர்த்தங்களைத் தவிர்த்திருக்க முடியும்.

### கிழக்கு உலமாவின் அரசியல் தரகு

அப்போதெல்லாம் அம்பாறை மாவட்ட உலமாசபை, கிழக்கு மாகாண உலமாசபை ஆகிய பெயர்களில் இயங்கிய அமைப்பு, பிரச்சினையோடு சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் பொதுவாக–நடுநிலை நின்று – நீதி நியாயமான தீர்வுகளை – கருத்துக்களை வெளியிடாது ஒரு பக்கச்சார்பாக நடந்துகொண்டதனால்,சிறிய கருத்து முரண்பாடுகள்–பிரச்சினைகள் கூட பூதாகாரமாக வெடித்தன. எரிகின்ற நெருப்பில் எண்ணெயை ஊற்றிய கதையாகிப்போய் விட்டது.

கிழக்கு உலமாசபையின் தலைவர் ஓர் அரசியல் தரகர் போன்று முஸ்லிம் காங்கிரஸின் உள்வீட்டுப்பிரச்சினையின் போதும் சமூகப் பிரச்சினையின் போதும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே வெளியிட்டு வந்தார்.

அப்போது, இது குறித்து அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவிடம் முறையிட்ட போது –அம்பாறை மாவட்ட உலமா சபை என்பது தமது கிளை அமைப்பு எனவும், அதற்கு சுயமாக தீர்மானங்களை எடுக்க முடியாது எனவும் பதிலளிக்கப்பட்டது. அதேவேளை, கிழக்கு மாகாண உலமா சபை என ஓர் அமைப்பு இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும் கூறப்பட்டது.

ஆனால் அதன் பின்னர் கூட கிழக்கு மாகாண உலமா சபை என்ற பெயரில் அதன் தலைவர் எனக் கூறப்பட்டவர், ரவூப் ஹக்கீம், அமைச்சராக இருந்த காலத்தில் தொடர்ச்சியாக அவருக்கு சார்பான அறிக்கைகளை ஊடகங்களில் வெளியிட்டே வந்தார். அதன் மூலம் மக்கள் பிழையாக வழிநடத்தப்பட்டனர். இப்போது ஹக்கீம் அமைச்சர் பதவியில் இல்லை என்பதனால் என்னவோ, கிழக்கு உலமா சபை மூச்சுக்கூட. விடாமல் ஒதுங்கிவிட்டது.

எனவே, கண்ணியமிக்க உலமாக்களுள் ஒரு சிலர் இவ்வாறான அரசியல் தரகு வேலைகளில் ஈடுபடுவதை அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா எதிர்காலங்களில் தடுத்து நிறுத்த வேண்டும். ஜம்மியத்துல் உலமாவின் மாவட்டக்கிளைகள் எந்த விடயத்திலாயினும் பிழையாக – அரசியல் பக்கச் சார்பாக நடந்துகொண்டால், அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரவூக் ஹக்கீம்– றிஷாத் பதியுதீன் பிணக்கில் பக்கம் சாராது நடுநிலை நின்று – சமூக நலன் கருதி – நீதி, நியாயமான தீர்மானங்களைமேற்கொண்டஜம்மியத்துல்உலமாவின் மீது முஸ்லிம் சமூகம் வைத்திருக்கின்ற நம்பிக்கை –நல்லபிப்பிராயம் வீண்போகக் கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பு.

**அஸ்லம் எஸ்.மௌலானா**

அவுஸ்திரேலியாவில்
சுடர்ஒளி
பெற்றுக்கொள்ள
எமது விநியோகஸ்தர்கள்
M.K.S.International
23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்க |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்க |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேட் 7.55 அன்பு மடல் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா 7.55 அன்பு மடல் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஒருகதையின் கதை |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ஹோலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பின் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | சப்தஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | டாப்10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | இப்படிக்கு நீங்கள் | கோல்டன் மூமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திவ்ய வானம் | சமையல் | மங்கை | மங்கை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | (ஜேம்ஸ்பண்டு) | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (கிளசிக்) | (பமிலி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேடனி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேடனி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | கார்ட்டூன் | சக்தி மேடனி | கில்லி | விக்கிரமாதித்தன் | ஜீ பூம்பா |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி–மேன் | தமிழ் கார்ட்டூன் | சக்தி மேட்னி | தமிழ் கார்ட்டூன் | விக்கிரமாதித்தன் அன்பு மடல் 4.55 | ஓப்போடு |
| 5.00 | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | கொமடி பேஸ்டிவல் | 2004 ஒலிம்பிக் (டெனிஸ்) |
| 5.30 | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஒலிம்பிக் ஒளிபரப்பு | ஸ்டாருடன் ஒரு நாள் | 2004 ஒலிம்பிக் 5.55 அன்பு மடல் |
| 6.00 | களம் | இளைய கானம் | ஓப்போடு | பாடல்கள்/இளந்தளிர் 6.15 | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கட் | ஸ்டாருடன் ஒரு நாள் | மின்னல் |
| 6.30 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | குங்குமம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | திமி தக்க தா | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அலைய்ஸ் | வேலன் |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | அலைய்ஸ் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ருத்ர வீணை | இளைய கானம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவுக்கு ஓர் அன்பான மடல்!

அதிபர் அம்மா அவர்களே! உங்களைகரம் கூப்பிச்சிரம்தாழ்த்தி முதற்கண் எனது தமிழ் வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எமது நாடு இன்று அனலுமின்றிக் குளிருமின்றி இரண்டும் கெட்டான் நிலையில் சென்றுகொண்டிருக்கின்றது என்பதை நாம் அறிவோம். சர்வதேச சமூகமும் அறியும்.

'உங்கள் ஆட்சியிலும், திகாரத்திலும் இந்த நிலை ஏற்பட்டிருப்பது என்பது எனக்கு வேதனையாய் இருக்கின்றது.

இதற்குக் காரணம் ஒரு பெண்ணினால் நாட்டை நிர்வகிக்க முடியவில்லையா அல்லது நீங்கள் ஒரு பெண்ணாக இருப்பதனால் 'பெட்டைக்கோழி கூவி விடியப் போவதில்லை'யா என்பது எனக்குப் புரியாத புதிராகவே உள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் எந்தவித ஆக்கபூர்வமான செயற்பாடும் முன்னெடுக்கப்படாமல் நீங்கள் காலம் தள்ளிவருகின்றீர்கள். இப்படியான ஒரு நிலையிலே, நீங்கள் கட்சித் தலைமைப் பதவியையும் துறந்துவிட்டீர்கள். இது தான் இன்றுமக்கள் மத்தியிலே ஒருவித குழப்பத்தை ஏற்படுத்திவிட்டுள்ளது.

காரணம் திடீரென்று நாடாளுமன்றத்தைக் கலைத்தீர்கள்.

அடுத்து அமைச்சுப்பதவிகளைக் பறித்தெடுத்தீர்கள். ஜே.வி.பி யை பங்காளிக்கட்சியாக இணைத்து ஆட்சி பீடம் ஏறினீர்கள். ஆனால் இன்று திடீரென கட்சித்தலைமைப் பதவியைத் துறந்துள்ளீர்கள். இவ்வாறு திடீர் திடீரென நீங்கள் காரியமாற்றுவதால் தான் எனக்கு பீதி ஏற்படுகின்றது.

அம்மா கட்சியிலிருந்து பதவிவிலகிய தற்கான

காரணங்களாக நீங்கள் கூறுவது வேறு. ஆனால் திரை மறைவில் வேறு காரணங்கள் உங்களுக்குள் இருக்கக்கூடும் என்று நான் நினைக்கின்றேன். உங்களுக்கும், ஜே.வி.பிக்கு மிடையே முரண்பாடு இருப்பது போன்ற ஒரு கபடநாடகத்தை நாட்டுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் முன்பாக நடிக்கின்றீர்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.

புலிகள்விடயத்தில் ஒத்தியைவான கருத்துடைய நீங்கள், ஏன் உங்களுக்குள் முரண்பட்டுக்கொள்ள வேண்டும் என்பது தான் தங்கமலை இரகசியமாக உள்ளது.

நீங்கள் சமாதானத்தை முன்னெடுக்கும் ஒரு சமாதான விரும்பியானால் ஜே. வி.பியுடன் ஒன்றிணைந்து காரியத்தில் இறங்குவதே சாலச் சிறந்தது. முரண்பட்டுக்கொண்டு சமாதானம் செய்ய நீங்கள் புறப்பட்டது புத்தி சாதுரியமானதாக எனக்குத் தென்படவில்லை. ஜே. வி. பி இல்லாமல் உங்களால் ஒரு நாளாவது ஆட்சியைத் தக்கவைக்க முடியுமா? இனப்பிரச்சினையில் ஜே. வி. பியுடன் முரண்பட்டுக்கொண்டு நீங்கள் சமாதான முயற்சியில் இறங்குவது புரியாத புதிராக இருக்கிறது.

இதைத்தான் நோர்வே தரப்பும் கூறியது. நீங்கள் பிரிந்து நிற்பது சமாதான முன்னெடுப்புக்களில் மேலும் விரிசலையே உண்டுபண்ணும் என்று தெரிவிக்கிறது. அதைக்கூட நீங்கள் 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போல விட்டுவிட்டு தனித்து நிற்பது பொருத்தமானதல்ல என்றே எனக்குத் தென்படுகின்றது.

உங்களுக்குத் தற்போது இருக்கும் பிரச்சினை சமாதான முன் எடுப்பை எவ்வாறு முன்னெடுப்பது என்பதுதானா? அல்லது திடீர்ப்பொதுத்தேர்தலைநடத்தி, ஜே.வி.பியின் கூட்டு இல்லாமல்போட்டியிடத் திட்டமிடுகின்றீர்களா?

உங்கள் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டுக்கு நல்ல காரியம் செய்வதைவிடுத்து; நாட்டுக்கு நாசம் செய்ய புறப்பட்டீர்களானால், அதை உங்கள் போதி மாதவன்கூட பொறுக்கமாட்டான் என்பதைஉங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

மறுபுறமாக உங்களை சிந்தித்துப் பார்க்க வைக்கின்றீர்கள். அதாவது நீங்கள் கட்சியை விட்டுப் பதவி விலகி நின்று உங்



களை நாட்டுக்கு நல்ல பிள்ளையாகக் காட்டிக்கொள்ளவும், அதன் மறுபுறமாக ஜே.வி.பியை புலிகளுக்கு எதிராகவும், சமாதான முன்னெடுப்புக்கு எதிராகவும் தூண்டிவிட்டு, வெண்ணெயைத்திருடித்தின்றகண்ணன் ஒன்றும் அறியாமல் பாசாங்கு செய்தது போல, நீங்களும் பாசாங்கு காட்டுகின்றீர்களோ என்று சிந்திக்க வைக்கிறது.

இனப்பிரச்சினை விடயத்தில் உங்கள் ஆகப்பிந்திய நடவடிக்கை மூலம் நீங்கள் செய்திருக்கும் உருப்படியான காரியம் என்னவெனில், இனவாதிகளை உசாரடையச்செய்திருக்கின்றீர்கள் என்பதுதான்.

அரசியலே அறியாமல் ஓர் ஆசனத்துடன் நாடாளுமன்றம் வந்த ஜே.வி.பி யை, நீங்கள் உங்கள் பங்காளிக் கட்சியாக வரும் அளவுக்கு வளர்த்து விட்டிருக்கின்றீர்கள். ஆனால் இன்று நச்சுப் பாம்பை பாலூட்டி வளர்த்த கதையாக, அது உங்களையே தீண்டிவிடும் அளவுக்குச் சக்திபெற்றிருப்பதற்கு யார் அம்மா காரணம் என்று நீங்கள் ஏன் சிந்தித்துப் பார்த்திருக்கக் கூடாது.

கடந்த வாரம் ஜே.வி.பி குழுவினர் அரசியல் விவகாரம் தொடர்பாகவும், இருதரப்புக்குமான சில பிரச்சினைகள் தொடர்பாகவும் உங்களைச் சந்திக்க அனுமதி கேட்ட போது ஆம் என்று பதில் கொடுத்துவிட்டு, வேளை வந்த போது நேரம் இல்லை என்று கூறி நீங்கள் அதனைத் தவிர்த்துக் கொண்டதும் ஏன் அம்மா?

உங்கள் இந்த நடைமுறையால் தாங்கள் அகௌரவப்படுத்தப்பட்டதாக உங்கள் மீது அவர்கள் குற்றம் சாட்டச் சந்தர்ப்பம் கொடுத்ததிலும் ஏதேனும் இரகசியங்கள் உண்டா என எனக்குச் சந்தேகமாகவுள்ளது. அவர்களை நீங்கள் சந்திக்க மறுத்ததால் நீங்கள் வெளிக்காட்ட முனைந்த அர்த்தமென்ன என்று எனக்குச் சொல்வீர்களா?

நாட்டின் பிரதமருடைய ஸ்தானத்தை ஜே.வி.பி தொட்டுவிடும் என்ற பயம் உங்களுக்கு இருக்கின்றதா அல்லது ஜனாதிபதித் தேர்தலை ஜே.வி.பி யுடன் முரண்பட்டு எதிர்கொள்ள நினைக்கின்றீர்களா? உண்மையைச் சொல்லுங்கள்.

அம்மா 2005 ஆம் ஆண்டுடன் 10 வருட கால உங்கள் ஆட்சி நிறைவு பெறுகின்றது. இந்த ஆட்சிக் காலத்தில் நீங்கள் நாட்டுக்கு என்ன செய்தீர்கள் என்று அமர்ந்திருந்து சிந்தித்துப் பார்த்து, குற்றமுள்ள உங்கள் மனம் குறுகுறுக்குமானால் நாட்டு மக்களிடம் பணிந்து வணங்கி மன்னிப்புக் கேட்டு விட்டு நாட்டை ஒரு சமாதானமுள்ள இலங்கையாய் தலைமை தாங்கி வழிநடத்தக் கூடிய ஒருதலைவரிடம் நீங்கள் கையளித்து விடுவதுதான் நாட்டுக்கு க்ஷேமத்தைக் கொடுக்குமென்று நினைக்கின்றேன்.

உங்கள் கண்ணிய முள்ள;

**பாபு.**

---

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்' 23–08–2004, 29–08–2004**

**பொ. சந்திரன்**

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சுக்கிரன் சனி |
| | | | புதன் |
| | | | சூரியன் செவ் |
| | | கேது | குரு |

| | | |
|---|---|---|
| சூரியன் | மகம் | கேது |
| செவ்வாய் | பூரம் | சுக்கிரன் |
| சுக்கிரன் | புனர்பூசம் | குரு |
| புதன் | ஆயிலியம் | புதன் |
| குரு | உத்தரம் | சூரியன் |
| சனி | புனர்பூசம் | குரு |

ஆடி 32 முதல் ஆவணி 06 வரை

சந்திரன் சிங்கம் முதல் துலாம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1.**

(1, 8) உரிய செவ்வாய் 5 இல் நல்ல பலனைத் தராது. ஆனால் சுக்கிர சாரம் பெற்று இருப்பது ஓரளவு ஆறுதல் உண்டு. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். மேலும் ராசியில் ராகு இருப்பது மன அமைதியைப் பாதிக்கும். தேவையில்லாத பிரச்சினையால் அவசியமற்ற கவலை ஏற்படலாம். (2, 7) உரிய சுக்கிரன் 3 இல் இருப்பது கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. ஆனால் குரு 6 இல் இருப்பதால் பக்க உதவி இருக்காது. 4 இல் புதன் இருப்பதால் வீடு, வாகன லாபம் தராது. (10, 11) உரிய சனி 3 இல் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது நல்லது. குருவின் சாரத்தில் இருப்பது சிறப்பு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவிலகும். (2, 5) உரிய புதன் மூன்றில் இருப்பது கையில் பணம் இருக்காது. குழந்தைகளின் செயற்பாடுகள் திருப்தி தராது. 4 இல் சூரியன், செவ்வாய் இருப்பதால் வீடு, வாகனம் செலவை உண்டாக்கலாம். (7, 12) உரிய செவ்வாய் 4 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். ஆனால் குரு 5 இல் இருப்பதால் நிலைமையை மாற்ற முயலும். (9, 10) உரிய சனி 2 இல் இருப்பதால் தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. தகப்பனுக்கு நல்லதல்ல.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1, 4)உரிய புதன் 2 இல் இருப்பது விசேஷம். மேலும் தன் சொந்த நட்சத்திர சாரத்தில் இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். வீடு, வாகனம் லாபம் தரும். ஆனால் ராசியில் சனி இருப்பது மன அமைதியைப் பாதிக்கலாம். தேவையில்லாப் பிரச்சினை வீடு தேடி வரும். (7, 10) உரிய குரு 4 இல் இருப்பது ஓரளவு நல்லது. அதாவது மூன்றாம் இடத்தைவிட நல்லது. ஐந்தாம் வீட்டால் சிறப்பு இல்லை. திருமண வாய்ப்பு மந்த கதியில் நகரும். தொழில் துறையில் பெரிதாக முன்னேற்றம் இருக்காது. காரணம் (7, 10) வீடுகளில் சனி பார்ப்பது நல்லதல்ல. ராகு, கேது எல்லாக் கிரகங்களையும் அடைப்பது கூடாது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் விருச்சிகம் முதல் மகரம் வரை அதாவது 5 முதல் 7 வரை சஞ்சரிப்பது நல்ல பலனைச் செய்யும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். ராசியில் புதன் இருப்பது அவ்வளவு சிறப்பில்லை. 2 இல் செவ்வாய், சூரியன் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (4, 11) உரிய சுக்கிரன் 12 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். நண்பர்கள் உதவி செய்வர். மூத்த சகோதரத்துக்கு நல்லது. (7, 8) சனி 12 இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குருவின் உதவியும் இருக்காது. 10 க்குரிய செவ்வாய் 2 இல் இருப்பதால் தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்காது. ராகு, கேது எல்லாக் கிரகங்களையும் அடைப்பது குறை.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் ராசியில் ஆட்சியாக இருப்பது அவ்வளவு சிறப்பில்லை. சூரியன் 1 ஆம் வீட்டில் நன்மை செய்யாது, மேலும் செவ்வாயோடு கூட்டு. கேது சாரம் பெற்றிருப்பது கூடாது. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2, 11) உரிய புதன் 12 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. நண்பர்களால் செலவு உண்டாகலாம். மூத்த சகோதரத்துக்குக் கூடாது. (4, 9) உரிய செவ்வாய் ராசியில் இருப்பதால் பெற்றோருக்கு நல்லதல்ல. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (6, 7) உரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. பகைவர் நண்பர் ஆவர். 10 க்குரிய சுக்கிரன் 11இல் இருப்பதால் தொழிற்துறை முன்னேறும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1, 10) உரிய புதன் 11 இல் இருப்பது சிறப்பானது. மேலும் தன் நட்சத்திர சாரத்தில் இருப்பதும் நல்லதே. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழிற்துறை முன்னேறும். (2, 9) உரிய சுக்கிரன் 10 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. தகப்பனுக்கு நல்லதல்ல. (4, 7) உரிய குரு ராசியில் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பதும் பிரச்சினை தான். அடுத்து ராகு, கேதுக்கள் ராசி உட்பட அனைத்து கிரகங்களையும் அடக்கி ஆழ்வதும் பிரச்சினை தான். குரு வழிபாடு அல்லது வியாழக்கிழமை வழிபாடு செய்ய நல்ல பலன் உண்டாகும்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1, 8) உரிய சுக்கிரன் 9 இல் இருப்பது நல்லது. மேலும் குருவின் நட்சத்திர சாரத்தில் இருப்பதும் சிறப்பானதே. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். (2, 7) உரிய செவ்வாய் 11இல் இருப்பது கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. (4, 5) உரிய சனி 9 இல் இருப்பது நல்லதல்ல. வீடு, வாகனம் லாபம் தராது. 10 இல் புதன் இருப்பதால் தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்காது. ராசியில் கேதுவும், 7 இல் ராகுவும் இருப்பது நல்லதல்ல. மன அமைதி பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. 12 இல் குரு மறைவதும் ஒரு குறை. அதற்கு மேல் ராகு, கேது எல்லாக் கிரகங்களையும் அடைப்பதால் [illegible] தரும்.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1, 6) உரிய செவ்வாய் 10இல் இருப்பது சிறப்பல்ல. ஆனால் சுக்கிரனின் சாரத்தில் இருப்பது ஓரளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2, 5) உரிய குரு 11 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயற்பாடு திருப்தி தரும். (3, 4) உரிய சனி 8 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை உண்டாக்கலாம். இளைய சகோதரத்துக்குக் கூடாது. (7, 12) உரிய சுக்கிரன் 8 இல் இருப்பதால் திருமண வாய்ப்புண்டு. அயன சயன சுகம் உண்டு. 10 இல் சூரியன் ஆட்சியாக இருப்பது பரவாயில்லை. அங்கு செவ்வாய் இருப்பது பிரச்சினை. தொழிற்துறையில் மத்திமமான பலன்தான். ராசியில் கிரகங்கள் இல்லாதிருப்பது மன அமைதியைக் கொடுக்கலாம்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு10இல்இருப்பது பரவாயில்லை. சூரிய சாரம் பெற்று இருப்பது நல்லது. ராசியையும் 4 ஆம் வீட்டையும் சனிபார்ப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (2, 3) உரிய சனி 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7, 10) உரிய புதன் 8இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்காது. குடும்பத்தில் அமைதியிருக்காது. 9 ஆம் வீட்டில் சூரியன், செவ்வாய் சேர்க்கை தகப்பனுக்குக் கூடாது. மேலும் சூரியனைச் சனி பார்ப்பது சிக்கலை உருவாக்கலாம். ராசியும், ராசிக்கு இருபுறமும் கிரகங்கள் இருப்பது பாதுகாப்பு குறைந்த நிலை. ஆனால் மன அமைதி இருக்கும்.

**மகரம்: உத்தராடம்2,3,4,. திருவோணம், அவிட்டம்1,2**

(1, 2) உரிய சனி 6 இல் இருப்பது சிறப்பானது. மேலும் குருவின் சாரத்தில் இருப்பதும் நல்லதே. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. கையில் பணம் இருக்கும். (4, 11) உரிய செவ்வாய் 8 இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை எற்படுத்தலாம். நண்பர்களால் தொல்லை உண்டு. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. 7இல் புதன் இருப்பது தீமையில்லை, நன்மையும் இல்லை. திருமண வாய்ப்பு முன்னேறாது. ஆனால் குரு 9 இல் இருப்பது நல்ல பலனைக் கொண்டுவரும். 10க்குரிய சுக்கிரன் 6இல்இருப்பதால்தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1, 12) உரிய சனி 5 இல் இருப்பதை நஞ்சுச் சனி என்பர். குருவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது ஓரளவு ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (2, 11) உரிய குரு 8 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. நண்பர்களால் தொல்லை வரலாம். மூத்த சகோதரத்துக்குக்கூடாது. (4, 9) உரிய சுக்கிரன் 9 இல் இருப்பது பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். 7 இல் சூரியன், செவ்வாய் இருப்பதால் திருமண வாய்ப்புத் தடைப்படலாம். குடும்பத்தில் அமைதியிருக்காது. 10 க்குரிய செவ்வாய் 7 இல் இருப்பதால் தொழில்துறையில் பின்னடைவு வர வாய்ப்புள்ளது.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது விசேஷம். மேலும் சூரிய சாரம் பெற்று இருப்பது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழிற்துறை முன்னேறும். (2, 9) உரிய செவ்வாய் 6 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. (4, 7) உரிய புதன் 5 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். ராசியையும் 10 ஆம் வீட்டையும் சனி பார்ப்பதால் சில, பல பிரச்சினைகள் உருவாகலாம். சனி கேந்திரத்தில் இருந்து கேந்திரஸ்தானங்களைப் பார்ப்பது நல்லதல்ல. சனீஸ்வர வழிபாடு தீமையைக் குறைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2004 ஒலிம்பிக் போட்டி



பத்து மீற்றர் உயர 'டைவிங்' நீச்சல் போட்டியில் ஜேர்மனி வீராங்கனைகள் அனட் கெமி, நோரா ஷுப்ஷனக்ஷி.



கடற்கரை கரப்பந்தாட்ட தகுதி சுற்றுப் போட்டியில் கிரேக்க வீராங்கனைகள்.



வாள் வீச்சுப் போட்டியில் பதக்கம் வென்ற வீராங்கனைகள்.



200 மீற்றர் 'பட்டர்பிளை' நீச்சல் போட்டியில் தங்கம் வென்ற பெல்ப்ஸ் (மத்தி), வெள்ளி வென்ற தக்காஷி (கீழே), வெண்கலம் வென்ற ஸ்டீபன் பெரி.



'C 1' பிரிவு படகுப் போட்டியில் தங்கம் வென்ற பிரான்ஸ் வீரர் டொனி எஸ்டான்குவட்.



ஆடவர் வாள் வீச்சில் தங்கம் வென்ற இத்தாலி வீரர் அல்டோ மொண்டேனோ



குத்துச்சண்டை 2 ஆம் சுற்றில் தாய்லாந்தின் சுடாண் பனோன், பல்கேரியாவின் சவிசேவ் ரிமோவ்.

ஆகஸ்ட் 13 ஆம் திகதி உலகின் மிகப் பெரிய கொண்டாட்டம் ஆரம்பமானது. உள்ளூர் நேரப்படி இரவு 8.45 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வு ஏதென்ஸ் ஒலிம்பிக்கின் தொடக்கத்தை உலகிற்குப் பறைசாற்றியது.

72 ஆயிரம் பேர் அரங்கத்தில் கூடி இருக்க, பல ஆயிரம் கோடி விழிகள் தொலைக்காட்சித் திரைகளை விழுங்கியபடி இருக்க, இருளில் இருந்து கிளம்பிய ஒளிக்கீற்றாய் பண்டைய கிரேக்க நாகரிகம் கண்முன் தோன்றிற்று.

3,000 வருட பழமை வாய்ந்த ஒலிம்பிக் வரலாற்றை எடுத்தியம்பும் வகையில் ஆரம்ப நிகழ்வுகள் அற்புதமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன.

நவீன யுகத்தின் அதிநவீன தொழில்நுட்பங்கள் புகுந்து விளையாட, உலகின் சிறந்த நாகரிகங்களில் ஒன்றான பண்டைய கிரேக்க நாகரிகம் அரங்கேறியது. அத்தனை தத்துருபமாக அனைத்தும் நடந்தேற அரங்கில் இருந்தவர்கள் பிரமித்துப்போயினர். தொலைக்காட்சியில் விழிவைத்திருந்தவர்கள் சொக்கிப் போனார்கள்.

400 இசைக் கலைஞர்கள் வாத்தியங்கள் முழங்க கிரேக்கத்தின் 'ஸிம்பிகோ' நடனத்துடன் அரங்கத்தில் வளைய வந்தார்கள். பின்னர் தண்ணீரில் மிதந்த மைதானத்தின் நடுப் பகுதியில் இருந்துதீப் பிழம்புகளாக ஒலிம்பிக்சின்னமான கோர்க்கப்பட்ட ஐந்துவளையங்கள் மேற்கிளம்பின.



கிரேக்கத்தின் தேசியக் கொடி மெல்ல மேல் நோக்கி உயர உயர அந்த நாட்டு அதிபரும் சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் தலைவரும் அரங்கத்தினுள் அடியெடுத்து வைத்தனர். உலகுக்கு அற்புதத்தை நிகழ்த்திக் காட்டிய அந்த இரவுக்குச் சொந்தக்காரர்களான அவர்கள் வெற்றிப் பெருமிதத்துடன் காணப்பட்டனர்.

தொடர்ந்து மேலே இருந்து இறங்கிய தலை அற்ற - உடம்பு மட்டும் கொண்ட - சிலை அரங்கின் மையப் பகுதியில் துண்டுகளாகப் பிரிந்து விந்தை காட்டியது. பிரிந்த துண்டுகள் ஒவ்வொன்றிலும், இதற்கு முதல் நடந்த ஒலிம்பிக்கின் காட்சிகள் படங்களாக ஓடின. அற்புதமாக அவை வடிவமைக்கப்பட்டிருந்தன.

அரங்கில் நடந்து வந்த கர்ப்பிணிப் பெண்ணின் வயிறு திடீரென ஒளிர்ந்தது அனைவரையும் ஆச்சரியத்திலும் பரவசத்திலும் ஆழ்த்தியது.

கிரேக்கத்தின் பண்டைய நாகரிகத்தினைக் கண்முன் கொண்டுவந்த கிரேக்க கலைஞர்களின் கலை நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்ந்தன. அயர்லாந்துக் கலைஞரால் ஒலிம்பிக்குக்கென விசேடமாக உருவாக்கப்பட்ட "ஓஷானியா" என்ற பாடல் பார்வையாளர்களைக் கட்டிப்போட்டது.

விருந்தினர்களின் உரைகளின் பின்னர் ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டது. 2004 ஒலிம்பிக் ஆரம்பமானதை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் சமிக்ஞை அது. வானுயர எழுந்து நின்ற ஒலிம்பிக் ஜோதி பூமிக்கும் வானுக்கும் இடையிலான பாலமாக அமைந்திருந்தது.



இத்தனை அற்புதங்களும் அந்த ஒரே இரவில் நிகழ்ந்து முடிந்தன. பல ஆண்டுகளாக பாடுபட்ட கிரேக்கம் இறுதியில் உலகை வியப்பில் ஆழ்த்தும் வகையில் ஆரம்ப நிகழ்வை நடத்தி முடித்தது.

"உலகைப் பரவசத்தில் ஆழ்த்தியது கிரேக்கம்" - என்று ஊடகங்கள் புகழ்ந்து தள்ளின. அத்தனை அற்புதமாக, கச்சிதமாக ஆரம்ப நிகழ்வு திட்டமிட்டபடி நடந்தன. வானில் பறந்து வந்த சம்மனசுகள் இறை தூதர்களாகக் காட்சியளித்தனர். அவை வாழ்த்தி ஆரம்பித்துவிட்டுப் போன ஒலிம்பிக் கோலாகலம் ஆச்சரியங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்திய வண்ணம் தொடர்கிறது.

1896 இல் முதலாவது ஒலிம்பிக் இதே ஏதென்ஸ் நகரத்தில்தான் ஆரம்பமானது. 106 வருடங்களின் பின்னர் மீண்டும் அது தான் பிறந்த இடத்துக்கே வந்துள்ளது.

17 நாள்கள் நடக்கும் இந்தத் திருவிழா உலகெங்கும் இருக்கும் மக்களுக்கு பெருவிருந்தென்றால், அதில் பங்குபற்றும் வீரர்களுக்கு அதுதான் இலட்சியம். அதிலும் அவர்கள் பதக்கம் ஒன்றைப் பெற்றுக் கொண்டுவிட்டால் சொல்லவே வேண்டாம். அவர்களுக்கு மட்டுமல்ல அந்த நாட்டுக்கே அது பெரும் பெருமை. ஒவ்வொரு நாடும் பதக்கப்பட்டியலில் தமக்கும் ஒரு இடம் கிடைக்காதா என்று ஏங்கிக் கிடக்கின்றன.

இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் கடந்த வாரம் நடந்த ஆரம்ப விளையாட்டுக்களில் சீனாவின் ஆக்கிரமிப்புத் தெரிந்தது. ஒலிம்பிக் ஜாம்பவான்களான அமெரிக்கா, ரஷ்யா, அவுஸ்திரேலியா என்பவற்றைப் பின்தள்ளிவிட்ட, ஆசிய நாடான சீனாவின் ஆதிக்கம் ஆச்சரியப்பட வைத்துள்ளது. ஆனால், தடகள விளையாட்டுக்களில் அமெரிக்கா வல்லரசு என்பதால் அதன் ஆதிக்கம் மீண்டும் உருவாகும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த ஒலிம்பிக் போட்டிகளில் பல சுவாரஸ்யமான சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. சாதனைகளுக்கும், வேதனைகளுக்கும் எப்போதும் போல் இம்முறையும் குறைவில்லை. சிலர் இலட்சியங்கள் நிறைவேறி புகழின் உச்சிக்குப் போயினர். பலர் கனவுகள் நிறைவேறாத சோகத்துடனேயே திரும்புகிறார்கள். அடுத்த ஒலிம்பிக் என்பது தான் இப்போதைக்கு அவர்களின் நம்பிக்கை.

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் அனைத்து விடயங்களிலும் தொழில்நுட்பம் புகுந்து விளையாடுகிறது. அனைத்தையும் சரியாகவும் கச்சிதமாகவும் செய்வதற்கு ஏற்பாட்டாளர்கள், இருக்கும் வசதிகள் அனைத்தையும் பயன்படுத்தியுள்ளார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகளும் பெரியளவில் செய்யப்பட்டுள்ளன. எனினும் பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவர் தன் வித்துவத் திறமையைக் காட்டி பாதுகாப்பில் ஓட்டை என்று கண்டுபிடித்து எழுதியுள்ளார். கிரேக்கப் பிரதமரும் ஒலிம்பிக் கவுன்சில் தலைவரும் அதனை நிராகரித்து விட்டனர்.

இதுவரை 40க்கும் அதிகமான நாடுகளின் பெயர்கள் பதக்கப் பட்டியலில் இடம் பெற்றுவிட்டன. அதில் ஆவலுடன் எங்கு தேடினாலும் இலங்கையின் பெயரைக் காணமுடியாது. கடந்த சிட்னி ஒலிம்பிக்கில் இலங்கைக்கு சுசந்திகா ஒரு பதக்கமாவது பெற்றுத் தந்தார். இம்முறை அவர் போட்டியில் பங்கேற்கப் போவதில்லை என்று அறிவித்துவிட்டார். இதற்குப் பல்வேறு காரணங்களை அவர் கூறினாலும், அவரது முடிவு உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் பெரும் அதிருப்தியையும், கண்டனங்களையும் உருவாக்கியுள்ளன.

ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் 8 பேர் கொண்ட இலங்கை அணி பங்குபற்றி உள்ளபோதும் பதக்கப்பட்டியலில் இலங்கையின் பெயர் இடம்பெறும் நம்பிக்கை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

சர்வதேச ஒலிம்பிக் கவுன்சிலில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒவ்வொன்றும் தவறாமல் சிலரையாவது போட்டிகளுக்கு அனுப்ப வேண்டும் என்பது விதி.



கடற்கரைக் கரப்பந்து இரண்டாம் சுற்றில் ஜெர்மனி வீராங்கனைகள்




'டைவிங்' நீச்சல் போட்டியின் தகுதிச் சுற்றில் கனடிய வீரர்கள்.



ஹொக்கி 'லீக்' ஆட்டத்தில் நியூஸி., ஜப்பான் வீராங்கனைகள்



'ஜிம்னாஸ்டிக்' 2ஆம் சுற்றுக்கான பயிற்சி'யில் சீன வீரர் யாங் வீய்.



'ஜிம்னாஸ்டிக்' இரண்டாம் சுற்றில் சீன வீராங்கனை பான் யீ.



58 கிலோ பளு தூக்கும் போட்டியில் தங்கம் வென்ற சீனாவின் யாங்கிங் சென்.



'ஜுடோ' காலிறுதிப் போட்டியில் ஜப்பானின் ஹிரோஷி (வலது), கொரியாவின் ஹாங்.



கடற்கரை கரப்பந்தாட்டத்திற்கு நடன மங்கைகளின் நடனத்தில் ஒரு கட்டம்.



துப்பாக்கி சுடும் பயிற்சியில் சீனாவின் ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கக் கொடியில் ஓட்ட வீரர் சப்பாத்து



அமெரிக்கத் தேசியக் கொடியை எத்தனையோ நட்சத்திரங்கள் அலங்கரிக்கின்றன. ஆனால், அந்தத் தேசியக் கொடியிலேயே சப்பாத்து செய்து அணிந்து கொள்வது முறையா? முனிச் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட ஒரு அமெரிக்க வீரர் இவ்வாறு சப்பாத்து அணிந்து வந்து அனைவரையும் அசத்திவிட்டார்.

# செவ்வாய்க் கிரக மண்மேடுகள்



மசாலா மிக்ஸ்


செவ்வாய்க்கிரகம் பூமியின் அமைப்பைக் கொண்டிருக்கிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். மனிதர்கள் செவ்வாய்க்கிரகத்தில் உயிர்வாழக் கூடிய சாத்தியக் கூறுகளும் இருக்கின்றன. இந்தப் படத்தைப் பார்த்ததும் பூமியின் பாலைவனத்தரையோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. ஆனால், நாஸா விண்கலம் எடுத்த இந்தப் படம் செவ்வாய்க்கிரகத்தில் மண்மேடுகளைச் சித்திரிக்கிறது.

# புலிக்குட்டி வளர நாய்-அன்னை-ஆதரவு



வடக்கு பிரான்ஸ் நகரிலுள்ள உயிரியல் பூங்காவில் பிறந்து இரண்டு மாதங்களேயான இந்தப் புலிக்குட்டி வாழ்கிறது. ஆனால், பாவம் அதற்கு அம்மா இல்லை. அநாதையாகி விட்ட புலிக்குட்டிக்கு ஆதரவு தெரிவித்து அதனுடன் கொஞ்சி விளையாடுகிறது ஒரு நாய். அந்த நாய் அன்னையின் அரவணைப்பில் தனது துன்பங்களை மறந்து வளர்கிறது புலிக்குட்டி.

# அழிவை எதிர்த்து நிற்க பண்டா கரடிகள் உறுதி



பண்டா கரடிகள் காட்டுப் பிரதேசங்களிலேயே உயிர்வாழ்கின்றன. காலநிலைமாற்றம் காரணமாக அந்த உயிர் இனம் உலகில் அழிந்து வருகிறது. இயற்கைச் சூழலில் வாழமுடியாத பண்டா கரடிகள் மிருகக் காட்சிச்சாலைகளில் வாழ்ந்து தமது அழிவை எதிர்த்து நிற்கின்றன. சீன மிருகக்காட்சிச் சாலையில் பிறந்த இந்தப் பண்டாக் கரடிக் குட்டி மிகவும் நலமாக வளர்ந்து வருகிறது.

# சீல் விலங்குக்கு பல் தீட்டும் அழகி!



சீல் விலங்கு கடலிலும் தரையிலும் வாழக்கூடியது. மீன்களையே உணவாகக் கொண்டு வாழும் சீல் விலங்குகள் சில வேளைகளில் கூட்டம் கூட்டமாக உயிரிழப்பதும் உண்டு. படத்திலுள்ள சீல் விலங்கைச் சிலர் வலைவிரித்துப் பிடிக்க முயன்றனர். அதிலிருந்து தப்பி மெல் போர்ன் மிருகக்காட்சிச்சாலையில் தற்போது வாழும் அதற்கு ஒரு அழகி பல் தீட்டி விடும் காட்சி.



# ஒளிந்திருக்கும் முகம் எது?

ஆகஸ்ட் 09, சுடர்ஒளி மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை பரவை முனியம்மாவினுடையது. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

1. சி.கமலினி, நெல்லியடி. 2. மு.சுந்தரகுமார், புத்தளம் வீதி, குருநாகல் 3. ம.சுதன், 348, கண்டி வீதி, வவுனியா. 4. க. சுதாகரன், வத்தளை, கொழும்பு. 5. வி.சிவமேனன், பருத்தித்துறை வீதி, நல்லூர்.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த முகம் யாருடையது?

இவர் தமிழ்த் திரையுலகில் வில்லன் பாத்திரங்களில் கலக்கியவர். தற்போது இவருக்கு படவாய்ப்புக்கள் குறைந்து வருகின்றது.

இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் செப்டெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் எழுதி கீழ்வரும் எங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுக்கையை நனைக்கிறதா குழந்தை?

குழந்தைகள் தூக்கத்தில் சிறுநீர் கழித்து படுக்கையை நனைப்பதென்பது ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லா நாடுகளிலும் உள்ள குழந்தைகளிடையே காணப்படும் ஒரு பொதுவான குறைபாடு ஆகும்.

பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளுக்கே அதிகமாக இக்குறைபாடு காணப்படுவதாகக் கூறப்படுகிறது. பிறந்ததிலிருந்தே படுக்கையை நனைத்துக்கொண்டிருக்கும் குழந்தைகளை ஒரு வகையாகவும், சிறுநீரைக் கட்டுப்படுத்தி வெளியேற்றும் திறமை வந்த பின்பு சில காலம் இந்தப் பிரச்சினை இல்லாமல் இருந்து திரும்பவும் ஆரம்பிக்கும் குழந்தைகளை மற்றொரு வகையாகவும் பிரிக்கலாம். இதில் முதல் வகை குழந்தைகளைக் காட்டிலும் இரண்டாம் வகை குழந்தைகளை விரைவில் குணப்படுத்திவிட முடிகிறது.

பெரும்பாலான குழந்தைகள் தாம் படுக்கையில் சிறுநீர் கழிக்கிறோம் என்ற உணர்வே இல்லாமலோ அல்லது கனவில் தான் தாம் சிறுநீர் கழிக்கிறோம் என்ற உணர்விலோ படுக்கையை நனைக்கிறார்கள். அதே சமயம் பல குழந்தைகளுக்கு நாம் படுக்கையில் தான் சிறுநீர் கழிக்கிறோம் என்ற உணர்வு இருந்த போதும் அதைக்கட்டுப்படுத்த முடியாமல் போகின்றது.

குழந்தைகள் படுக்கையை நனைப்பதற்கான காரணங்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. உடலியல் காரணங்கள்.
2. மனதியல் காரணங்கள்.

காரணங்கள் பல்வேறாக இருந்தாலும் குழந்தைகளுக்குத் தகுந்த வயது வந்தவுடன் முறையான காலைக்கடன்களைக் கற்றுக் கொடுக்காமல் போவதே அடிப்படைக்காரணமாக அமைகிறது.

சிறுநீர் வழிப்பாதை நோய்க்கிருமிகளால் தாக்கப்பட்டிருப்பது, முதுகுத்தண்டு வடத்தில் ஏற்படும் சில நரம்பியல் குறைபாடுகள், சிறுநீர் வழிப்பாதையில் பிறப்பிலிருந்தே காணப்படும் குறைபாடு, சிறுநீர்ப்பை வீக்கம், சிறுவயது சர்க்கரை நோய், குடலில் காணப்படும் பூச்சிகள் போன்றவை உடலியல் காரணிகளாகும். இருந்தாலும் குறைவான அளவு குழந்தைகளே இதனால் பாதிக்கப்படுகின்றனர்.

குழந்தைகளின் மனதைப்பாதிக்கும் வகையில் நடக்கும் சுற்றுப்புற நிகழ்ச்சிகள், ஒரு பாடசாலையிலிருந்து வேறு பாடசாலைக்கு அல்லது புது வீட்டுக்கு மாறுவது, வீட்டுக்குப் புதிதாக ஒரு குழந்தை வருவது, குழந்தையிடம் நெருக்கமாக இருக்கும் யாராவது இறந்துபோவது போன்ற நிகழ்ச்சிகள் குழந்தையின் மனதில் அதிர்ச்சியை ஏற்படுத்தி அதன் வெளிப்பாடாக படுக்கையை நனைக்கும் பழக்கம் ஏற்படுகிறது.



குழந்தையின் அடிமனதில் பதிந்து போன சில பய உணர்வுகள், குழந்தையின் மனதில் தோன்றும் பாதுகாப்பற்ற தன்மை, குழந்தையைக் கண்டிப்பாக வளர்க்க வேண்டும் என்பதற்காக சிறிய தவறுகளுக்காகத் தரப்படும் பெரிய தண்டனைகள், பெற்றோர்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகள், குழந்தையின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் போவது போன்ற பல செயல்கள் கூட குழந்தையின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தி படுக்கையில் சிறுநீர் கழிக்க காரணமாகின்றன.

எமது விருப்பு, வெறுப்புகளைக் குழந்தைகளின் மேல் திணிப்பது, யார் மீதோ இருக்கும் கோபத்தைக் குறைப்பதற்குக் குழந்தைகளை வடிகாலாக பயன்படுத்துவது போன்ற செயல்களால், படுக்கையில் சிறுநீர் கழித்தல் போன்ற சிறிய குறைபாடுகள் முதல் ஒரு குடும்பத்தை மட்டுமல்லாமல் சமூகத்தையும் சேர்த்து பாதிக்கும் நடத்தைக் குறைபாடு போன்ற மனதியல் பாதிப்பு வரை ஏற்படலாம்.

அதனால் வைத்தியரின் ஆலோசனைப்படி ஹோமியோபதி மருந்துகளை அறிகுறிகளுக்கு ஏற்ப மாற்றி மாற்றி கொடுத்தால் நல்ல பலன் கிடைக்கும். படுக்கையை நனைக்கும் பரிதாபக் குழந்தைகளும் பலன் பெறுவர்.

## இவ்வார பொன்மொழி

எம்மில் அன்பு ஞலுத்துமாறு நாம் யாரையும் வருத்திவிட முடியாது. நாம் செய்யக்கூடியதெல்லாம் அன்பு செலுத்தத் தகுதியுடையவர்களாக நாம் எம்மை மாற்றிக் கொள்வது தான்.

## சமையல் குறிப்பு

### மிக்ஸ்ட் ஆம்லெட்

| | |
|---|---|
| குடமிளகாய் | 1 |
| முட்டை | 3 |
| பச்சைப்பட்டாணி | 2 மேசைக்கரண்டி |
| வெங்காயம் | 2(சிறியது) |
| உப்பு | 1/2 தேக்கரண்டி |
| சோயா சோஸ் | 1/2 தேக்கரண்டி |
| ஷெர்ரி | 1/2 தேக்கரண்டி |
| சர்க்கரை | தேவையான அளவு |
| சமையல் எண்ணெய் | 50 மி.லி |

செய்முறை

குட மிளகாயைக் கழுவி வெட்டி உள்ளிருக்கும் விதைகளை நீக்கவும். ஒரு பாத்திரத்தில் சிறிது நீரை எடுத்து அடுப்பில் வைத்து நன்றாகக் கொதிக்க விடவும். கொதித்த நீரில் வெட்டிய மிளகாயைப் போட்டு ஐந்து நிமிடம் வரை வைத்திருந்து தனியே எடுக்கவும்.

முட்டைகளை ஒரு பாத்திரத்தில் ஊற்றி நுரை பொங்க அடித்தெடுக்கவும்.

பச்சைப்பட்டாணியை ஒரு பாத்திரத்தில் போட்டு நன்றாக ஊற விடவும். ஊறிய பின் அதை அப்படியே எடுத்து வேக வைக்கவும்.

முட்டைக்கலவையில் வேக வைத்த பட்டாணியைப் போடவும்.

அதில் வெட்டிய மிளகாயை சேர்த்துக் கொள்ளவும்.

பொடியாக நறுக்கிய வெங்காயத்தை கலந்து கொள்ளவும். இந்த வெங்காயமானது வாங்கியவுடன் நன்றாகக் கழுவப்பட்டிருக்க வேண்டும். தோல் நீக்கப்பட்டிருக்க வேண்டும். இதில் உப்பைச் சேர்க்க வேண்டும். எல்லாவற்றையும் நன்றாகக் கலந்து கொள்ளவும்.

தாச்சியில் எண்ணெயை ஊற்றி சூடேறியவுடன் முட்டைக்கலவையை சேர்த்துக் கொள்ளவும். பின்னர் தோசைக்கல்லை அடுப்பில் வைத்து இதனை ஆம்லெட் போல் போட்டுக்கொள்ளவும். இந்த ஆம்லெட் மேல் சோயா சோஸை தடவி செர்ரியைத் தூவி, சர்க்கரையையும் தூவிக்கொள்ளவும்.




# உங்களைப் பாதுகாக்க..!

கணவர் வேலைக்குப் போய்விடுவார். பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடம். பெண்கள் மட்டும் வீட்டில் தனியாக இருப்பார்கள். இப்படித் தனியாக வீட்டில் இருக்கும் பெண்களுக்கு, நாளுக்கு நாள் ஆபத்தும் அதிகரித்துக்கொண்டுபோவதை நாம் காண்கிறோம்.

இது கலிகாலம். யாரையும் நம்ப முடிவதில்லை. எனவே நாம் தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். யாராவது வந்து கதவைத் தட்டினால், சட்டென்று கதவைத் திறந்துவிடாதீர்கள்.



தெரிந்த ஆளாக இருந்தாலும் கதவைத் திறக்காதீர்கள். கடைப்பையன், பால்காரர், கணவனின் நண்பர், மின் கணக்கு எடுக்க வருபவர் யாராக இருந்தாலும் கதவைத் திறக்காதீர்கள். ஜன்னல் வழியே பேசி அனுப்பி விடுங்கள்.

கதவில் சங்கிலியுடன் கூடிய பூட்டுப் பொருத்துங்கள். சங்கிலியை நீக்காமல் கொஞ்சமாகத் திறந்து பேசுங்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும், யாரையும் வீட்டுக்குள் விடாதீர்கள்.

சமையல் செய்யும்போதும், தொலைக்காட்சி பார்க்கும்போதும், துணி துவைக்கும்போதும் கதவு பூட்டியே இருக்கட்டும். சவர்க்காரம் விற்கிற பெண்கள் வந்தால் கூடக் கதவைத்திறக்காதீர்கள். பெண்களிலும் பலர் ஆபத்தானவர்கள் இருக்கிறார்கள்.

எந்த வியாபாரியையும் வீட்டுக்குள் அனுமதிக்கக் கூடாது. வீட்டில் கணவர், பிள்ளைகள் இருக்கும்போது கூட ,வியாபாரிகளை வாசலில் நிறுத்தித்தான் எதுவும் வாங்க வேண்டும்.

காய்கறிக்காரர்போல், தொலைபேசி பழுதுபார்க்கிறவர் போல், வேறு வியாபாரிகள் போல் சிலர் தெருவில் வருவார்கள். எந்த வீட்டில் பெண்கள் தனியாக இருக்கிறார்கள் என்று இவர்கள் நோட்டமிடுவார்கள். நான்கைந்து நாட்கள் பார்த்து உறுதி செய்த பின், உங்கள் வீட்டுக்கதவைத் தட்டுவார்கள். எனவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வீட்டைப்பற்றி வெளியில் பேசாதீர்கள். இது தமிழரசன் வீடு தானே என்று உங்கள் கணவரின் பெயரைச் சொல்லுவார்கள். ஊரிலிருந்து வந்திருக்கிறோம். திருமண அழைப்பிதழ் கொடுக்க வேண்டும் என்பார்கள். ஏமாந்துபோகாதீர்கள். உங்களை எனக்குத் தெரியாது என்று பளிச்சென்று சொல்லிவிடுங்கள்.

உங்கள் கற்பையும், உயிரையும், உங்கள் உடமையையும் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

# பருவ வயதா? பெற்றோரே கவனம்!

பருவ வயது என்பது பல ஆபத்துக்களைக் கொண்டது. எந்தச் செயலையும் நினைத்தவுடன் செய்து முடிக்க நினைக்கும் வயது. அந்த வயதில் உள்ள பிள்ளைகளைப் பெற்றோர் தான் மிகுந்த அவதானத்துடன் கவனிக்க வேண்டும்.



நாமும் இந்த வயதைத் தாண்டித் தான் வந்தோம் என்பது உங்கள் நினைவில் இருக்கட்டும். ஆரம்பம் முதலே அதாவது சிறு குழந்தையாய் இருக்கும்போதிருந்தே தினமும் ஒரு குறிப்பிட்ட நேரம் பிள்ளைகளுடன் செலவழிக்க வேண்டும் என்பதைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது தான் இயல்பாக அவர்களைப்பற்றி உங்களால் புரிந்துகொள்ள முடியும்.

பிள்ளைகளை மற்றவர்கள் முன்னிலையில் எந்தக்காரணம் கொண்டும் மட்டம் தட்டியோ அவமானப்படுத்தியோ பேசாதீர்கள்.

அழகு பற்றி வலிமையான எண்ணங்களை பிள்ளைகளிடம் உருவாக்காதீர்கள்.

குழந்தைகளிடம் நேர்மையாக இருங்கள். பேசுவது ஒன்றும் செயல் வேறாகவும் இருக்கும் பெற்றோர் மீது குழந்தைகளுக்கு மரியாதை ஏற்படுவதில்லை.

பிள்ளைகளின் பாடசாலை ஆசிரியரிடம் எப்போதும் தொடர்புடன் இருங்கள். அவர்களைப்பற்றி ஆசிரியரிடம் அடிக்கடி விசாரியுங்கள். அவர்கள் படிப்பு, விளையாட்டைப் பற்றி மட்டுமன்றி அவர்களது நடவடிக்கைகள் பற்றியும் அறியவேண்டியது அவசியம். உங்கள் பிள்ளைகள் பற்றி ஆசிரியர் ஏதேனும் புகார் சொன்னால் மறுத்துப் பேசாது காது கொடுத்துக் கேளுங்கள்.

குழந்தையிடம் சகிப்புத் தன்மையை வளருங்கள். அவர்களை சந்தேகப்படாதீர்கள். முழுமையாக நம்பியும் விடாதீர்கள்.

குழந்தைகளின் நண்பர்களோடு நட்புகளை உண்டாக்கிக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றிய நல்லது, கெட்டது தெரிய வரும்.

எப்போதும் அவர்களை உற்சாகப்படுத்துங்கள். போட்டி நிறைந்த உலகில் இருக்கிறோம் என்பதைப்புரிய வையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

# வாக்களிக்க தடை போடும் தேசிய அடையாள அட்டை

பிரஜாவுரிமையையும் – அதன் மூலம் கிடைத்த வாக்குரிமையையும் பெற்று விட்டோம் என்ற மதப்பில் இருந்து விட்டால் மட்டும் போதாது. நாம் பெற்ற வாக்குரிமையைப் பயன்படுத்துகிறோமா என்பது தான் முக்கியம்.

சட்ட அந்தஸ்துடன் பெற்ற வாக்குரிமை இருந்தும், உங்களால் வாக்களிக்க முடியாத ஒரு முட்டுக்கட்டை உருவாக்கப்பட்டுள்ளது.

அது தான் தேசிய அடையாள அட்டை. எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களில், இந்த அடையாள அட்டைகள் இல்லாமல் உங்களால் வாக்களிக்க முடியாது.

சாதாரண அடையாள அட்டைதானே! அதை தேவையான போது பெற்றுக் கொள்ளலாம் என்று அசட்டையாக இருந்தவர்களுக்கு, இப்போது அதன் விபரீதம் புரிந்து இருக்கும். வாக்களிக்கும் உரிமை என்பது தனிமனித உரிமை. ஆனால், இந்த அடிப்படை மனித உரிமையையும் த்டுக்கச் சட்டம் உருவாக்கி விட்டனர்.

இனிமேலும் நீங்கள் அசட்டையாக இருந்தீர்களேயானால், உங்கள் தலைவிதியை எவராலும் மாற்றிவிடமுடியாது.

ஏன் தாமதிக்கின்றீர்கள்? கிராமப்புறத்தவர்களைவிட தோட்டத் தொழிலாளர்கள் தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு மிகவும் இலகுவான வழி வகைகள் வகுக்கப்பட்டுள்ளன.

நீங்கள் கிராம சேவகர்களையும், அரசாங்க அதிபர்களையும் தேடி அலைய வேண்டியதில்லை. உங்கள் தோட்டங்களில் இருக்கும் நலன்புரி அதிகாரிகளிடம் விண்ணப்பங்களைப் பெற்று, அவற்றை நிரப்பி தோட்ட அலுவலகங்களிலேயே ஒப்படைக்கலாம். இவ்விடயத்தில் உதவி அரசாங்க அதிபருக்கு உரிய அதிகாரம் தோட்டத் துரைமாருக்கு வழங்கப்பட்டுள்ளது. தோட்டத் துரை அத்தாட்சிப்படுத்தி அனுப்பிய விண்ணப்பங்களுக்கான தேசிய அடையாள அட்டைகள் உங்கள் வீடுகளுக்கே வந்து சேரும்.

நீங்கள் செய்ய வேண்டியது என்ன? முத்திரை அளவிலான மூன்று புகைப்படங்கள், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், இவற்றுடன் தேவையான முத்திரைகள், மேலதிகமாக உங்கள் தகப்பன் அல்லது தாய் அதுவும் இல்லை என்றால் மூத்தசகோதர, சகோதரிகளுள் ஒருவருடைய அடையாள அட்டை தொடர்பான விபரத்தையும் சமர்ப்பித்தால் பெரிதும் உதவியாக இருக்கும்.

உங்களிடம் தேசிய அடையாள அட்டைகள் இல்லாவிட்டால், வாக்காளர் இடாப்பிலும் உங்கள் பெயர்களைப் பதிய மறுக்கின்றனர்.

18 வயதில் வாக்காளர் இடாப்பில் உங்கள் பெயர்களைக் கட்டாயமாகப் பதிந்து கொள்ள வேண்டும். அடையாள அட்டை பெறாமல் இருந்து, 20 வயதைக் கடந்து அடையாள அட்டைகளைப் பெற்றால், ஏன் கடந்த இரண்டு வருடங்களாகப் பதியவில்லை என்று கேள்வி கேட்கின்றனர். விசாரணை வைக்க வேண்டும், அதன் பின்தான் வாக்காளர் இடாப்பில் பதிய முடியும் என்கின்றனர்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், 18 வயதில் அடையாள அட்டை இன்றிப் பதிய முடியாது என்று சொல்லும் கிராம சேவகர், சற்றுக்காலம் தாழ்த்தி அடையாள அட்டையுடன் சென்றால், ஏன் இவ்வளவு நாள் பதியவில்லை, விசாரணை வைக்க வேண்டும். உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு அழைப்போம், அப்போது வாருங்கள் என்று கூறி மறுத்து விடுகின்றார்.

இவ்வளவும் தெரிந்து கொண்டும் ஏன் அசட்டையாக இருக்கின்றீர்கள். மேலும் காலம் கடத்தாமல் உடனடியாக உங்கள் தேசிய அட்டையைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள், இல்லையேல் எதிர்காலம் இருண்டுவிடும்.

உத்தேச, புதிய தேர்தல்கள் திருத்தச்சட்டத்தின்படி ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மாகாணசபைத்தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் என, இவை அனைத்திலுமே தேசிய அடையாள அட்டைகள் இன்றி வாக்களிக்கவே முடியாது.

தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாகச் சாரதி லைசென்ஸ், பாஸ்போட் என்பவற்றைச் சமர்ப்பித்து தம்மை அடையாளம் காட்ட முடியும் என்றும் இந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இங்கே ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். தேசிய அடையாள அட்டை இன்றி சாரதி லைசென்ஸோ, பாஸ்போட்டோ பெற முடியாது. அங்கேயும் தேசிய அடையாள அட்டை தான் அவசியம். எனவே அடையாள அட்டை இன்றி எதையுமே செய்ய முடியாது என்பது தான் உண்மை.

இனியும் தாமதிக்க வேண்டாம். அடையாள அட்டையைப் பெற உடன் புறப்படுங்கள். தேர்தல் திருத்தச் சட்டம் இன்று பிற போடப்பட்டிருக்கலாம். விரைவில் வந்து விடும் என்பது மட்டும் உண்மை.

அடையாள அட்டையின் அவசியத்தை உணர்ந்து செயற்படுங்கள். உங்கள் நண்பர்களுக்கு உதவுங்கள்.

## சொல்லாதே இது இரகசியம்!

பாடசாலை அதிபரிடம் பாடம் படிக்க வந்த மாணவியிடம் பள்ளியறைப் பாடம் படிப்பித்தாராம் தாத்தாவான அந்த அதிபர். அதிர்ச்சி அடைந்த மாணவி அலறித் துடிக்கவே, அயலவர்கள் வந்து மொத்தோ மொத்தென்று மொத்தி விட்டனராம்.

இது எங்கு நடந்தது தெரியுமா? கேகாலை மாவட்டத்தில் உள்ள தமிழ்ப்பாடசாலை ஒன்றிலேயே இந்த கேவலமான விடயம் நடந்ததாம்.

பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்த மாணவி, அதிபரின் மேல் வைத்த மரியாதையால், சிறிதும் அச்சம் இன்றிப் பாடத்தில் ஏற்பட்ட சந்தேகங்களைக் கேட்டுப்படித்தாராம்.

இந்தத் தாத்தாவும் தட்டியும், தடவியும் அன்பாகப் பாடம் படிப்பிப்பாராம். மாணவியும் அதைப் பொருட்படுத்தவில்லையாம்.

அன்று தொடக்கூடாத இடத்தைத் தொட்டும், தட்டக்கூடாத இடத்தை சற்றுப் பலமாகவே தட்டியும் விட்டாராம்.

மாணவியும் வெட்கத்தால் நெளிந்தாராம். ஓகோ, பச்சைக் கொடி காட்டிவிட்டாள் என்ற தைரியத்தில் தாத்தாவான அதிபர் தட்டித்தடவி ஒட்ட ஆரம்பித்து விட்டாராம்.

இதனால் அலறிப்புடைத்த மாணவி சத்தம் போடவே அக்கம், பக்கத்தில் இருந்து ஓடிவந்தவர்கள், அந்த தாத்தா அதிபருக்குப் பாடம் படிப்பித்து விட்டனராம். அன்று ஓடியவர்தான் இன்னும் பாடசாலைக்குத் திரும்பி வரவில்லையாம்.

வயதைக் காட்டிப் பென்ஷன் எடுத்து விட்டதாக இப்போது ஒரு கதை. எப்படி இருக்கு தாத்தாவின் தாகம்.

## டேஸ்ட் கடை தணிகாசலம்

எல்லோரும் பரபரப்பாக அங்கும், இங்கும் அலைமோதிக் கொண்டிருந்தனர். பிள்ளைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோரது கைகளிலும் பிளாஸ்டிக் கேன்கள்.

நற்பணி மன்றத்துக்கு வரும் வழியில் தணிகாசலம் அண்ணனைக் கண்டதும், நாராயணசாமி மரியாதையுடன் ''வணக்கம் அண்ணே'' என்றார்.

''வணக்கம் நாராயணா, என்ன காலையிலேயே லாம்பெண்ணெய் கேனும், கையுமா வாறீங்க?''

''என்னங்க அண்ணே! தோட்டமே கிடுகிடுத்துப் போயிருக்கு, நீங்க பதட்டப்படாமல் இருக்கீங்க?''

''அப்படிப் பதற்றப்பட என்ன இருக்கு, இப்படி அலைமோதுறீங்க.''

''திடீரென்று பெற்றோல் விலையைக் கூட்டினாங்க, இப்ப டீசல் விலையைக் கூட்டிப்புட்டாங்க, நாளைக்கு, லாம்பெண்ணெய் விலையையும் கூட்டிப்புடலாம் இல்லையா? அதுதான், இப்பவே கொஞ்சம் எண்ணெயை வாங்கி வைச்சுப்புடலாம் என்று தான் போறேன்'' என்றார் நாராயணசாமி.

''எத்தனை நாளைக்குத் தான் இப்படி சேர்த்து வைக்கப் போறீங்க? கூடுனா ஒன்று, இரண்டு கிழமைக்கு அப்புறம் புதிய விலை கொடுத்துத்தானே வாங்கனும்?''


''அண்ணன் சொல்லுறதும் சரிதான். நமக்கு ஏதுங்க அதுக்கு மேலே வசதி?''

''நான் வசதியைப் பற்றிச் சொல்ல வரல்ல நாராயணா; எதையும் வரமுந்தி யோசிக்கவேணும் அதைத்தான் சொன்னேன்.''

''எதைப் பற்றீங்க அண்ணே, ஒன்னும் புரியவில்லையே?''

''நாராயணா, இந்த மாகாணசபைத் தேர்தலுக்கு முன் ரணில் ஐயா என்ன சொன்னார். இந்த அரசாங்கம் 'எல்லாப் பொருட்களின் விலையையும் அதிகரிக்கும்.

மாகாண சபையிலும் வெற்றி வந்துவிட்டால் கேஸ், பெற்றோல், டீசல், லாம்பெண்ணெய் எல்லாவற்றின் விலையையும் கூட்டி விடுவாங்கள். எனவே நல்லா யோசிச்சு ஓட்டுப் போடுங்க என்று எச்சரிக்கை விடுத்தார். அதைக் கேட்டோமோ, இல்லையே!''



''என்னங்க அண்ணே, இந்த ஜெயராஜ், அனுரா, மங்கள எல்லோரும் மேடைக்கு மேடை ஏறி வாய் கிழியக் கத்தினாங்களே! ஒரு போதும் எண்ணெயின் விலையை அதிகரிக்க மாட்டோம் என்று சத்தியம் கூட பண்ணினாங்களே! அதை நம்பித்தானே ஓட்டுப் போட்டோம்.''

''இப்ப என்ன சொல்லுறாங்க? மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பே உலக சந்தையில் விலை கூடிவிட்டது. அதனால் அரசாங்கத்தின் சுமைகளில் மக்களும் சிறிது பங்கு போட்டுக் கொள்ளத்தான் வேண்டும் என்கிறார்கள். கதை எப்படி இருக்கு?''

''அது மட்டும் இல்லைங்களே. உள்ளூரில் தேவையான அரிசி இருக்கிறது. யூ.என்.பி புருடா விடுகிறது. நாங்கள் வந்தவுடன் மாவின் விலையைக் குறைப்போம், அரிசி விலையைக் குறைப்போம் என்றும் சொன்னாங்க, இப்ப என்ன ஆச்சு? எல்லாம் தலைகீழாப் போச்சு. சாதாரண அரிசி 40 ரூபாவுக்கு மேலே போச்சு. பால்மா, புள்ளைகள் பால்மா எல்லாம் கூடிப் போச்சு.''

''இப்ப யோசிச்சுப் பிரயோசனம் இல்லை. அப்பவே யோசிச்சு இருக்கனும். பதவிக்கு வருமுன் அப்படிச் சொன்னாங்க, வந்தபின் இப்படிச் சொல்றாங்க. நம்ம சனங்களும் கதை கேட்டு ஏமாந்து போனாங்க.''

''அதுவும் சரிதான் அண்ணே! நாம இப்படி எதையும் தீர்மானிக்க முடியாம தடுமாறிப் போறதுக்கும் ஒரு காரணம் நம்ம தலைவர்மார்தான். அவுங்களுக்கே புத்தி ஒரு நிலையில் இல்லையே.''

''இப்பத்தான் நாராயணா சரியான பொயிண்டுக்கு வந்திருக்க. இந்த மாதிரி ஒவ்வொரு தோட்டத் தொழிலாளர்களும் சிந்திக்க ஆரம்பிச்சிட்டா, நம்ப தலைமைகள் இப்படித் தான் தோன்றித்தனமா அலைய மாட்டாங்க.''

''நூற்றுக்கு நூறு உண்மை. ஆனா அந்த மடம் போனா, சந்தை மடம்னு கரப்பான் மாதிரிக் கலரை மாத்திக்கிறாங்க. கடைசியில நம்ப நன்மைக்காகக் கட்சி தாவுகின்றோம் என்று மழுப்புறாங்க. இனிமே இப்படி ஏமாத்த மாட்டாங்க.

எனக்கு வர்ற கோபத்துக்கு, இந்த லாம்பெண்ணெயை அவுங்க தலையிலேயே ஊத்தி நெருப்பு வைக்கலாம்னு இருக்கு.''

''தலைவர்மாரை நெருப்பு வைச்சுக் கொளுத்திப்புட்டா பிரச்சினை தீராது. இனி மேலாவது கட்சி, சங்கம் அது இது என்று ஆட்டு மந்தைகள் மாதிரி இருக்காம, சமூக அடிப்படையில், வர்க்க அடிப்படையில் எல்லாரும் ஒன்றுபட்டுப் புரட்சிகரமான ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும்.''

''இப்ப தாங்க அண்ணே, இந்த மர மண்டைக்குப் புரியுது. இன்று முதல் அதுதான் எனது வேலை. தோட்டம், தோட்டமாப் போயி, எல்லா இளைஞர்களையும் ஒன்று திரட்டி ஒரு புது யுகத்தை ஆரம்பிக்கப் போறன்.''

''சபாஷ் நாராயணா, சாது மிரண்டால் காடு கொள்ளாது, உடனே புறப்படு. தூங்கிக் கிடக்கும் மலையகத்தைத் தட்டி எழுப்பு. இளைஞர்களை ஒன்று திரட்டி புதிய சமுதாயம் படைப்போம். என்னால் ஆன எல்லா உதவிகளையும் செய்யத் தயார்.'' என நாராயணனை உற்சாகப்படுத்தினார் தணி அண்ணன்.

''ஆமாம் அண்ணே, இந்த லாம்பெண்ணெயில் பழைய சிந்தனைகளை எல்லாம் போட்டு எரிப்போம், நன்றீங்க அண்ணன்''. என்று கூறிக் கம்பீரமாக நடைபோட்டுச் செல்கிறார் நாராயணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு யுத்தம் தீர்ந்தது!

வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும் சுவைமிக்க விட்டமின் பானம்

**Hungry Plus**




வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.

## ஹங்ரி பிளஸ்

பசியைத் தூண்டும்...

இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.

Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011- 2470290







## யாழ். செல்லும் மக்களுக்கு ஓர் நற்செய்தி



யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள EL-V-ES-INN இல் நவீன வசதிகள் அடங்கிய குளிரூட்டப்பட்ட அறைகளுடன் கூடிய தங்குமிட வசதிகள், சகல வகையான உணவுகள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.



முன்பதிவுகளுக்கு தொடர்பு கொள்ளவும்

EL - V - ES - INN
464, Main Street, Jaffna. (opp. of St. John's College)
Tel.: 021 222 7779. Fax: 021 222 3880
Allso Contact at. CITY MEDICALS
Jaffna. Tel.: 021 222 2198. Fax: 021 222 3880
COLOMBO
Tel.: (011) 2 438925. Fax: (011) 2 433867. Cel.: 0777 780359.
E-mail: citymed@sltnet.lk

Comfortable A/C, Non A/C Rooms — Quality & Tasty Food — Take Away — Comfortable A/C Dining Rooms



# Hotel Swarkka & Restaurant

#33, Soosaipillaiyarkulam Road, Vavuniya. Tel: 0242221291 Mobile: 0777563991 E.mail:hotelswarkka@hotmail.com


# PROFESSIONAL COMPUTER COURSES

- DIPLOMA IN MULTI MEDIA (With Video Mixing)
- DIPLOMA IN DESKTOP PUBLISHING
- DIPLOMA IN HARDWARE (Online)
- DIPLOMA IN COMPUTER PROGRAMMING
- DIPLOMA IN INTERNET TECHNOLOGY
- DIPLOMA IN AUTOCAD ( With New South Wales University Syllabus And Guide Books)

அனைத்து மாணவர்களுக்கும்
FREE HANDOUTS
FOPPY DISKETTE
SOFTWARE CD & FREE COMPUTER CONSULTING
இவை அனைத்தையும் ஒன்றாகப் பெற்றிட நாங்கள் உதவுகின்றோம்

**eTouch COMPUTER SYSTEM**
The right way to touch IT
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA
T.P :- 021 4 590222

வெதுப்பகத் துறையில் புதிய புரட்சியை ஏற்படுத்திய ஷெரி இடமிருந்து புதிய உபகரணங்கள் இப்போது மலிவு விலைகளில்...




- பல வடிவங்களிலும், பல அளவுகளிலும்கிடைக்கும்.
- ஒரு வருட நிலையான உத்தரவாதம்.
- போக்குவரத்து இலவசம்.
- பேக்கரி தொழிலுக்குத் தேவையான வேறுபல உபகரணங்களான தட்டு, ட்ரொலி,வெள்ளியிலான மேசை, ஸ்பஞ்ச் தட்டுகள் போன்றவையும் உண்டு.

இறக்குமதி செய்து விநியோகிப்போர்

**ஷெரி பேக்கரி இக்ரூப்மன்ட் சப்லயர்ஸ் (பிரைவட்) லிமிட்ட்**

SHERRY

பிரதான காரியாலயம்: இல. 735/அ, கொழும்பு வீதி, தலங்கம வடக்கு, மாலபே. தொ.பே.: 011 55165567 0112789933, 0112789752 பெக்ஸ்: 0114407443 ஈமெயில்: sherry@wow.lk

கிளை காட்சியறை: இல. 93, கொழும்பு வீதி, பொக்குவோர, குருநாகல். தொ.பே.: 037 2237755. பெக்ஸ்: 037 2237744.


இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஆகஸ்ட் 23 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org